

கல்கி
றப்புக் கட்டுரை
ம் பக்கம் பார்க்க
KALKI 28.8.1966 35 காசு
இலங்கையில் 35 சதம் தபால் செலவு தனி

நினைவுத் திரையில்


பாரதத்தில் காணப்படும் யுத்த வர்ணனையை இந்தக் காலத்து யுத்த முயற்சியோடு ஒப்பிட்டு, இது வெறும் கற்பனைக் கதை, சாரமில்லை என்று தள்ளிவிடக் கூடாது. நூற்றைம்பது வருஷங்கள்தான் ஆயிற்று. ஆங்கில வீரன் நெல்ஸன் நடத்திய கப்பற் சண்டை நடந்து. அவனுடைய கப்பல்களையும் ஆயுதங்களையும் இப்போது கையாளப்படும் யுத்தக் கப்பற் படைகளையும் ஆயுதங்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் விநோதமாகத்தான் தோன்றும். நூற்றைம்பது வருஷத்திய நிலைமையை விடப் பன்மடங்கு புராதனமானது பாரதப் போர்.

— வியாசர் விருந்து-ராஜாஜி
கல்கி ஆகஸ்டு 19, 1945



கல்கி பொருளடக்கம்

பராபவ, ஆவணி 12 ○ ஆகஸ்டு 28


லெனின் பாணி!
ருஷியா போகுமுன்!
ருஷியா போனபின்!!
சத்தம் போடாதே,
சீனா-பாகிஸ்தான்
ஓநாய்கள் எந்த நிமிஷமும்
உள்ளே வரக்கூடும்"
வறுமை
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 26 ● இதழ் 4



தேர்தலும் யுத்த அபாயமும்

சீனு, பாகிஸ்தான் இவற்றிடமிருந்து நாட்டுக்கு அபாயம் பெருகி வருகிறது என்று பாதுகாப்பு மந்திரி திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்.

இதன் மற்ற விளைவுகள் எப்படியாயினும், போர் என்கிற ஆபத்து இருக்குமாயின் காங்கிரஸைத்தான் மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று மக்கள் மயங்கிவிட மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

போர் ஏற்பட்டால் அதை முக்கியமாக நடத்துகிறவர்கள் நமது ராணுவத்தினரே; காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அல்ல. அவசியம் ஏற்படுகிறபோது நம் ஜவான்கள் அற்புதமாகத் தங்கள் கடமையைச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸின் ஊழல் ஆட்சியாலும் கூட அவர்கள் பாதிக்கப்படாமல் பொற்பணி செய்து காட்டியுள்ளனர். 1962ல் சீனு முதலில் படையெடுத்தபோது அவ்வளவு சிறப்பாகப் பணிபுரிய இயலாதிருந்த நமது ராணுவம், அதிலிருந்தே ஒரு படிப்பினை பெற்று, பின்னர் தனது திறமையால் அனைவரது பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. ஆனால் ஆள்கிற அரசியல்வாதிகள் எவ்விதப் படிப்பினையும் பெறாமல், தங்கள் அஜாக்கிரதை வழியிலேயே சென்று வருகின்றனர். நடக்கவிருக்கும் பொதுத் தேர்தல் ஜவான்களை மையமாக வைத்தல்ல. அவர்கள் எந்த ஆட்சி வந்தாலும் தங்கள் கடமையைச் செவ்வனே செய்வார்கள். தகுதிபெற்ற அரசியல்வாதிகள் யார் என்பதை மையமாகக் கொண்டதே பொதுத் தேர்தல்.

பிரதமர் இந்திரா அவர்கள் நல்லவர். எனினும் சீனு — பாகிஸ்தான் படையெடுப்புக்களே இந்தியாவின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்று கூறியிருக்கிறார். அரசாங்கக் காரியதரிசி எழுதித் தந்த விளக்கத்தை அடியோடு நம்பி இவ்வாறு பேசியிருப்பாரோ என்று எண்ணத்தோன்றுகிறது. காங்கிரஸின் வீணான டாம்பீகத் திட்டங்களை நன்கு கண்டுள்ள மக்கள் இந்தச் 'சமாதான'த்தை ஏற்பார்கள் என்று அவர் நினைத்தால் அவரை அப்பாவி என்றே சொல்ல வேண்டும். இம்மாதிரிக் காரணங்களைக் காட்டுவது நேரு குடும்பத்தின் புகழுக்கு ஒவ்வாது. தவற்றை மனம் விட்டுச் சொல்லிக் கொண்டு, இனிப் பகுத்தறிவுடன் செயலாற்றும் வாய்ப்பு பிரதமருக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை அவர் பயன்படுத்திக் கொள்ளும் விதத்திலே அவருக்கு அரசாங்க அதிகாரிகள் தைரியமாக உதவி புரிய வேண்டும்.

கொள்கையை மாற்றிக் கொள்வதற்குரிய தீரத்தை இழந்துவிட்ட காங்கிரஸிடம் பிரதமரும் கட்டுப்பட்டிருக்கிறார். பெரிய திட்டத்தால் பெரிய அளவு வரிகள், பெரிய அளவு கடன், பெரிய அளவு பண வீக்கம், பெரிய அளவு ஏமாற்றம் இவ்வளவும் உண்டாகும் என்பதைப் பிரதமர் உணர்ந்து, தைரியமாகப் பழைய கொள்கைகளை விட்டாராயின், மக்கள் அவருக்கு நிச்சயம் ஆதரவு தருவார்கள். பிரதமரின் உள்ளம் சரியான நிலையிலிருந்தபோதிலும், கட்சியின் பிடிவாதக் கொள்கை அவரைக் கட்டுப்படுத்தியிருப்பதால் அவரால் நல்ல திசைக்குத் திரும்ப முடியவில்லை.

மொத்தத்தில் பழைய படையெடுப்புக்களைக் காட்டி நாட்டின் இன்னல்களுக்குச் சமாதானம் சொல்வதும் சரியல்ல; புதிய படையெடுப்புக்கள் நிகழும் என்று திரும்பத் திரும்பச் சொல்லி அதற்காக இதே கட்சியை ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் சரியல்ல.

இப்போது செய்ய வேண்டியது, விஷம்போல் ஏறிவரும் விலைவாசிகளைக் குறைப்பதுதான். இதற்கு வரிகளைக் குறைத்தாக வேண்டும். சர்க்காரின் திட்டங்களுக்காகக் கோடானு கோடி ரூபாய்களை விரயமாகச் செலவழிப்பதால் பண வீக்கம் பெருகி விலை

வாசிகள் உயருகின்றன. எனவே திட்டங்களை வெட்ட வேண்டும். இந்த அம்சத்தில் ஆட்சியாளரின் பிடிவாதம் குறையவே இல்லை. ''கடினமான கற்பாறை மீது நாம் பயணம் செய்ய வேண்டும்'' என்று மத்திய நிதி மந்திரி அவர்கள் கூறினாலும், 24,000 கோடி ரூபாய்த் திட்டம் என்கிற மகத்தான சுமையைத் தூக்கிக் கொண்டு இந்தப் பாறை மீது செல்வது இயலாத காரியம் என்ற உணர்ச்சி அரசாங்கத்துக்கு ஏற்படவில்லை. இந்தப்பாறுங்கல் பாதையில் பண வீக்கம் என்னும் காற்றடித்துச் செலுத்தப்படுகிற டயர் வெடித்துத்தான் போகும். வேகத்தைக் குறைத்துக் கொண்டாலொழிய விமோசனமில்லை. காங்கிரஸின் தேர்தல் சின்னத்தில் உள்ள இரு காளைகளை இப்போது சர்க்கார் கொள்கைகளுடன் பிணைத்து, நம் பண்புக்குரியபடி பொருளாதாரத்தை நிதானமாக, சீராக இயக்க வேண்டும். இதைக் காங்கிரஸ் ஒரு நாளும் செய்யாது. அப்படியானால் அது சட்ட சபையில் எதிர்க் கட்சியாகத்தான் உட்கார வேண்டும். தன்னுடைய பழைய பெருமையை மட்டும் சொல்லித் திருப்திப் பட்டுக்கொண்டு, பாரத தேசத்தின் புதிய எதிர்காலப் பெருமையை ஒரு புதிய சர்க்கார் உருவாக்குவதற்கு இடமளிக்க வேண்டும். புதிய மந்திரி சபை வந்தாலும் மக்கள் கட்டுக் கோப்பாகவே இருந்து அது விவேகமுடன் பணியாற்ற உதவி புரிவார்கள். ஆட்சித் திறன் படைத்தவர்களுக்கு நம் நாட்டில் பஞ்சமேற்பட்டுவிடவில்லை. இப்போதே காங்கிரஸார் ராஜிநாமாச் செய்தாலும்கூடத் தேசத்தைச் செவ்வையாக நிர்வகிக்கக் கூடிய ஐம்பதுக்கு மேற்பட்ட திறமைசாலிகள்—நன்னடத்தையுள்ளவர்கள்—இருக்கிறார்கள். காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வராவிடில் யுத்த ஆபத்து வரும் என்றோ, நிர்வாகத் திறன் குன்றும் என்றோ மக்கள் ஐயப்பட அணுவளவும் இடமில்லை.

என்ன சேதி?

பெர்மிட் ஆட்சியின் விளைவு

நிபுணர் எச்சரிக்கிறார்!

என்னே, யோசனை!

அரசாங்கம் கம்பெனிகளைக் கருப்புப் பட்டியலில் (Black List) போடுவதற்கு முன் சம்பந்தப்பட்ட நபர்களை விசாரிப்பதில்லை. பிற்பாடு இப்படிப்பட்ட ஒரு கம்பெனியைக் கருப்புப் பட்டியலிலிருந்து நீக்குவதற்குச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அது தவறு என்று குற்றம் சாட்டுவதில் பொருளில்லை; -சம்பந்தப்பட்ட மந்திரியின் மீது லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டாலொழிய. நம்முடைய பெர்மிட் — லைசென்ஸ் — ராஜ்யத்தின் கீழ் தொழில் புரியும் ஒரு கம்பெனியைப் பற்றிய முடிவைச் சர்க்கார் மாற்றுவது சகஜமாகும். பெர்மிட் — லைசென்ஸ் பொருளாதாரத்தின் விளைவாக அதிகாரிகளும் மந்திரிகளும் இவ்வாறு செய்வதும் அதற்காகத் தாக்கப்படுவதும் தவிர்க்க முடியாதவை.

தற்போது ஒரு கம்பெனியைக் கருப்புப் பட்டியலிலிருந்து நீக்கியது பற்றிய விவாதங்களில், அட்டர்னி — ஜெனரலின் கருத்தின்படி லஞ்சத்தினால் ஏதும் நடக்கவில்லை என்று தெளிவானபின் சர்ச்சைக்கு இடமில்லை. லஞ்சம் வாங்குவது குற்றம் எனில், அதேபோல் கட்சிகளுக்குள் கோஷ்டிகள் சேர்த்துக் கொண்டு ஒருவரைப் பயமுறுத்துவதும் குற்றம்தான். ஒரு முடிவுக்குச் சர்க்கார் முழுவதையும் பொறுப்பாக்குவதற்குப் பதில், குறிப்பிட்ட ஒரு கோஷ்டியின் கருத்துக்கு அடிபணியும் பலவீனத்திலேயே இது முடியும்.

டாக்டர் லோகநாதன் அவர்களுடைய ஒரு முக்கியமான எச்சரிக்கை வருமாறு:

மூன்றாவது திட்ட காலத்தில், 100 ரூபாய் வருமானத்துக்கு 12 ரூபாய் வீதம் சேமிக்கப்படும் என்று இலக்கு விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இரண்டாம் திட்டகாலத்தில் 10 சதவிகிதமாக இருந்த சேமிப்பு இப்போது 8 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது.

நான்காவது திட்ட காலத்தில் 15 அல்லது 16 சத விகித வருமானம் சேமிக்கப்படும் என்று அநுமானித்து, அந்தத் திட்டத்தின் அளவை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது போகும் நிலையைப் பார்த்தால், உடனடியாக அவசிய நடவடிக்கைகளை எடுக்காவிடில் நான்காம் திட்டத்துக்கு எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு முதலீடு கிடைக்காது என்றே தோன்றுகிறது.

மக்கள் தொகையைக் குறைப்பது இந்தியாவின் உணவுப் பிரச்னையைத் தீர்க்க முதல் உபாயம் என்று கண்டுபிடித்தார்கள். அடுத்த படியாக எலி மாமிசத்தைத் தின்று பிரச்னையைத் தீர்க்கலாம் என்ற யோசனை வந்திருக்கிறது. இந்தக் கொடூரமான தமாஷுக்கு யார் காரணபுருஷர் என்று தெரியவில்லை.

எலி மட்டுமென்ன, காக்கை, நாய் எல்லாவற்றிடமுமே மாமிசமும் — வைட்டமின்களும் கூட—இருக்கத்தான் செய்கின்றன. எந்த உயிரினத்திடம்தான் இவை இல்லை? எலி மாமிசத்தையும், மற்ற மாமிசங்களையும் எப்படி உணவாக்குவது என்பது குறித்து ஆராய்ச்சி செய்து ஓர் அற்புதமான அத்தியாயத்தை நான்காம் திட்டத்தின் இறுதியில் சேர்த்தால் நேருஜி கண்ட மகத்தான சுபிட்சக் கனவுக்கு அது ஓர் உச்ச கட்டமாக இருக்கும்.



ராஜாஜியின் கருத்துக்கள்

'வியட்நாமில் அமெரிக்கா செய்து வரும் மிருகத்தனத்தை ஆதரித்து எழுதுகிறீர்களே' என்று ஆச்சரியம் தெரிவித்து எனக்குப் பலர் எழுதுகிறார்கள். ஒரே தரப்பின் சார்பில் செய்யப்படும் பிரசாரத்தைக் கேட்டவர்களும், கம்யூனிஸச் சார்புள்ளவர்களும் நான் அமெரிக்காவை ஆதரிப்பது குறித்து ஆச்சரியப்படுவது இயற்கை. வெளியிலுள்ள தோழர்களிடமிருந்து ராணுவ உதவி பெற்றுள்ள கம்யூனிஸ்டுகள் தெற்குவியட்நாம் குடிமக்கள் மீது எத்தகைய மிருகத்தனமான தாக்குதல்கள் செய்கின்றனர் என்பதை நம் மக்களுக்கு எடுத்துச் சொல்ல யாருமில்லை. இதுதான் அமெரிக்கா இவ்விவகாரத்தில் பிரவேசித்ததற்குக் காரணம். இருபதாண்டுகளுக்குமுன் தெலிங்கானாவில் ஆந்திர கம்யூனிஸ்ட்களில் தீவிரவாதிகள் செய்த கொடுமைகள் நினைவிருக்கலாம். வியட்நாமில் நடப்பது இதைவிடப் பல மடங்கு கொடுமையானது. ஜனநாயக முறைப்படி வாழ விரும்பும் எந்த நாடும் நாச வேலைக்காரர்களுடன் விட்டுக் கொடுத்துச் சமரஸம் செய்து கொள்வதற்கில்லை. வியட்நாமிலிருந்து தனக்கு எதுவும் வேண்டும் என்று அமெரிக்கா விரும்பவில்லை. அமெரிக்காவின் நடவடிக்கையில் பல தவறுகள் இருக்கலாம். எனினும், ஆசியாவில் ஜனநாயகத்தைக் காப்பது தனது தார்மிகக் கடமை எனக் கருதி அதற்காகவே அமெரிக்கா முயலுகிறது. இதற்காக அபாயகரமான நடவடிக்கைகளையும் அமெரிக்கா மேற்கொள்கிறது. இதனாலேயே மேலும் பாராட்டுக்குரியதாகிறது. இடர்ப்பாடுகளின் இடையே செயலாற்றுவதே பெருமை. சந்தேகமின்றி ஒரு நாள் வியட்நாமில் சமாதானம் ஏற்படத்தான் போகிறது; தென் வியட்நாமின் ஜனநாயக உரிமையைக் காப்பாற்றும் முறையிலேயே இந்தச் சமாதானம் ஏற்படப் போகிறது. அதற்காகத் தியாகம் செய்தும், தைரியமாக ஆபத்தை மேற்கொண்டும் செயலாற்றிய அமெரிக்கா நன்றிக்குரியதாக விளங்கும். விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் ஜான்ஸன் அவர்களைப் பின்னிருந்து தாக்குபவர்களுக்கு அப்போது நன்றி பெற உரிமையில்லை. வியட்நாம் விஷயமாக அமெரிக்கா எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்க வேண்டிய நாடுகளில் ஒன்று இந்தியா. சமாதானம் வேண்டும் என்பவர்கள் வெறும் சூனியப் பிரதேசத்தில் சமாதான முயற்சி நடைபெறுவதற்கில்லை என்பதையும், பலாத்காரத்துக்கும் பொய் வேஷத்துக்கும் அபாயங்களுக்குமிடையே தான் சமாதானத்தைத் தேடியாக வேண்டும் என்பதையும் உணர வேண்டும். அணைக்கட்டில் ரிப்பேர் செய்பவர்களுக்கு அநுகூலமாக இருக்க வேண்டும் என்பதற்காக வெள்ளம் வற்றுது. பெரிய வெள்ளத்தின் போதே அணையை ரிப்பேர் செய்கிற காரியம்தான் தெற்கு வியட்நாமில் நடக்கிறது. 'சமாதானம், சமாதானம்' என்பவர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தாங்கள் ஊக்கம் அளித்து விடக்கூடாது என்பதை மறக்கலாகாது.

★

அணு விஞ்ஞானத்தைப் பற்றிய ஒரு தமிழ்ப் புத்தகத்தை நான் சமீபத்தில் படித்தேன். ஆங்கிலத்திலிருந்து நுட்பமான ஸயன்ஸ் நூல்களை இந்திய மொழிகளில் பெயர்க்கும் போது, மொழிபெயர்ப்பாளர் குறிப்பிட்ட இந்திய மொழியில் தேர்ந்த ஞானம் பெற்றிருந்தால் மட்டும் போதாது என்ற என் கருத்து இந்தப் புத்தகத்தைப் படித்த பின் உறுதிப்பட்டது. நூலின் விஞ்ஞான விஷயத்தில் அவருக்கு நல்ல ஞானமிருப்பதே அவசியமாகும். இந்திய மொழியில் சுமாரான ஞானம் இருப்பினும் போதும். **விஷயத்தை** நன்கு அறிந்தவரைக் கொண்டு இந்திய மொழியில் பெயர்த்துவிட்டு, அதன் பின் இந்திய **மொழியை** நன்கு அறிந்த நிபுணர்கள் அதனைப் பரிசீலிக்க வேண்டும். விஞ்ஞான அறிவில் தேர்ச்சி பெறாத பண்டிதர்களைக் கொண்டு மொழிபெயர்த்த நூல்களை ஆங்கில நூல்களுக்குப் பதில் வைத்துக் கொள்வது பொருந்தாது.

★

பிறந்த உடனே குழந்தைகளுக்கு பி.ஸி.ஜி. ஊசி குத்த வேண்டும் என்ற பேச்சுக் கிளம்பியிருக்கிறது. இந்தச் சர்ச்சையில் மீண்டும் என்னுடைய நேரத்தைச் செலவிட நான் விரும்பவில்லை. எனினும் பி. ஸி. ஜி. மருந்து உயிருள்ள விஷப் பொருளைக் கொண்டபடியால், கடந்த பல ஆண்டுகளில் அந்த விஷம் மாறியிருக்கக் கூடும் என்பதை அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இவ்வாறே பெரிய டாக்டர்களும் கருதுகிறார்கள். 'பி.ஸி.ஜி. க்ஷய நோயைத் தடுக்கும்' என்பது வெறும் பித்தலாட்டம். இதற்கு நம்முடைய குழந்தைகளை ஆளாக்குவது தருமமா? பி. ஸி. ஜி. ஊசி போட்ட பின் ஊசி குத்தப்பட்டோரைத் தொடர்ந்து பராமரிக்காவிடில் அது மோசடி வைத்தியமேயாகும். நிர்ப்பந்தத்தின் மூலமும் லஞ்சம் தருவதன் மூலமும் குழந்தைகளுக்கு ஊசி குத்துவார்கள். பணத்தைக் கொண்டு ஏழைகளை இந்த நாட்டில் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்.

உபநிஷத்தின் உபதேசச் சுருக்கம்

(சம்சாரிகளுக்கு)

இந்த உலகத்தில் உள்ள அனைத்தும் பகவான் ஆதீனம். அவனால் நமக்குத் தரப்பட்ட பொருளை அனுபவித்துத் திருப்தி அடைவோமாக. மற்றவனுடைய பொருளைக் கண்டு அதற்கு ஆசைப்படலாகாது. சக்திக்குத் தகுந்தவாறு செயலாற்றி நூறு ஆண்டுகள் வாழ்வோமாக. உடலைக் கொண்டு வேலை செய்யாமல் பிழைக்கமுடியாது. செய்ய வேண்டிய செயல்களைச் செய்வதில் பாவம் இல்லை. அவற்றின் பயனில் பற்று வைக்காமல் செய்ய வேண்டியதைச் செய்தோமானால் ஆன்மா செயல்களினால் துன்பம் அடையாது. வாழ்க்கையில் என்ன பயன், இது வேண்டாம் என்று உயிரை மாய்த்துக் கொள்வது பெரும் பிழையாகும். ஆன்மா இல்லை, உடல் ஒன்றே உண்மை என்று எண்ணுவது ஆன்மாவைக் கொலை செய்வதாகும். அது மனிதனைக் கீழே தள்ளும். இந்த உலகமே இருள் சூழ்ந்த நரகமாகும். வேறு நரகம் வேண்டியதில்லை. ஆன்ம வெளிச்சத்தை அடைந்து எல்லா ஜீவன்களையும் தன் உயிரைப் போலவே கருதி வாழ்க்கை நடத்தினால் சுகமடைவோம். விரோதமும் வெறுப்பும் இல்லாத வாழ்க்கை சுக வாழ்க்கையாகும். பிற உயிரைத் தன் உயிராகவே காண்பவனுக்குச் சோகமும் இல்லை, மோகமும் இல்லை. ஜீவன் முக்தன் ஆவான். இந்த உடல் சாம்பலும் புகையுமாக முடியும். நிற்பது உடலைக் கொண்டு நாம் செய்து முடிக்கும் காரியங்களே. இந்த உண்மையை நன்றாக உணர்ந்து, செய்யும் காரியங்கள் அனைத்தும் நற்கரும வினைகளாகுக. பகவான் நம் குறைகளையும் பிழைகளையும் பொறுத்து நம்மைக் காத்து நல்வழியில் நடத்துவானாக என்று அவனைப் பூஜிப்போமாக.

- சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



சம்சாரிகளுக்கு மட்டும் ஏன்?

எதிர்ப்புறம் பிரசுரமாகியுள்ள ராஜாஜியின் கட்டுரை 'கல்கி' வெள்ளி விழா மலரில் வெளியானது. இதனைப் படித்து ரசித்து மகிழ்ந்த சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் எழுதுகிறார்:

''உபநிஷத்தின் உபதேசச் சுருக்கம் — சம்சாரிகளுக்கு'' எனும் தலைப்பில் ஸ்ரீ ராஜாஜி எழுதியிருப்பது ஈசாவாஸ்ய உபநிஷத்தின் ஸாரமேயாகும். சம்சாரிகளுக்கு மட்டுமல்ல இந்த உபதேசம். யோகிகளுக்கும் இது மிகுந்த பயனை அளிக்கும். அதாவது சரம சரீரத்தை (கடைசி ஜன்மத்தை) அடைந்தவர்களுக்குக்கூட இந்த உபதேசம் பரமானந்தத்தை அளிக்கும்.

பூரண சுகத்தை அடைவதற்கு உபநிஷத்துகள் வழிகூறியுள்ளன. இந்த உபநிஷத்தின் உள் கருத்தை சம்ஸ்கிருத பாஷையைப் படிப்பதனால் மட்டிலும் உணர முடியாது. அனுபவம் வாய்ந்த பெரியோர்களின் உபதேசம் மூலம்தான் அறிய முடியும்.

அவர்கள் கூறுவது ஜனன மரண ரூபமான ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்கும் யோகிகளுக்கும் நற்பயனை அளிக்கும். பல உபநிஷத்துகள் இருந்தபோதிலும் ஈசாவாஸ்யம் என்னும் உபநிஷத்து உலக விவகாரத்தில் ஈடுபட்டவர்களுக்கும் யோகிகளுக்கும் மனச் சாந்தியை அளிக்கும் சாஸ்திரமாகும்.


இந்த உபநிஷத்தின் உட்கருத்தை எளிய நடையில் கூற வேண்டுமானால் ஒரு ஜீவன் முக்தரால்தான் முடியும். ஸ்ரீ ராஜாஜியின் புத்தியானது எல்லா மஹரிஷிகளின் புத்திகளும் ஒன்று சேர்ந்து அமைக்கப்பட்டதாகும்.

ஒவ்வொரு மனிதனும் இந்த உலகம் அனைத்தும் ஸ்ரீ பகவானின் கருணையால் அமைக்கப்பட்டதென்றும் அவன் கொடுத்ததைத்தான் நாம் அனுபவிக்கிறோம் என்றும் நினைத்து வரவேண்டும். என்ற கருத்தைத் தான் ஈசாவாஸ்யம் கூறுகின்றது. மேலும் நற்கருமங்களைச் சோம்பல் இல்லாமல் நூறு வருஷ காலம் செய்து கொண்டு ஜீவித்திருக்க வேண்டும் என்றும், கடைசி மந்திரத்தில் ஸ்ரீ பகவானைப் பார்த்து ''நல் வழியில் என்னை அழைத்துச் செல்ல வேண்டும்'' என்றும் வேண்டப்பட்டிருக்கிறது. ஈசாவாஸ்ய உபநிஷத மந்திரத்தின் முடிவில் ''எனக்கு இடையூறாக உள்ள பாபங்களைப் போக்க வேண்டும்; எனக்குச் சத்ருவாக உள்ளது பாபமே. அந்தப் பாபத்தைப் போக்க வேண்டும்'' என்றும், ''அதற்காக நமஸ்காரம் செய்கிறேன்'' என்றும் பகவானிடம் கூறப்பட்டிருக்கிறது. ''நம **உக்திம் விதேம**'' என்பதை வாக்கினால் கூறும்பொழுதே ஸ்ரீ பகவானை நேரில் பார்த்தது போல் தோன்றுகிறது. இந்த மந்திரத்தை ஸ்ரீ ராஜாஜி அவர்கள் எழுதியது உலகத்திலுள்ள மக்களின் பாக்கியமேயாகும்.


ஈசாவாஸ்ய உபநிஷத்தின் உட்கருத்தை எளிய நடையில் உபதேசித்த ஸ்ரீ ராஜாஜியை ஜீவன்முக்தர் என்றும், மஹரிஷிகளுடைய சக்தி யாவற்றையும் பெற்றவர் என்றும் யாவரும் அங்கீகரித்துத்தான் ஆகவேண்டும். இந்த உபநிஷத்தில் ''தீரர்கள்'' என்று புத்திமான்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தீரர் ஸ்ரீ ராஜாஜியாவார்.

இன்னும் இதுபோன்ற பல உத்தமமான நூல்களின் சாரங்களை ஸ்ரீ ராஜாஜி அவர்கள் கல்கி பத்திரிகை வாயிலாக வெளியிடும்படி ஸ்ரீ பகவான் அருள்புரிய வேண்டுகிறேன்.

- சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்



நாள்தோறும் உங்கள் இல்லத்தை நீங்கள் ஒழுங்காக வைத்துக்கொள்ள விரும்புகிறீர்கள்...



ஆனல் உங்கள் பணவிஷயம்?

பணப் பிரச்னே முன் நிற்கும் போது நீங்கள் உங்கள் இல்லத்தை எப்படி ஒழுங்காகவும் இன்பம் கொழிக்கும் வகையிலும் வைத்துக்கொள்ள இயலும்? உங்கள் பொருளாதாரப் பிரச்னே குறித்துக் கலந்து பேச உங்களுக்கு அருகாமையிலுள்ள பாங்க் ஆப் பரோடாவின் கிளைக்கு விஜயம் செய்யுங்கள். உங்களுக்குப் பல வழிகளில் எங்களால் உதவமுடியும். உதாரணமாக, எங்கள் பாங்கில் ஒரு சேமிப்புக் கணக்கு ஆரம்பியுங்கள். நாங்கள் 4% கணிசமான வட்டி தருகிறோம். முன்னறிவிப்பு இன்றியே வருடமொன்றுக்கு 150 தடவை வரை நீங்கள் பணம் எடுக்கலாம். உங்கள் உபயோகத்திற்கென செக் புத்தகமும் கிடைக்கும். எங்கள் பாங்கின் மூலம் பணம் சேமிப்பது சுலபம் என்பதை மறவாதீர். ஒரே ஒரு ரூபாயைக் கொண்டே சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கலாம் நீங்கள்.

செக் அல்லது பாஸ் புத்தகத்தை விட மிக முக்கியமானது நாங்கள் உங்களுக்கு துவக்கக் காலம் தொட்டே வழங்கும் விரைவான, திறமைமிக்க சேவையாகும்.

'உங்கள் சேவை எங்கள் கடமை' என்ற இலவச புத்தகத்திற்கு எழுதவும். இதில் நாங்கள் வழங்கும் சேவை அனைத்தும் விவரமாகத் தரப்பட்டுள்ளது.

தி பாங்க் ஆப் பரோடா லிமிடெட்

(நிறுவனம் 1908) பதிவுபெற்ற அலுவலகம்: மாண்ட்வி, பரோடா.

இந்தியா முழுவதும் 240 கிளைகளுக்கு மேல் உள்ளன. லண்டன், கிழக்கு ஆப்பிரிக்கா, கிழக்கு பாகிஸ்தான், பிஜி தீவுகள், மொரிஷியஸ் மற்றும் கயானா ஆகிய இடங்களிலும் கிளைகள் உள்ளன.

CMBB-138 TM

[பிரபல பிர்லா சகோதரர்களில் ஒருவரான திரு ராமேசுவரதாஸ பிர்லா 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் சமீபத்தில் எழுதிய கட்டுரையைப் படித்து வியப்பும் சந்தோஷமும் அடைந்தோம். அவரது கட்டுரையைத் தமிழாக்கி நேயர்களுக்கு, முக்கியமாகத் தமிழக வியாபாரம் மற்றும் தொழில் துறையிலுள்ள நண்பர்களுக்கு வழங்குகிறோம். கட்டுரை ஆசிரியர் ஸ்ரீ ராமேசுவரதாஸ் பிர்லா அவர்களின் படத்தை இவ்விதழ் மேலட்டையில் பெருமிதத்துடன் பிரசுரிக்கிறோம். — ஆசிரியர்]

எந்தத் திட்டம் நல்ல திட்டம்?

ராமேசுவரதாஸ் பிர்லா

நம் நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் சீர்கெட்டுக் கிடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அரசாங்க உத்தியோகஸ்தர்களும், பொருளியல் நிபுணர்களும், தொழில்துறைப் பெருமக்களும், சாதாரண மனிதர்களும் எல்லோருமே இதை ஒப்புக் கொள்ளுகின்றனர். ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதற்குப் பலர் பல்வேறு காரணங்களைச் சொல்லுகிறார்கள். அதே போல் இதற்குப் பரிகாரம் என்ன என்பது பற்றியும் வெவ்வேறு மாறுபட்ட அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன.

அரசாங்கத்தின் சோஷலிசக் கொள்கைகளும், கடுமையான கண்ட்ரோல் முறைகளும்தான் இந்தச் சீர்கேட்டுக்குக் காரணம் என்று ஒரு சிலர் கூறுகின்றனர். மற்றும் சிலர் சோஷலிசக் கொள்கையை வேண்டா வெறுப்பாக, அரைகுறையாக நிறைவேற்றியதால் ஏற்பட்ட கோளாறு என்கின்றனர். சோஷலிசத்தைத் தீவிரமாக நிறைவேற்றாததுதான் குற்றம் என்பது போல் இவர்கள் வாதிக்கின்றனர். கம்யூனிஸ்டுகளோ, "சீனாவைப் பார்" என்று சுட்டிக்காட்டி, அந்தப் பாதையில் நாமும் செல்ல வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். மற்றும் சிலர், அமெரிக்காவையும், மேற்கு ஜெர்மனியையும், ஜப்பானையும் சுட்டிக்காட்டி அவர்கள் கடைப்பிடித்த வழிதான் நமக்கு வெற்றியைத் தரும் என்று உத்வேகத்துடன் சாதிக்கின்றனர்.

ஜனநாயகம் நிலவும் சமூகத்தில் இம்மாதிரி விஷயங்களில் ஒரே விதமான கருத்துக்கள்தான் நிலவும் என்று எதிர்பார்ப்பது முடியாத காரியம். அவ்விதம் ஒருமித்த கருத்து இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஆனால் எது முக்கியம், எது அவசியம் என்றும் மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படியான, தெளிவான, காரிய சாத்தியமான திட்டத்தை வகுத்துக் கொடுத்து, அதை நிறைவேற்றி வைப்பதுதான். இதை ஆளும் கட்சியினர் செய்யவில்லை. வறட்டுத் தத்துவங்களில் சிக்கிக் கொண்டு மனக் குழப்பத்தில் அவர்கள் புதைந்து கிடப்பது துரதிர்ஷ்டமேயாகும். இது போதாதென்று அரசியல் சாஸன ரீதியிலும், இதர வகைகளிலும் தோன்றியுள்ள பிரச்னைகள் குழப்பத்தை மேலும் அதிகரிக்கவே செய்திருக்கின்றன. உதாரணமாக, வயது வந்தோர்க்கு வோட்டுரிமை, மொழிவாரி மாகாணப் பிரிவினைகள், தரமான இலவசக் கல்வி வசதியின்மை ஆகியவற்றைச் சொல்லலாம்.

கல்வி கற்றவர்களும், பட்டம் பெற்றவர்களும் வேலை கிடைக்காமல், ஜீவனத்துக்கு வகையில்லாமல் திண்டாடுகிறார்கள். நமது கல்வி முறையில் குறைபாடுகள் உள்ளன என்பதற்கு இதுவே போதுமான அத்தாட்சியாகும். மாணவர்கள் மனத்தில் அவர்களுடைய பரம்பரைத் தொழில் மீதும் சம்பிரதாயமான அலுவல்கள் மீதும் வெறுப்பையே தற்போதைய கல்வி முறை ஏற்படுத்தியுள்ளது. இதனால் சமூக அமைப்பின் கட்டுக்கோப்பே தளர்ந்து சரிந்து வருகிறது. பரம்பரைத் தொழில்கள்மீது மாணவர்களின் ஆர்வத்தை மென்மேலும் வளர்ப்பதற்கு உரிய முறையில் பள்ளிப் பயிற்சிகள் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக, வழிவழியாக விவசாயத்தில் ஈடுபட்டு வந்துள்ள குடும்பங்களின் இளைஞர்களுக்கு, உணவு உற்பத்தியை எப்படி அதிகரிக்கலாம், புதுப் புது விவசாய முறைகளை எப்படி மேற்கொள்ளலாம் என்பது போன்ற அறிவைப் புகட்டுவதற்குப் பதிலாக, அவர்களுக்குச் சம்பந்தமில்லாதவற்றையெல்லாம் சொல்லிக் கொடுக்கின்றனர். இதனால் அவர்களுடைய திறமையும், முயற்சியும் வீணாகின்றன. அவர்களுடைய பொன்னான காலமும் பயனற்றுப் போகின்றது.

மக்கள்நல ராஜ்யம் (Welfare State) வேண்டும் என்று சொல்கிறோம். இதன் பொருள் நாட்டு மக்கள் எல்லோரும் சுபிட்சமாக இருக்க வேண்டும் என்பதே. ஆனால் நாட்டில் நாம் காண்பது என்ன? மக்களிடையே பகை உணர்ச்சி, கட்சிச் சண்டைகள், ராஜ்யங்களுக்குள்ளே சச்சரவுகள், நாட்டில்



கலவரம் — இவைதான். இப்போது அநுஷ்டிக்கப்பட்டு வரும் ''சோஷலிஸம்'' நம் பாரத நாட்டுக்குத் துளிக்கூட ஏற்ற முறை அல்ல. குபேர சம்பத்தில் உழன்று கொண்டிருக்கும் நாடுகளுக்குக்கூட இம்மாதிரி சோஷலிஸத்தால் அபாயம்தான் உண்டாகும். நம் நாட்டுக்கு, நமது மக்களுக்கு ஏற்ற சோஷலிஸம், ஹிந்து தர்மத்தில் பொதிந்துள்ள சோஷலிஸ சம்பிரதாயம்தான். ஹிந்து மதமும், ஹிந்து தர்மமும் நமக்கு சோஷலிஸ தத்துவத்தைப் போதிக்கின்றன. எல்லா மக்களும் க்ஷேமமாக இருக்க வேண்டும். ''ஸர்வே ஜனா: ஸுகினோபவந்து'' என்பது ஹிந்து தர்மத்தின் ஆதாரக் கருத்து. இது நம்முடைய நிலைமைக்கு முற்றிலும் திருப்திகரமாகப் பொருந்துவது. இது மக்களுக்காக, மக்களாலேயே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சோஷலிஸம். அரசாங்கத்தால் திணிக்கப்பட்ட சோஷலிஸம் அல்ல. எல்லா அதிகாரங்களையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டால், மக்கள் செயல் திறன் இழந்து, உற்சாகம் குன்றி, ஆற்றல் இழந்து, லட்சியமற்ற நடைப்பிணங்களாகத்தான் ஆவார்கள்.

ஆங்கிலேயர்களுடைய சரித்திரத்தைப் பார்ப்போம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து உலக அரங்கில் ஒரு மகோன்னதமான வல்லரசு. இன்றைக்குப் பொருளாதார நெருக்கடியுடன் பல்வேறு இதர நெருக்கடிகளுக்குட்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு உலக யுத்தங்களின் தாங்க முடியாத சுமையும், சாம்ராஜ்யத்தை இழந்த நஷ்டமும், இங்கிலாந்தின் செல்வாக்கைக் குன்றச் செய்து விட்டன. ''மகோன்னதமான பிரிட்டன்'' (Great Britain) இன்று மகோன்னதமான நிலையில் இல்லை!

இங்கிலாந்தில் மக்கள்நல ராஜ்யம் ஏற்படுத்தியதால் அந்நாட்டு மக்களிடம் தொன்றுதொட்டு இருந்து வந்த தீரம், சாகசச் செயலில் ஆர்வம், துணிச்சல், எந்தத் துறையிலும் வெற்றியுடன் முன்னேறும் சாமர்த்தியம் முதலிய குணங்கள் மறைந்து விட்டன. ஊளைச் சதை போட்ட சோம்பேறிகள் நிலைக்கு அவர்கள் வந்து விட்டனர். உழைப்பில் உள்ள உற்சாகம் அடியோடு மறைந்து போய் விட்டது.

துணிச்சலும், ஆர்வமும், செயல் திறனும் எப்போதும் மக்களிடம்தான் இருக்க வேண்டும். ஒவ்வொருவனும் அப்போதுதான் சமுதாயத்தின் நலனுக்குத் தன்னாலான பங்கைச் செய்ய முடியும். அதுதான் உண்மையான சோஷலிஸம். அரசாங்க உத்தரவுகளினாலும், சர்க்கார் கட்டுப்பாடுகளினாலும் உண்மை சோஷலிஸத்தை ஒரு நாளும் ஏற்படுத்த முடியாது.



இங்கிலாந்தின் படிப்பினைக்கு நேர் மாறானது ஜப்பான் போதிக்கும் படிப்பினை. தனியார் முயற்சியின் வெற்றிக்கு ஜப்பான் ஒரு சிறந்த உதாரணம். இரண்டாவது உலக யுத்தத்தில் ஜப்பான் நிர்மூலமாகி விட்டது. எனினும், அடுத்த இருபது ஆண்டுகளில் யுத்தத்தினால் சீரழிந்த பொருளாதாரத்தை மீண்டும் புதுப்பித்துக் கொண்டது மட்டுமல்லாமல் ஏற்கனவே முன்னேறிய நாடுகளையும் போட்டியில் பின்தங்கும்படி செய்யும் அளவுக்கு ஜப்பான் வேகமாகப் பொருளாதார, வர்த்தக, தொழில் துறைகளில் அபிவிருத்தி அடைந்துள்ளது.

இன்று ஜப்பானில் ஒவ்வொரு தொழிலாளியும், தொழிலதிபரும், கல்லூரிப் பேராசிரியரும், வியாபாரியும், அமெரிக்காவில் அதே தொழிலில் ஈடுபட்டுள்ளவர் சம்பாதிக்கும் அளவில் நாலில் ஒரு பங்கு சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். அமெரிக்காதான் அதிக சம்பாத்தியம் உள்ள நாடு. அதனாலேயே ஜப்பானியரின் சம்பாத்தியத்தை அமெரிக்கரின் சம்பாத்தியத்துடன் ஒப்பிட்டுச் சொல்கிறேன். கம்யூனிஸ்டு சீனா, இந்தியா, இதர ஆசிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஜப்பானின் சராசரி வருமானம் ஐந்து அல்லது பத்து மடங்கு அதிகம். உலக நாடுகளுக்குள்ளே பொருளாதார முன்னேற்றமுள்ள நாடுகள் வரிசையில், ஆறாவது ஸ்தானத்தை ஜப்பான் இன்று வகிக்கிறது. அடுத்த பத்தாண்டுகளில் இங்கிலாந்து, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளைப் பொருளாதார வளர்ச்சியில் ஜப்பான் மிஞ்சி விடவும் கூடும்.

கலப்புப் பொருளாதாரத்துக்கு (Mixed Economy) ஜப்பான் ஒரு சீரிய உதாரணம். அங்கேயும் கண்ட்ரோல்கள் உண்டு. ஆனால் கண்ட்ரோல்களை அமுல் நடத்தும் போதே, மக்களுக்குத் தொழில் ஆர்வமும், உற்சாகமும் குன்றாத வகையில் அவை செயல்படுமாறு பார்த்துக் கொள்கின்றனர். அரசாங்கத்தின் பரவலான கண்காணிப்புக்கிடையே, பொருளாதார முன்னேற்றம் சாதாரண மக்களிடமிருந்துதான் தோன்றி வளர வேண்டும் என்ற உண்மையை அவர்கள் புறக்கணிப்பதே இல்லை. அரசாங்கத்தின் தூண்டுதலும் தனியார்களின் உற்சாகமும் மிக நெருக்கமாக, இணக்கமாக அங்கே செயல்படுகின்றன. மிகவும் கஷ்டமான துறைகள் என்பனவற்றில் அரசாங்கம் முன்னே நின்று செயலாற்றி, சமூகத்துக்கு ஸ்திரத் தன்மை உண்டாக்கித் தருகிறது. ஸ்திரமான நாணய மதிப்பையும் தந்து, பொருளாதார அபிவிருத்திக்கான சூழ்நிலையை அமைத்துத் தருகிறது. இத்துடன் அரசாங்கம் தனது வேலையை நிறுத்திக் கொள்கிறது. இந்தச் சூழ்நிலையில் முன்னேற்றம் காண முயற்சியும் வேகமும் தனிப்பட்டவர்களிடமிருந்துதான் வருகின்றன.

இதற்கு நேர்மாறானது இந்தியாவின் நிலைமை. நம் நாட்டில் எதற்கெடுத்தாலும் பற்றாக்குறை நிலைமைதான். உணவுப் பற்றாக்

குறை, குடியிருப்புப் பற்றுக்குறை, குடி தண்ணீர்ப் பற்றுக்குறை, வேலைவாய்ப்புப் பற்றுக்குறை — இப்படிப் பலப் பல. பற்றுக் குறைக்குத் துணையாகக் காணப்படுவது கண்ட்ரோல்கள். எத்தனை கண்ட்ரோல்கள் என்று கணக்கெடுப்பதே கஷ்டம். கண்ட்ரோல்கள் உற்பத்தியைத் தடை செய்கின்றன. உற்பத்தி தடைப்பட்டால் அத்தியாவசியப் பொருளுக்குப் பற்றுக்குறைதான் உண்டாகும்.



இந்த நிலைமைக்குப் பரிகாரம் உற்பத்திப் பெருக்கு; மேன்மேலும் உற்பத்தியை அதிகரித்தல். ஆனால் இதற்கு உற்பத்தியில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு அதிக சுதந்திரம் கொடுக்க வேண்டும். செயலாற்ற அதிக உற்சாகமும், ஊக்கமும் அளிக்க வேண்டும். இந்த உண்மை புது தில்லியில் செங்கோல் நடத்தும் ஆட்சியாளர்கள் மனத்தில் இன்னமும் உதிக்கவில்லை. இது நமது பெரும் துரதிர்ஷ்டம். உற்பத்தியைப் பெருக்க வழி என்னவென்று தேடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் கண்டதெல்லாம் காகித அறிக்கைகள்தாம். புதுதில்லியில் உற்பத்தியாகும் அறிக்கைகளுக்கு ஈடாக வேறெங்கேயும் காண முடியாது!

தனியார் துறை, பொதுமக்கள் துறை என்று இப்போது வகுக்கப்பட்டுள்ள பாகுபாடு அர்த்தமற்றது. பொய்யான தோற்றத்தை உண்டாக்குவது. தனியார் துறைத் தொழில் என்று கூறப்படுவது உண்மையில் பொது மக்கள் துறைத் தொழிலேயாகும். இத்துறையில் இயங்கும் ஆயிரக்கணக்கான கம்பெனிகள் (Joint Stock Companies) நாடு முழுவதிலும் பரவியுள்ள லட்சக்கணக்கான தனிப்பட்ட பங்குதாரர்களின் சொத்து. பொதுத்துறைத் (Public Sector) தொழில் என்று அழைக்கப்பட்டு வருவதெல்லாம் உண்மையில் சர்க்கார் நடத்தும் தொழில்களே தவிர வேறு அல்ல. அவற்றை எல்லாம் அரசாங்கத் தொழில் துறை என்று அழைப்பதுதான் சரி. இதை மாற்றிச் சொல்ல நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

நாம் சுதந்திரம் பெற்றபின், இம்மாதிரி அரசாங்கத் தொழிலில் சுமார் 2000 கோடி ரூபாய் சர்க்கார் முதலீடு செய்திருக்கிறது. ஏற்கனவே ரயில்வே, தபால், தந்தி முதலியவற்றில் முதலீடு செய்துள்ளதைத் தவிர அதிகப்படியாக நாம் 2000 கோடி ரூபாய் பொதுத் தொழில்களில் முதலீடு செய்துள்ளோம். இவ்வளவு மூலதனம் கொட்டி வளர்க்கப்பட்டுள்ள தொழில்களிலிருந்து கிடைக்கும் லாபம் கடுகளவுகூட இல்லை. இத்தொழில்களில் பெருந்தொகை முதலீடு செய்யப்பட்டிருக்கிறதென்றால், அந்தத் தொகை எங்கிருந்து கிடைக்கிறது? கடைசியில் பார்க்கப்போனால் தேசிய வருமானத்தின் சேமிப்பிலிருந்துதான் வருகின்றது. பெருவாரியாக முதலீடு செய்யப்பட்ட ஒரு துறையிலிருந்து எவ்வித லாபமும் கிடைக்கவில்லையானால், நாட்டின் பொருளாதாரம் எப்படி முன்னேற முடியும்? தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியைத் தடை செய்து பின்னுக்கு இழுத்துக் கொண்டிருப்பது இம்மாதிரி அரசாங்கத் தொழில் துறைதான்.

இதற்குப் பரிகாரம் என்ன? அரசாங்கத் துறைத் தொழில்கள் நடப்பதற்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் அவை லாபகரமாக இயங்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். கம்பெனி முறை நிர்வாகம் போல, தனித் தனி கார்ப்பொரேஷன்கள் அமைத்து ஒவ்வொன்றுக்கும் தொழில் நுணுக்கம் தெரிந்த, தொழில் நிர்வாக சாமர்த்தியம்



உள்ள நிர்வாகஸ்தர்களை டைரக்டர்களாக நியமித்து, தனியார்த் துறைக் கம்பெனிகள் எப்படித் திறமையாக நிர்வகிக்கப்படுமோ, அந்த முறையில் லாபகரமாக அரசாங்கத் தொழில்களிலும் நிர்வாகம் நடக்க வழி செய்ய வேண்டியது அவசியம்.

பெரும் தொகையை முதலீடு செய்ய வேண்டுமானால், திறமையுடன் நிர்வாகம் எப்படி நடத்தலாம்; குறைந்த உற்பத்தி விலையில் லாபகரமாகத் தொழில் எங்கே நடைபெறும் என்பனவற்றைப் பொருளாதார ரீதியில் கணித்துச் செயல்பட வேண்டும். இதற்கு மாறாக, அரசியல் நோக்கங்களையும், தத்துவங்களையும் மனத்தில் கொண்டு செயலாற்றக் கூடாது. மக்களுடைய சேமிப்பைத் திறமையாக முதலீடு செய்வதில் கிடைக்கும் லாபம்தான் நமது தேசிய வருமானத்தைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். இந்த அடிப்படை உண்மையை உணர வேண்டும்.

திட்ட இனங்களில் இன்னும் அதிகமாக முதலீடு செய்ய வேண்டும் என்ற உத்வேகத்தில் மேலும் மேலும் வரிகள் என்ற ஆயுதத்தைப் பிரயோகித்துப் பணம் சேகரித்துக் கொண்டே போகிறது திட்டக் கமிஷன். ஆனால் இது வரையில் கோடிக்கணக்கில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு லாப வருமானம் என்று ஒன்றுமே வரவில்லை என்பது ஏனோ அவர்களுக்கு உறைப்பதில்லை. 2000 கோடி ரூபாய்க்கு 25 அல்லது 30 சதம் வருமானம் கிடைக்க வகை செய்தாலே போதும்; மேலும் புதிதாக நிதி சேகரிக்கும் பிரச்னையே இருக்காது.

பொருளாதாரத்தில் பொதுவாக ஒரு நியதி உண்டு. ஒரு தொழிலில் மூலதனம் போட்டுக் கொண்டே போனால், அதனால் கிடைக்கக் கூடிய லாபத்தின் விகிதாசாரம் படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்லும். ஆதலால் ஓர் அளவுக்குப் பின் அந்தத் தொழிலில் முதலீடு செய்வது லாபகரமாக இராது. இந்த நியதி வரிமுறைகளுக்கும் பொருந்தும். நியாயமான அளவுக்கு மீறி வரி விதித்தால் முன்னேற்றம் தடைப்படவே செய்யும். மேலும் மேலும் வரி விதித்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தையெல்லாம் அரசாங்கத் தொழில்களில் லாபம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை என்று முதலீடு செய்து கொண்டே போனால், நம்முடைய பொருளாதாரம் க்ஷீணித்துத்தான் போகும். அந்த அளவுக்கு நாட்டின் பாதுகாப்பும் பலவீனப்படத்தான் செய்யும். இன்று பாகிஸ்தான் தனது தேசிய ராணுவ பலத்தை வேகமாக அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஒரு தேசத்தின் பலம், அதன் ராணுவ பலத்தைப் பொறுத்துத்தான் மதிப்பிடப்படுகிறது.

ஆகவே, நமது அரசாங்கம் தன் முழு சக்தியையும் பாதுகாப்புத் துறையில் பயன்படுத்தி, இதர துறைகளில் உற்பத்தியைத் தனிப்பட்டவர்களுக்கு விட்டுவிட வேண்டும். பாதுகாப்புத் துறையில் தளவாடம் முதலியவற்றின் உற்பத்தி விஷயத்தில்கூட எந்தெந்த இனங்களை வேகமாகவும் வெற்றிகரமாகவும் தனியார் துறை உற்பத்தி செய்யக்கூடுமோ, அவற்றையெல்லாம் அவர்களிடம் விடுவதற்கு அரசாங்கம் தயங்கக் கூடாது.

உண்மையில் பார்க்கப் போனால் பொது நலத் துறைகள், பாதுகாப்புத் துறை இவற்றைத் தவிர இதர துறைகளில், தனியார் துறையினரால் சாத்தியமில்லாதது, அவர்களுடைய சக்திக்கு மீறியது என்ற இனங்களில் மட்டும் அரசாங்கம் தலையிட்டு உற்பத்திப் பணியில் ஈடுபட வேண்டுமே தவிர, எல்லா விஷயங்களிலும் தலையிடுவது விரும்பத் தக்கதல்ல. இப்போது அரசாங்கத் தொழில்கள் என்று நடத்தப்பட்டு வரும் சில இனங்களில் தனியார்த் துறையும் தொழில் நடத்த அநுமதிக்க வேண்டும். இதனால் நிர்வாகத் திறன் உயருவதுடன் போட்டி மனப்பான்மையால் நன்மையே விளையும்.

நம்முடைய தவறுகளின் விளைவாக நாம் ரூபாயின் வெளிநாட்டு மதிப்பைக் குறைக்க வேண்டி வந்தது. ஆனால் அந்நடவடிக்கையைத் தொடர்ந்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய இதர நடவடிக்கைகளைப் பற்றித் திட்டவட்டமான ஒரு கருத்தும் இன்னமும் உருவாகவில்லை. பார்க்கப் போனால், இதைப் பற்றி முன்கூட்டியே சிந்தித்து, இன்னின்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்திருக்க வேண்டும். ரூபாய் மதிப்புக் குறைப்பை அறிவித்தவுடனே இவற்றையும் கூடவே அறிவித்திருக்க வேண்டும்.

முன்னெச்சரிக்கையில்லாததாலும், சிந்தனைத் தெளிவின்மையாலும், ஏற்றுமதி வர்த்தகத்தில் பெரும் பங்கு கொண்டிருந்த மேற்கு வங்காள சணல் வர்த்தகம், ஸ்தம்பித்து விட்டதுடன் மாதம் ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் நஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. வங்காளம் எப்போதும் ஏழைமை மிகுந்த பிரதேசம். இப்போது அங்கே கலகமே உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நஷ்டம் மக்களுக்கு மேலும் கஷ்டத்தை உண்டாக்கிக் கிளர்ச்சிகளைத் தூண்டி விடும். இந்தத் தொழில் கவனிப்பாரற்றுச் சீர்கேடு அடையும்படி விடக் கூடாது.

பல கோடி மதிப்புள்ள ஆர்டர்கள் ஏற்றுமதிக்காகக் காத்துக் கிடக்கின்றன. ஏற்றுமதியாளர்களோ அரசாங்கத்திடமிருந்து 'பச்சைக் கொடி' எப்போது காட்டப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டே தவிக்கின்றனர். அயல் நாட்டு வியாபாரிகள்



எத்தனை நாளைக்குத்தான் காத்துக் கொண்டிருப்பார்கள்? நம்மிடமிருந்து சீக்கிரத்தில் திருப்திகரமாகப் பதில் கிடைக்கா விட்டால், இதர நாடுகளிலிருந்து தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவே முனைவார்கள். நமக்கு இருந்துவந்த ஏற்றுமதி வர்த்தகம் அழிந்து போவதுடன் நமக்குக் கிடைக்கக் கூடிய அந்நியச் செலாவணியும் நஷ்டமாகும்.

இந்நிலையில் பாகிஸ்தான் தனது நாட்டுக்கு எது நல்லது என்பதைப் பற்றித் தெளிவான கருத்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். தேசிய நலனை உணர்ந்து கொண்டு அதற்கு அநுசரணையாகவே உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள், பொருளாதாரக் கொள்கைகள் போன்றவற்றை ஸ்திரமாக அமைத்திருக்கிறார்கள். மக்களுக்கு நல்லது என்று தெரிந்தால் போதும், அதன்படி நடவடிக்கை எடுக்கப் பாகிஸ்தான் காலதாமதம் செய்வதே இல்லை.

நம் நாட்டிலோ நிர்வாகம் ஊழல் மலிந்ததாக ஆகி விட்டது. கறுகறுப்பான நடவடிக்கை எடுப்பதே அரிதாகிவிட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவது கின்னுக்கிரையாகி விட்டது. சட்ட சபைகளிலும், மத்திய பார்லிமெண்டிலும் கூட அமைதியோ, ஒழுங்கோ காணப்படுவதில்லை. இதை யெல்லாம் பார்க்கும்போது வாக்காளர்கள் தங்கள் மேலான வோட்டுக்களை வரும் தேர்தலில் வழங்கும் போது, முன் ஆலோசனையுடன் தகுதியுள்ளவர்களுக்கே வழங்க வேண்டும் என்பது தெளிவாகவில்லையா? இப்போதுள்ள அரசாங்கத்தைக் காட்டிலும் நல்ல, நேர்மையான, திறமையான அரசாங்கத்தை நாம் பெற வேண்டும். நமது மக்கள் இதைவிட நல்ல அரசாங்கத்தைப் பெற அருகதையுள்ளவர்களே. கட்சிச் சீட்டுக்களையும், கட்சிச் சித்தாந்தங்களையும் பொருட்படுத்தாமல், நிலைமையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஒவ்வோர் அபேட்சகரின் தகுதியையும், சாமர்த்தியத்தையும், நேர்மையையும் சீர் தூக்கிப் பார்த்து, அநுபவசாலியான நியாய உணர்ச்சியுள்ள அபேட்சகர்களுக்கே வோட்டு அளிக்க வேண்டும். அத்தகையவர்களால் தான் நாட்டின் நிலைமை சீர்திருத்த முடியும்

காங்கிரஸ் கட்சி பலம் பொருந்திய கட்சி என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியது தான். எனினும், நாட்டு நலனுக்கு நிச்சயமாகப் பாடுபடக் கூடியவர்களையே அக்கட்சி பார்லிமெண்டுக்கும், ராஜ்ய சட்டசபைகளுக்கும் அபேட்சகர்களாக நிறுத்த வேண்டும். கூடவே சக்தி வாய்ந்த, உருப்படியாக ஆலோசனை சொல்லக்கூடிய, நன்றாகச் செயலாற்றக் கூடிய எதிர்க் கட்சி தேவை. அப்போதுதான் உண்மை ஜனநாயகம் நிலைத்து நிற்பது சாத்தியமாகும்.

அஹமதாபாத்தில் நடைபெற்ற சம்பவங்களையும், இதர பகுதிகளில் நடைபெற்ற பல சம்பவங்களையும் பற்றிய செய்திகளைப் படிக்கும் போது, இக்கலவரங்களைத் தூண்டிவிட்டு அமைதியைக் குலைக்கும் வேலையின் பின்னணியில் சக்தி வாய்ந்த ஏதோ ஓர் அண்டை நாடு இருப்பதாகவும், பண உதவி செய்வதாகவும் சந்தேகிக்கத் தோன்றுகிறது. அதற்குத் தேவையான பணம் இந்தியாவிலேயே இருக்க வேண்டும். அல்லது இந்திய நோட்டுக்களை வெளிநாடுகளில் அச்சிட்டு அதைக் கள்ளக் கடத்தல் மூலம் இந்நாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். போலி நோட்டுகள் புழக்கத்தில் இருப்பதைச் சில பாங்கிகள் கண்டுபிடித்திருக்கின்றன.

சமீபத்தில் பம்பாயில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் பங்கு கொண்ட



திரு ஜி. எல். மேத்தா ருஷ்யப் புரட்சித் தலைவர் லெனின் வரலாற்றிலிருந்து அவருடைய கருத்து ஒன்றைச் சொன்னார். "ஒரு நாட்டில் புரட்சியைத் தோற்றுவிக்க வேண்டுமானால் அந்த நாட்டு நாணயத்தின் மதிப்பைக் குறைத்தால் போதும். வேறு ஒன்றும் செய்ய வேண்டியதே இல்லை" என்று லெனின் சொன்னாராம். இந்தியாவில் கம்யூனிஸத்தை ஸ்திரமாக ஸ்தாபிக்க நாம் வழி வகுத்துக் கொண்டிருக்கிறோம் என்றுதான் நான் அஞ்சுகிறேன். ஆளும் கட்சி இப்போது ஆட்சி புரியவில்லை. சம்பவங்கள் நிகழுவதைப் பார்த்துக்கொண்டு திறனிழந்து, செயலிழந்து சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

முடிவுரையாகச் சொல்கிறேன்: ஜப்பானியர்களின் முன்னேற்றத்துக்குக் காரணம் தொழில் நுணுக்கங்களில் அவர்கள் அடைந்துள்ள அசாதாரண அபிவிருத்தியும் மக்களின் கடுமையான உழைப்பும், கட்டுப்பாடான வாழ்க்கையுமாகும். அவர்களுடைய உதாரணத்தை நாமும் பின்பற்றி, பொருளாதாரச் சேற்றிலிருந்து நாட்டை விடுவித்து அதைச் சந்தோஷகரமாக, சுபிட்சப் பாதையில் செலுத்த முழுமனத்துடன் முழுமூச்சுடன் பாடுபடுவோம்.

முள்ளும் மலரும்

உமாசந்திரன்



அத்தியாயம் 4

அண்ணனுக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு வள்ளி உடும்புக் கொட்டகைக்கு வந்தபோது கொட்டகையில் மணியடித்துக் கொண்டிருந்தது.

''அண்ணே, அண்ணே!''

சுற்றுமுற்றும் எங்கிலும் காளியண்ணனைக் காணவில்லை.

''காளியண்ணே...!'' என்று உரக்கக் குரல் கொடுத்தாள் வள்ளி. எதிர்ப்புறத்துக் குன்றுகளிலிருந்து எதிரொலி வந்ததே தவிர காளியண்ணனின் பதில் குரல் வரவில்லை.

''காளியண்ணே!...''

கொட்டகையில் மீண்டும் மணி ஒலித்துக் கொண்டேயிருந்தது.

டிராலிச் சரிவில் மேகமூட்டம் வலுத்துக் கறுத்திருந்தது. பத்தடிக்குக் கீழே எதுவுமே தெரியவில்லை. கரிய மேகத் துணுக்குகள் கொட்டகையிலும் ஊடுருவிச் சென்று கொண்டிருந்தன. வெளியே பிசுபிசுவென்று மழை பெய்ய ஆரம்பித்திருந்தது. பவர் ஹவுஸ் பகுதியில் இன்னும் நல்ல மழை பெய்து கொண்டிருக்கும். அங்கிருந்துதான் யாரோ மேலே வருவதற்காக மணியை அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொண்ட வள்ளி இன்னும் தவியாய்த் தவித்தாள்.

இந்த அண்ணன் சரியான சமயத்துக்கு எங்கே போய் விட்டான்? இந்த மாதிரி என்றுமே நேர்ந்ததில்லையே! காளியண்ணனைப் பற்றி வேறு விதத்தில் யார் என்ன குற்றம் சொன்னாலும் 'டூட்டி' விஷயத்தில் யாரும் அவனைப் பற்றிக் குற்றம் சொல்ல முடியாதே... இன்று என்ன வந்தது?

மணி மறுபடியும் மறுபடியும் தொடர்ந்து ஒலித்தது. வள்ளிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கீழே இருப்பவர்களுக்கு என்ன அவசரமோ! தேவையான

வெள்ளிவிழா பரிசுத் திட்டப்

ரூ. 10,000

முதல் பரிசு நாவல்

நேரத்தில் காலி 'டூட்டி'யைக் கவனியாமல் ஷெட்டைப் போட்டபடி போட்டு விட்டு எங்கோ சென்று விட்டான் என்று அதிகாரிகளுக்குத் தெரிந்தால் அவன் சீட்டையே கிழித்து விடுவார்களே! டிராலியைக் கீழே இறக்கிய பின்புதான் அண்ணன் அங்கிருந்து சென்றிருக்க வேண்டுமென் பதை உருளைச் சக்கரங்களைப் பார்த்துப் புரிந்து கொண்டான் வள்ளி. அவற்றில் சுற்றப்பட்டிருந்த உருக்குக் கயிற்றில் பெரும் பகுதி விடுபட்டிருந்ததல்லவா?



ஆனல் பிறகு திடீரென்று அண்ணனை அங்கிருந்து இழுத்துச் செல்லும்படியாக அப்படி என்ன நேர்ந்திருக்கும்?

எப்படியாவது அண்ணன் வந்துவிட மாட்டானு என்ற தவிப்புடன் சுற்று முற்றும் பார்த்தாள் வள்ளி. அவன் வருவதற்கான அறிகுறி எதையும் காணேம். மழை வலுத்துக் கொண்டிருந்தது. இனியும் காலம் கடத்த முடியாது. ஒரே ஒரு வழிதான் தோன்றியது வள்ளிக்கு. விஞ்ச் விசையை அழுத்தி டிராலி மேலே வருவதற்கு உதவி செய்தாலென்ன?

டிராலியைக் கீழே விடுவதற்கும் மேலே இழுத்து வருவதற்கும் காளியண்ணன் என்னென்ன செய்கிறன் என்பதை வள்ளி கவனித்திருக்கிறள். பல் சக்கரங்களும் உருளைகளும் சரியாகப் பொருந்தியிராவிட்டால் விசையருகே உள்ள சிவப்பு விளக்கு எரியும். அப்படிச் சிவப்பு விளக்கு எரியாவிட்டால் யந்திரத்தில் பழுதில்லையென்று அர்த்தம் என்று காளியண்ணன் ஒரு முறை அவளிடம் விளக்கிச் சொன்னதும் அவளுக்கு நினைவிருந்தது. சிவப்பு விளக்கு எரியாததிலிருந்து யந்திரம் நல்ல நிலையில்தான் இருக்கிறது என்பதை உறுதி செய்து கொண்ட வள்ளி முரட்டுத் துணிச்சலுடன் டிராலி மேலே வருவதற்கான விசையை அழுத்தி விட்டாள்.

உருளைகள் சுழல ஆரம்பித்தன. உருக்குக் கயிறு மேல் நோக்கி மெள்ள மெள்ள நகர்ந்து வந்து உருளைகளில் சுற்றிக் கொள்ள ஆரம்பித்தது. யந்திரம் சரியாகத்தான் வேலை செய்கிறது என்று அறிந்து வள்ளி பூரிப்படைந்தாள். செய்ததென்னவோ துணிந்து செய்தாயிற்று. இனி டிராலி பத்திரமாக மேலே வந்து சேர வேண்டுமென்று பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழியில்லை. கன்னியம்மன் கௌரியம்மனை நினைத்துக் கொண்டாள் வள்ளி. "கௌரித் தாயே! நீதான் காப்பாத்தணும்" என்று மனத்துக்குள்ளேயே வேண்டிக் கொண்டாள்.

உருளைகள் மெதுவாகச் சுழன்று கொண்டிருந்தன. ஒவ்வோர் அடியாக மேல் நோக்கி வந்து உருளைகளில் சுற்றிக்கொண்டிருந்த உருக்குக் கயிறு டிராலி நிதானமாக மேலே ஏறி வந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தியது. இதே நிதானத்தில் அது நிலையை வந்து அடைய இன்னும் கால் மணி நேரமாவது ஆகும். அதற்குள் காளியண்ணன் வந்து விட்டால் ஒரு தொல்லையுமில்லை. கடமை நேரத்தில் வேலையைக் கவனிக்காமல் எங்கோ போய் விட்டான் என்று அவனை யாரும் குறை சொல்வதற்கு இடமிருக்காது.

ஆனல் நேரம் ஆகிக் கொண்டிருந்ததே தவிர காளியண்ணன் வரும் வழியாயில்லை. உருளைகளில் உருக்குக் கயிற்றின் சுருள்கள் ஏறிக் கொண்டே இருந்தன. வெளியே மழை பெய்வது நின்றிருந்தது. சரிவில் அடர்ந்து குவிந்திருந்த மேகக் கூட்டங்கள் திடீரென்று வேறு எங்கோ செல்ல வேண்டிய கடமையை நினைத்துக் கொண்டவை போல் அங்குமிங்குமாகப் பிரிந்து செல்ல ஆரம்பித்தன. அது வரை கண்ணுக்குப் புலனாகாதிருந்த டிராலித் தண்டவாளம் இப்போது மழைத் தண்ணீரில் பளபளத்தவாறு பளிச்சென்று தெரிந்தது. தண்டவாளங்களின் நடுவே கன்னங்கரிய உருக்குக் கயிறு உயிரைப் பிடித்திழுத்துக் கொண்டிருக்கும் விதியின் பாசம் போல் எங்கோ மழையில் மேலூர்ந்து வந்து கொண்டிருந்த டிராலியை இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்றது. "கௌரித் தாயே! அண்ணன் சீக்கிரமே வந்து விடவேணுமே" என்று பரபரப்புடன் பிரார்த்தித்தாள் வள்ளி.

திடீரென்று ஏதோ மாயம் நிகழ்ந்தது போன்ற திகைப்பு அவள் மனத்தில். எதிரே சரிவு நெடுகிலும் சிதறிக் கிடந்த மேகத் துணுக்குகள் ஒரே கணத்தில் துடைத்து விட்டாற்போல் மறைந்து விடவே உச்சி வெய்யிலின் ஒளியில் அந்தப் பிரதேசம் முழுவதும் பளிச்சென்று துலங்கியது. கூப்பிடு தூரத்திலேயே டிராலி மேல் நோக்கி ஊர்ந்து வந்து கொண்டிருப்பதை இப்போது வள்ளி நன்ருகப் பார்த்து விட்டாள். உடம்போடு நடுங்கியது அவளுக்கு. டிராலியில் வருவது யாரோ தெரியவில்லையே? தெய்வமே, இந்தக் கடைசி நிமிஷத்திலாவது காளியண்ணன் வந்துவிடக் கூடாதா?

டிராலியில் அமர்ந்திருந்தது யாரென்று புரியாவிட்டாலும் ஒரே ஒரு மனிதர்தான் வந்து கொண்டிருந்தார் என்பதைக் காண முடிந்தது. அவரது உடையும் தோற்றமும் அவர் ஓர் அதிகாரிதான் என்பதை எடுத்துக் காட்டின. ஆயிற்று. இன்னும் இரண்டு மூன்று நிமிஷங்களுக்குள் அவர் மேலே வந்து விடப் போகிறர். காளியண்ணனைப் பற்றிக் கேட்டால் வள்ளியால் என்ன பதில் சொல்ல முடியும்? "கௌரித் தாயே! இப்படி ஒரு சோதனைக்கு என்னை ஆளாக்கி விட்டாயே!"



சுவைப்பதற்கினியது

ஹிமா பட்டாணி

சொல்லொணாத இனிமை, என்றும் நீங்கள் சுவைத்திராத பசுமை!

—பருவம் மாறினும் பசுமை மாறாத பட்டாணி



பச்சைப் பசேலென்ற நிலையிலே பறித்து, விஞ்ஞான முறைப்படி உடனே உலர்பதம் செய்யப்பட்டு, காற்றுப் புகாப் பொட்டணங்களிலே லீவாகி வரும் பட்டாணி ஹிமா பட்டாணி.

ஹிமா பட்டாணி சிக்கனம் தருவதும் கூட. ஒவ்வொரு பொட்டணமும், சமையலிலே பூரித்துக் கொழிக்கும் பட்டாணியாக ஒருகால் கிலோவுக்கு மேல் அளிக்கின்றது-- உரிக்காத பட்டாணியாக ஒரு கிலோவுக்கு மேல் வாங்குவதற்கு ஈடு இது. பட்டாணிப் பண்டம் எதனிலும் பசுமை நயம் சுவைக்க உதவுவது ஹிமா பட்டாணி.

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

ஹிமா
சுவைத்துண்ணும் சுகத்துக்கே

லின்டாஸ்-HMAP. 58-140 T

என்று நினைத்தபோது வள்ளிக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

டிராலியில் வருபவர் தன்னைப் பார்க்க முடியாத விதத்தில் மறைந்து நின்று கொண்ட வள்ளி ஒரு சிறிய இடைவெளி வழியே அவரை அடையாளம் கண்டுகொள்ள முயன்றாள். அப்போது தான் அவர் மழைக்குப் பாதுகாப்பாகத் தலையில் அணிந்திருந்த குல்லாயைக் கழற்றினார். அவரது முகம் வள்ளிக்குத் தெளிவாகத் தெரிந்தது... ஆனால் இதென்ன... முன் பின் பார்த்திராத முகமாக இருக்கிறதே! ஒரு வாரத்துக்கு முன்புதான் புதிதாக ஓர் எஞ்சினியர் அந்தப் பகுதிக்கு வந்திருப்பதாகக் காளியண்ணன் கூறிக்கொண்டிருந்தது வள்ளியின் மனத்தில் சட்டென்று பளிச்சிட்டது. ஒருவேளை இவர் அவராயிருப்பாரோ?

அவரைப் பற்றிக் காளியண்ணன் அலட்சியமாகக் கூறிய சில வார்த்தைகள் இப்போது வள்ளியின் நினைவுக்கு வந்தன.

''வேலையிலே சேர்ந்த புதிசில்லே? அதுதான் பிரமாதமா அழுத்தல் பண்ணிக்கிறாரு. ஆனால் அந்த அகராதித்தனமெல்லாம் இந்தக் காளியண்ணன் கிட்டே சாயாது. நம்ம 'டூட்டி' உண்டு நாம உண்டு. அவரு பெரிய படிப்பு படிச்சவர்னு அவரோட. நம்மகிட்டே மட்டும் வம்பு குடுக்க வந்தாரு, அப்பத் தெரிஞ்சுக்குவாரு, நாம யாருன்னு!''—டிராலியில் அமர்ந்திருந்த மனிதரை மறுபடியும் கூர்ந்து கவனித்தாள் வள்ளி. ஒருவேளை காளியண்ணன் கூறியது உண்மையா யிருக்குமோ?

டிராலி நிலையை எட்டிவிட்டதென்பதை உணர்த்துவதற்காகத் தண்டவாளத்தை யொட்டி அமைக்கப்பட்டிருந்த தந்திக் கம்பியை ஒரு 'கழியால் தொட்டார் அந்த மனிதர். உடனே ஷெட்டில் மணியடித்தது. வள்ளி விசையை அழுத்தி யந்திரத்தை நிறுத்தியதும் டிராலி நிலைக்கு வந்து நின்றது.

வள்ளிக்கு இப்போது அங்கே நிற்கக் கூடப் பயமா யிருந்தது. அந்த மனிதர் டிராலியை விட்டு இறங்கி, பாதுகாப்பாக அணிந்திருந்த மழைக் கோட்டைக் கழற்றி உதறிக் கையில் எடுத்துக் கொண்டவாறு நேரே ஷெட்டை நோக்கித்தான் வரப்போகிறார். ஷெட்டுக்கு வந்ததும் அவர் கேட்கப் போகும் முதல் கேள்வி காளியண்ணனைப் பற்றியதாகத்தான் இருக்கும். காளியண்ணனுக்குப் பதிலாக அவள் அந்த இடத்திலிருந்து ஒவ்வொன்றும் செய்திருக்கிறாள் என்று அவர் அறிந்தால் எவ்வளவு கோபித்துக்கொள்வாரோ! சரியான சமயத்தில் காளியண்ணன் அங்கில்லாமல் போனதற்கு அவள் என்ன சமாதானம் சொல்லப் போகிறாள்? என்ன சமாதானம் சொன்னாலும் அது பொய்யாகத்தானே இருக்கும்? அப்படிப் பொய்ச் சமாதானம் சொல்லும் நிலை ஏற்படுவதைவிட நின்ற இடத்திலேயே அவர் கண்ணுக்குத் தெரியாமல் மாயமாக மறைந்துவிட முடியாதா என்று தவித்தாள் வள்ளி.



''என்னமோடாப்பா! உன்னோடு ரெண்டு வார்த்தை பேசிட்டிருந்ததிலே நேரம் போனதே தெரியல்லே. அவள் ஆபீசிலிருந்து திரும்புகிற நேரமாச்சு, நான் வரட்டுமா?''

''ஏ வள்ளி... தோட்டத்துக்கு ஓடு!''—காதருகே கரகரவென்று குரலைக் கேட்டதும் வள்ளி சட்டென்று திரும்பிப் பார்த்தாள். காளியண்ணன் நின்றுகொண்டிருந்தான்.

வியப்பும் மகிழ்ச்சியும் மேலிட, ''அண்ணே...'' என்று கத்திவிடப் போனாள் வள்ளி.

சட்டென்று அவள் வாயைப் பொத்தி அவளைப் பின்னுக்கு இழுத்தான் காளி. ''அப்புறம் பேசிக்கிடலாம். இப்ப நீ இங்கே நிக்காதே...'' என்று அவசரமாகக் கூறியவாறு அவளைத் தோட்டத்துப் பக்கமாகத் தள்ளி விட்டான்.

வள்ளி தோட்டத்துக் கதவுக்குப் பின்னே மறைந்து கொள்ளுவதற்கும் அந்த மனிதர் ஷெட்டை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது. காளியண்ணனே அவரை எதிர் கொள்பவன் போல் ஷெட்டுக்கு வெளியே சென்று அவருக்கு வணக்கம் தெரிவித்தான்.

''வணக்கம் சார்.''

''ஓ, நீதான் டியூட்டியில் இருந்தாயா?'' என்று கேட்டார் அவர்.

''ஆமாம் சார்.''

''கீழேயிருந்து ரொம்ப நேரமாக மணியடித்துக் கொண்டிருந்தேனே, உனக்குக் கேட்கவில்லையா?''

''ரொம்ப நேரமா அடிச்சிக்கிட்டிருந்திங்களோ, பாவம், ஆனா நான் என்ன செய்ய முடியும் சார். மெஷின் ரிப்பேராயிருந்திச்சு. உடும்புச் சக்கரம் ஒண்ணுக்கொண்ணு சரியாப் பொருந்தலே. அதைச் சரிப்படுத்தாமே டிராலியை மேலே தூக்கினால் என்ன கதியாகும்?''

''அப்படியா? சக்கரம் சரியில்லாமலா இருந்தது? அதை நீயே எப்படிச் சரி செய்ய முடிந்தது?'' என்று வியந்தவாறே அந்த இளைஞர் ஷெட்டுக்குள்ளே சென்று பல் சக்கரங்களைப் பார்த்தார்.

''இதில் பழுதிருந்ததாகவே தெரியவில்லையே!'' என்றார் வியப்புடன்.

''அவ்வளவு சாமர்த்தியமா அதைச் சரிசெய்திருக்கேன் சார், சும்மா இல்லே, நாலு வருஷமா அனுபவப்பட்டிருக்கிறவன் இல்லே. அக்கு வேறு ஆணி வேறேயாப் பிரிச்சுப் போட்டாலும் கவலையில்லே எனக்கு. ஒரு மணி நேரத்தில் மறுபடியும் உருப்படியாக்கி ஓட்டத் தெரியும், சார்!' — காளியண்ணன் இன்னும் ஏதேதோ அடுக்கிக் கொண்டே போயிருப்பான். ஆனால் அந்த மனிதர் சட்டென்று இடைமறித்தார்.

''ஏன் பொய் சொல்கிறாய்?'' என்றார் அமைதியாக.

''என்ன சார்?''

''நீ சொல்வது அப்பட்டமான பொய்.''

காளியண்ணனின் கண்கள் பயங்கரமாகச் சிவந்தன.

''நிறுத்துங்க சார்... நீங்க ஆபீசரானா என்ன வேணுமோ பேசிடறதா?'' அந்த இளைஞர் அமைதியாகச் சிரித்தார். ''இதிலே கோபப்படுவதற்கு ஒண்ணுமில்லே காளி! நான் மணியடித்த சமயத்திலே நீ இந்த இடத்திலேயே இல்லை என்பதுதான் உண்மை.''

''ஓகோ... டிராலி உங்களைத் தூக்கிக்கிட்டுத் தன்னைப் போலே மேலே வந்திடுச்சாக்கும்!''

''அப்படி நான் சொன்னேனா? ஆனால் டிராலியை மேலே வரப் பண்ணினது நீ இல்லை என்பது மட்டும் நிச்சயம்.''

''நான் இல்லாமே, கொறளியா ஓட்டிச்சு?''

அமைதியாக அந்த மனிதர் அவனுக்கு வந்த சாப்பாட்டைச் சுட்டிக் காட்டினார்.

''இந்தச் சாப்பாடு உனக்காகத் தானே வந்திருக்கு? இதை எடுத்து வந்தது யாரு?''

''யாராயிருந்தா உங்களுக்கென்ன?''

''உனக்குச் சாப்பாடு எடுத்து வருவது உன் தங்கைதான் என்பது எனக்குத் தெரியும்.''

''அதனாலே என்ன?''

''உன் தங்கை இங்கே வரும்போது நீ இங்கே இல்லை. மணியடிப்பதைக் கேட்டு அந்தப் பெண்ணுக்கு ஒரே திகைப்பாய்ப் போயிருக்கு. உன்மேலே புகார் வராமல் காப்பாற்றுவதற்காகத் துணிந்து விசையைப் போட்டு டிராலியை மேலே வரப் பண்ணியிருக்கிறாள்.''

கதவுக்குப் பின்னே மறைந்திருந்த வள்ளிக்கு ஒரே வியப்பு. ''எவ்வளவு கணக்கா, நேரிலே பார்த்த மாதிரி ஒண்ணொண்ணையும் சொல்கிறாரு. பெரிய சாமர்த்தியக்காரர்தான்'' என்று நினைத்துக் கொண்டாள்.

காளியண்ணனுக்கோ ஒரே ஆத்திரம்!

''என்னமோ எல்லாத்தையும் கண்டறிஞ்ச மாதிரி பேசறீங்களே. அபாண்டமா குத்தம் சொன்னா அடுக்காது சார்! எது சொன்னாலும் தகுந்த ருசுவோட சொல்லணும்'' என்று கத்தினான்.

''ருஜு'' தேவையா? உன்கிட்டே கண்ணாடி யிருந்தால் உன் முகத்தை நீயே பார்த்துக் கொள். டியூட்டியிலே இருந்தவன் முகத்திலே இவ்வளவு கீறலும் காயமும் எங்கிருந்து வந்தன? முள் செடியிலே மாட்டிக் கிழித்த மாதிரி சட்டை கூடத் தாறுமாறாகக் கிழிஞ்சிருக்கு. யார் கூடவோ சண்டை போட்டுத் துரத்திக் கொண்டு போயிருக்கிறாய். சண்டை மும்முரத்திலே டியூட்டியை மறந்திருக்கிறாய். உனக்குக் கெட்ட பேர் வரக் கூடாது என்றுதான் உன் தங்கை நிலைமையைச் சமாளித்திருக்கிறாள்.''

''அப்படியே வச்சுப்போம். அதுக்காக என்ன செய்யப் போறீங்க இப்போ? என் மேலே ரிப்போர்ட் எழுதப் போறீங்களா? தாராளமா எழுதிக்குங்க. உங்க ரிப்போர்ட் எங்கே செல்லுபடியாகுதின்னு நானும் பார்த்திடறேன்.''

''காளி, உன்னுடைய வீராப்பைப் பரிசோதிக்க நான் தயாரா யில்லை. ஒருத்தரைப் பற்றி ரிப்போர்ட் எழுத எனக்குப் பிடிக்காது. ஆனால் உன் தங்கைகிட்ட மட்டும் ஒரு வார்த்தை சொல்லி வை. இன்னிக்குச் செய்த


OVALTINE
The Supreme Food Beverage
A scientifically prepared concentration combining the vitalizing and energy giving properties of ripe Barley Malt, pure Creamy Milk together with valuable Natural Phosphatides and Vitamins.
EXTRA VITAMIN FORTIFIED

மாதிரி இனிமேல் என்னிக்கும் செய்ய வேண்டாம். ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆகியிருந்தால் நான் இங்கேயா நின்னு பேசிக்கிட்டிருப்பேன்? டிராலியோட அதல பாதாளத்துப் பாறையிலே மோதிச் சில்லுச் சில்லாச் சிதறிப் போயிருக்க மாட்டேனா?''

கதவுக்கு அப்பாலிருந்து இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த வள்ளி தன்னையும் மீறி ''ஐயையோ!'' என்று கத்திவிட்டாள்.

''உன் தங்கைகூட இங்கேதான் இருக்கு போலிருக்கே!'' என்று கூறிக் கொண்டே கதவின் மறுபக்கம் சென்று பார்த்தார் அந்த இளைஞர். நடுங்கும் உள்ளத்துடன் வள்ளி தலையைக் குனிந்து நின்று கொண்டிருந்தாள்.

''ஓ, நீதான் காளியண்ணனோட தங்கையா?''

காளியண்ணன் இடைமறித்தான்.

''சார், நீங்க பேசறதை எங்கிட்டே பேசிக்குங்க. என் தங்கைகிட்டே எதுவும் நீங்க பேசத் தேவையில்லே'' என்றான்.

''ஏன் காளி, வேறே என்ன பேசப் போறேன்? என் உயிரைப் பத்திரமா மேலே கொண்டு வந்து சேர்த்ததற்கு ரெண்டு நன்றி வார்த்தையாவது உன் தங்கையிடம் சொல்ல வேண்டாமா? இதோ பாரம்மா, இனிமேல் இந்த விஷப் பரீட்சை யெல்லாம் வைத்துக் கொள்ள வேண்டாம். எனக்கு இந்த உலகத்தில் யாரும் கிடையாது. நான் இருந்தாலும் செத்தாலும் யாரும் கவலைப் படப் போவதில்லே. அதனால்தானே என்னமோ என் ஆயுசு கெட்டியாயிருக்கு. ஆனால் ஆயுசு கெட்டியில்லாதவங்க எத்தனை பேர் இருப்பாங்க? அந்த மாதிரி யாராவது வந்திருந்தால் என்ன கதியாயிருக்கும்? நீயே சொல்லு.''

வள்ளிக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. அந்த மனிதரை நிமிர்ந்து பார்க்கக் கூடத் துணிவில்லாமல் நின்று கொண்டிருந்தாள்.

மறுபடியும் ஷெட்டில் மணியடித்தது.

''வேலையைக் கவனி காளி. நான் வருகிறேன்'', என்று கூறி அங்கிருந்து நகர்ந்தார் அந்த மனிதர்.

''எல்லாம் உன்னாலேதான்'' என்று கூறுவது போல் வள்ளியைப் பார்த்து ஒரு முறைப்பு முறைத்து விட்டு வேலையைக் கவனிக்கச் சென்றான் காளியண்ணன். செய்யத் தகாத குற்றம் செய்து விட்டவளைப் போல அந்த இடத்திலேயே அசையாமல் நின்றாள் வள்ளி.

(தொடரும்)

வெள்ளித்திரை

டாப்காபி



இஸ்தான்புல் நகரின் அரண்மனையிலுள்ள அருங்கலைப் பொருள் மியூஸியத்திலிருக்கும் சுல்தானின் விலைமதிப்பற்ற வைரங்கள் இழைக்கப்பட்ட குத்துவாளைக் ளைப்பிக் கொண்டு வருவதற்குத் திட்டமிடுகின்றனர், இருட்டுத் தொழிலில் வல்லவர்களான சிலர். மியூஸியத்துக்குள்ள கட்டுக்காவலோ அபாரமானது. பறவையின் இறகு விழுந்தாலும்கூட மின்சார மணி அலறும். அத்தனை அற்புத சாதனங்களைக் கொண்டது. அதற்கும் மேலாகத் திருடர்கள் திட்டமிடுகிறார்கள். நினைக்கவே முடியாத வகையில் அபாரமான திறமையோடும் துணிச்சலுடனும் ஈடுபடுகின்றனர் பக்காத் திருடர்கள். அவர்களின் திட்டம் போலீஸாருக்கு ஓரளவு புரிந்து அவர்களைக் கண்காணிக்க ஆரம்பிக்கின்றனர். திருடர்களும் உஷாராகிப் போலீஸின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுத் தங்கள் திட்டப்படி அந்த வைரக் குத்து வாளைக் ளைப்பிக் கொண்டு வெளியேறுவது நம்மை மயிர்க்கூச்செரிய வைத்து விடுகிறது. படத்தின் பல இடங்களில் நாம் மூச்சு விடவே மறந்து போய்ப் பிரமிப்புடன் உட்கார்ந்திருக்கிறோம். ஒரு மர்மப் படத்தை எப்படித் தயாரிப்பது என்பதற்கு இப்படம் ஓர் உதாரணமாகும். எத்தனையோ திறமையாகச் செயல்பட்டுப் பொருளை வெளியே கடத்தி வந்தும் கள்வர்கள் கைதாகிறார்கள். அது எப்படி என்பதுதான் இந்தப் படத்தின் சிறப்பான கட்டம். அதையும் விளக்கிவிட்டால் பிறகு படத்தின் ஸஸ்பென்ஸ் கெட்டுவிடாதா? வேண்டாம்.

படம் ஓடும் 120 நிமிடங்களில் கடைசி 40 நிமிடங்கள் படம் பார்ப்பவர்களை நாற்காலியின் முனையில் உட்கார வைக்கும் பெருமை இந்தப் படத்துக்கு உண்டு.


ரா. கணபதி
எழுதும்
காற்றினிலே
வரும்
கீதம்
கல்கி
அடுத்த இதழில் ஆரம்பமாகிறது



தாம்பத்திய வாழ்க்கையில் வெறுப்படைந்து விவாகரத்துக் கோரிய பெண்மணியை நீதிமன்றத்தில் விசாரணை செய்தனர். நீதிபதியைப் பார்த்து அந்தப் பெண்மணி கூறினாள்.

“ஐயா! நீதிபதியவர்களே! என் கணவர் சிந்தனை முழுவதும் குதிரைப் பந்தயத்தைப் பற்றித்தான். காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கைக்குப் போகும் வரை குதிரைகள்! குதிரைகள்! குதிரைகளைப் பற்றிய நினைப்பேதான். இன்னும் கேட்டால் நான்தான் அவருடைய மனைவி என்ற நினைப்புகூட இல்லை. எங்கள் இருவருக்கும் திருமணமான நாளைக்கூட அவர் மறந்துவிட்டார்.”

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கணவன் இப்படிப் பதில் சொன்னான்:

“ஐயா! நீதிபதியவர்களே! என் மனைவி பொய் கூறுகிறாள். எங்கள் இருவருக்கும் திருமணமான நாளை எப்படி மறப்பேன்? ஒருகாலும் மறக்க முடியாது. அந்த நாள் என் இதயத்தின் பொன்னேட்டிலே பொறிக்கப்பட்டுவிட்ட நாளாகும். அந்த நாள்! ஆஹா! அந்த நாள்....

“டெர்பியிலே ‘கெண்ட கி குவீன்’ என்ற குதிரை ஜெயித்துத் தங்கக் கோப்பையைப் பெற்ற நாள். அக்குதிரையின் மீது பணம் கட்டியவர்கள் எல்லாருக்கும் நல்லக்கு நிறைய பவுன்கள் கிடைத்தன. ஆனால் நான்தான் துரதிர்ஷ்டசாலி. அந்தச் சமயம் பார்த்து என் திருமணச் சடங்கில் ஈடுபட்டிருந்தேன்.” - தேஜா

சிந்தனைக்கு

விமர்சகர்: எப்படி ஓடுவது என்பதைக் கற்றுக் கொடுக்கும் நொண்டி.

— போல்லாக்

அறிவுரை: நம்மால் சீக்கிரம் கொடுக்கக் கூடியதும், ஆனால் நம்மால் எளிதில் ஏற்கவியலாததுமான ஒரு விளக்கெண்ணெய்.

— பில்லிங்ஸ்

ஆதாரம்: ‘மிர்ரர்’ தகவல்: வி. மகாலிங்கம்



இளைஞன் ஒருவன் எழுத்தாளரை அணுகி, “நீங்கள் எப்படி எழுதுகிறீர்கள்?” என்று கேட்டான்.

“பேப்பரும் பேனாவும் எடுத்துக் கொள்வேன். பேப்பருக்கு அடியில் ‘முடிந்தது’ என்பதற்கு அடையாளமாக ஒரு கோடு போட்டுவிடுவேன். ஏதாவது ஆரம்பமாகியிருந்தால்தானே முடிய முடியும்? இப்பொழுது எழுதுவதற்கு ஏதாவது ஒரு விஷயம் தோன்றிவிடும்...!” என்றார் அவர். -எம்.எம்.கே.

பிரிட்டனில் சீயூ

ஆடை வாங்க அல்ல — காண!

மான்செஸ்டர் நகரில் நான் தங்கிய போது எலிசபெத் இளவரசியார் தம் திருமணத்தில் உடுத்திய ஆடைகள் அந்நகரப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. இந்த ஆடைகளைக் காண பிரிட்டனின் இரண்டாம் நகரமாகிய மான்செஸ்டர் பெண்கள் கொட்டும் மழையில் கட்டுப்பாடாக நெடுந்தொலைவுக்கு வரிசை முறையில் மணிக்கணக்கில் காத்திருந்ததை நான் என்றும் மறக்க முடியாது.



இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த போது ஒரு முறை சர்க்கரைக் கப்பல்கள் காலம் தாழ்ந்து வந்தன. பங்கீட்டுக்குப் போதிய சர்க்கரைக் கையிருப்பு இல்லாது போகவே, மிகுதியாக வைத்திருப்பவர்கள் எந்தவொரு பங்கீட்டுக் கடையில் கொடுத்துச் சீட்டுப் பெற்றுச் சில வாரங்களில் திரும்பப் பெற்றுக் கொள்ளலாமென அரசியலார் அறிவித்தனர். உடனே பல்லாயிரக் கணக்கான பெண்கள் கூடுதலாயிருந்த சர்க்கரையைக் கடைகளில் கொடுக்க வரிசை முறையில் கட்டுப்பாடாகக் காத்திருந்து தந்தனராம்.

ஆதாரம்: திரு சோமலே. எழுதிய “என் பிரயாண நினைவுகள்”

தகவல்: ஏத்தாளம் வி. சுப்பிரதன்.



சாலையில் காராகவும், வானத்தில் விமானமாகவும் பயன்படக் கூடிய “விமானக் கார்” ஒன்று மேற்கு ஜெர்மனியில் உருவாக்கப் பட்டிருக்கிறது. அதில் நான்கு சக்கரங்கள் பொருத்தப் பட்டுள்ளன. காற்றாடிகளை இயக்கி அதை ஹெலிகாப்டர் விமானமாகப் பயன் படுத்தலாம். மற்றொரு பொத்தானை அமுக்கினால், காராகச் சாலையில் செல்கிறது. - யூ. பி. எஸ்.



மனைவி: ஏங்க.... இன்னிக்கிக் காலேயிலேருந்து கண்ணே உறுத்திண்டே இருக்கு. என்ன செய்யலாம்...?

கணவன்: என் பாக்கெட்டிலே இருக்கிற பத்து ரூபாயை எடுத்துக்கோ.... அதுதான் கண்ணே உறுத்தி யிருக்கும்...!

-விஜய்

அத்தி மரம்!



மாக்ஸ் ஈஸ்ட்மன் என்னும் ஆசிரியர் நகைச்சுவை ததும்ப எழுதுபவர். பேச்சிலும்கூட நகைச்சுவை நிரம்பி இருக்கும். ஒரு நாள் அவருடைய நண்பர் ஒருவர் அவரைப் பார்க்க வந்தார். அவர் பெயர் லீஸ்ரோ. அவருடைய முகம் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தது. என்னவென்று விசாரித்தார் ஈஸ்ட்மன்.

"எங்கள் வீட்டுத் தோட்டத்து அத்திமரக் கிளையில் கயிற்றைக் கட்டி அதில் தூக்குமாட்டிக் கொண்டு இறந்துவிட்டாள் என் மனைவி" என்று கூறிக் கோவெனக் கதறினார் லீஸ்ரோ.

ஈஸ்ட்மன் அவருக்கு ஆறுதல் கூறினார். "நண்பரே! நான் கேட்கிறேன் என்று கோபித்துக் கொள்ளக் கூடாது. அந்த அத்திமரக் கிளைகள் உறுதியாகத்தானே இருந்தன? எனவே, அதன் விதை ஒன்று கொண்டு வந்து கொடுத்தீர்களானால் என் வீட்டுத் தோட்டத்தில் நட்டு வளர்க்கிறேன். என்றாவது என் மனைவிக்குப் பயன்படும்!" -எம். ஆர்

ஆதாரம்: மாக்ஸ் ஈஸ்ட்மன் சுயசரிதை.



யார் திருடன்?

அன்று பௌர்ணமி. இரவு மணி இரண்டு இருக்கும். ஒரு திருடன் தன் தொழில் நிமித்தம் ஒரு வண்ணான் வீட்டில் நுழைந்தான். வீட்டில் வண்ணான் இல்லை. அவன் மனைவி மட்டும் இருந்தாள். திருடன் சுற்றும் முற்றும் பார்த்தான். தான் திருடிச் செல்வதற்கு அங்கு ஒரு பொருளும் இல்லை. ஒரு மூலையில் தவிடு ஏராளமாகக் காணப்பட்டது. அதில் ஒரு பகுதியையாவது எடுத்துச் செல்லலாம் எனக் கருதினான்.

வீட்டின் நடுவே சிறிய முற்றம் இருந்தது. தன்னுடைய மேல்துண்டைப் போட்டான். நிலா பட்டுப்போல் வீசியது. தவிடு எடுத்துவர உள்ளே சென்றான். வண்ணானின் மனைவி தூங்காது இதையெல்லாம் கவனித்து வந்தாள். அவன், தவிடு எடுக்கச் சென்றபோது அவனது துண்டைச் சுருட்டி எடுத்து வைத்துக் கொண்டாள். நிலவொளியில் துண்டு இல்லாததைக் கவனிக்காத அவன் தவிட்டைக் கொண்டு வந்து முற்றத்தில் கொட்டினான். துண்டின் நான்கு முனைகளையும் சேர்த்துக் கட்ட நினைத்துத் தரையை வருடினான். துண்டு இருந்தால் தானே கட்ட முடியும்? அதற்குள் வண்ணாத்தி, "திருடன், திருடன்" என்று சப்தமிடத் தொடங்கி விட்டாள். திருடனுக்கு ஒரே ஆத்திரம். "அடி பாவி! திருட வந்த எனது துண்டையே திருடி வைத்துக் கொண்டு விட்டு, 'திருடன், திருடன்' எனக் கத்துகிறாயே! நான் திருடனா? அல்லது நீ திருடியா? என்று நீர் மானித்துக் கொண்டல்லவா பிறகு கத்த வேண்டும்?" என்றான்.

தற்காலம் ஒருவரை யொருவர் ஏமாற்றிப் பிழைக்கும் காலமாக இருக்கிறது என்பதற்கு உதாரணமாக இந்தக் கதையைச் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் ஓர் உபந்யாஸத்தில் கூறினார்.

தகவல்: எஸ். என். மூர்த்தி

உங்களுக்குத் தெரியுமா?

கீழே காணும் இடங்களும் பெயர்களும் உங்களுக்கு வியப்பளிக்கலாம்.

- ரொட்டி (Rotti) இந்தோனேஷியாவில் உள்ள ஒரு தீவு.
- வாடை (Wadai) கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு ஜில்லா.
- போட்டி (Poti) ரஷ்யாவின் ஒரு துறைமுகம்.
- பட்டாணி (Patani) தாய்லாந்திலுள்ள ஒரு துறைமுகம்.


உங்களுக்கு மேலே கூறியுள்ளவை சரிதானா என்று சந்தேகமிருந்தால் ஏதாவதோர் 'என்ஸைக்லோபிடியா'வை எடுத்துத்தான் பாருங்களேன்.

தகவல்: சத்தியமூர்த்தி


புல்லரிக்கும் மக்ளீன்ஸ்
சுவை மூலம்
உங்கள் வாய்க்குப் புதுமலர்ச்சி புகட்டுவீர்!
Macleans
TOOTH PASTE
மக்ளீன்ஸ்
3 வகைகளில் செயலாற்றுகிறது
1 சுத்தமாக்க— சொத்தை விழக் காரணமான உணவுத் துணுக்குகளை அகற்றுகிறது.
2 வெண்மையாக்க— மங்கல் படலத்தைப் போக்கிப் பற்களுக்கு மெருகிடுகிறது.
3 காக்க— திட வலுவுள்ள ஆரோக்கியமுடன் உங்கள் பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கிறது.
அதிவெண்மையான பற்களுக்கு—
மக்ளீன்ஸ்

கலைஞர்களில் ஒரு மனிதர்





ஒரு பெரிய பருத்திக் காடு. காய்கள் முற்றிக் கனிந்து காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன. 'படீ'ரென்று வெடித்துப் பிளந்த ஒரு காயிலிருந்து பஞ்சுத் துணுக்கு ஒன்று வெளிப்பட்டு மேலே கிளம்புகிறது. காற்றின் அலைக்கழிப்பில் மேலே அது போய்க் கொண்டேயிருக்கிறது. வெகு உயரத்தில் போன பிறகு அண்ணாந்து பார்க்கிறது. அதன் தலைக்கு மேலே வெள்ளை வெளேரென்று ஒரு மேகம் வானத்திலே உல்லாசமாகப் பவனி வந்து கொண்டிருக்கிறது. 'அட! நாம்தான் எல்லோரைக் காட்டிலும் வெளுப்பு என்று நினைத்தோம். நம்மையும் விட வெளுப்பாக ஒரு பொருள் இருக்கிறதே!' என்று நினைத்துப் ,பொருமுகிறது பஞ்சுத் துணுக்கு. அப்போது திடீரென்று அந்த வெண் மேகம் மழை தரும் கருமேகமாக உருமாறுகிறது. பஞ்சு தன்னையே பெருமிதத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்தக் கருமேகம் மழையைப் பொழிகிறது. துணுக்கு தொப்பலாக நனைந்து விடுகிறது.

'கொஞ்சம் உடலைச் சூடுபடுத்திக்கொண்டு அப்புறம் மேலே போகலாம் என்று நிர்மானித்துப் பஞ்சு கீழே இறங்குகிறது. அது இறங்குகிற இடம் நூலுக்குச் சாயம் தோய்ப்பவர் ஒருவருடைய வீடு. நிறையப் பாத்திரங்களில் சாயம் கரைத்து வைத்திருக்கிறார்கள். பக்கத்திலேயே வண்ணச் சாயம் பூண்ட நூல் கற்றைகள் கயிற்றில் தொங்கிக் காற்றில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்து, 'நம்மை இன்னும் அழகுபடுத்திக் கொள்ள இப்படி ஒரு வழி இருக்கிறது போலிருக்கிறதே' என்று எண்ணும் பஞ்சுத் துணுக்கு ஒரு பாத்திரத்தில் போய்த் 'தொப்' பென்று குதிக்கிறது. சாயம் தோய்த்துக் கொண்டு வெளியே வந்து பார்த்தால்... அடடா! அவசரப்பட்டுக் கறுப்பு வர்ணத்தில் அல்லவா போய்க் குதித்திருக்கிறோம்!... 'இனி என்ன செய்வது' என்று கவலையுடன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே சாயக்காரர் அந்தப் பக்கமாக வருகிறார். அவரும் ஏதோ ஞாபகத்தில் ஒரு கற்றையைத் தவறான வண்ணத்தில் தோய்த்தெடுத்து விட்டார். எனவே அந்தக் கற்றையை வண்ண நீக்கி கலந்த திரவத்தில் தோய்த்தெடுக்கிறார். வேண்டாத வர்ணம் ஓடிப் போய் விடுகிறது. இதையே பார்த்துக் கொண்டிருக்கும் பஞ்சு தானும் அந்த வண்ண நீக்கியில் மூழ்கி எழுந்து பழையபடி வெண்மையடைந்து, அங்கிருந்து ஆனந்தமாகப் புறப்பட்டுத் தன் யாத்திரையைத் தொடர்கிறது....

யாரோ ஒரு குழந்தை எழுத்தாளர் எழுதிய கதை இது என்று நினைத்தோமானால், தவறு நம்முடையதுதான். இந்தக் கதையின் ஆசிரியர் ஓர் எழுத்தாளரே அல்ல. அவர்

ஒரு கலைஞர். ஆம். திரு கலாசாகரம் ராஜகோபால் அவர்கள் எழுதியிருக்கும் கதையின் ஒரு பகுதிதான் இது. குழந்தைகளுக்கென முற்றிலும் புதிய முறையில் ஓர் அதியற்புத வண்ணத் திரைப் படத்தை உருவாக்கித் தரவேண்டும் என்ற ஆவல்தான் கலைஞரைக் கதாசிரியராக மாற்றியிருக்கிறது.

ஓவியம், சிற்பம் — இவ்விரு கலைகளிலும் வல்லவராக இவரை உருவாக்கிய கலைப் பள்ளியில் இவர் எப்படிச் சேர்ந்தார்?

அங்கே உதவிப் பிரின்சிபாலாக இருந்தவர் இவரது குடும்பத்துக்கு வேண்டியவரானதால் முறைப்படி மனு, கினு எதுவும் போடாமலே வகுப்பில் கொண்டு போய் உட்கார்த்தி விட்டார் அவர். ஆனால் வகுப்புக்கு வந்த கல்லூரி முதல்வர் (திரு ராய் சௌத்ரி) அவரை வெளியேற்றி விட்டார். உதவியிடம் போய்ச் சொன்னார் ராஜகோபால். "அவர் இல்லாத சமயமாகப் பார்த்துப் போய் உட்கார்ந்து விடு!" என்று யோசனை கூறினார் உதவி. மறுபடியும் வகுப்பிலே வந்து உட்கார்ந்த இந்த விடாக்கண்டரைப் பார்த்தார் முதல்வர். உடனே அனுப்பி விட்டார் — 'மாடலிங்' பகுதியில் பயிற்சி பெற.

அந்தப் பிரிவில் இவர் முதல் முதலில் செய்தது மண்டையோடு ஒன்றின் மாதிரி. அதைப் பார்த்த சௌத்ரி, "இதை நீயாகவே செய்தாயா அல்லது வேறு யாரேனும் உதவி செய்தார்களா?" என்று கேட்டார். "நானேதான் செய்தேன்!" என்று பதில் கிடைத்ததும், ராஜகோபாலை முறைத்துப் பார்த்துவிட்டுப் போய்விட்டார்.

அவரது முறைப்புக்குப் பொருள் என்னவென்று இருபத்து நான்கு மணி நேரத்துக்குப் பிறகுதான் தெரிந்தது. மறுநாள் முதல்வரிடமிருந்து ராஜகோபாலுக்கு ஒரு கடிதம் வந்தது. அதிலே அவருக்கு மாதம் பதினைந்து ரூபாய் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டிருப்பதாகக் கண்டிருந்தது!

கலைப் பள்ளியில் நான்கு ஆண்டுகள் பயின்று, இறுதித் தேர்வில் முதன்மையாக வந்து தங்கப் பதக்கமும் பரிசு பெற்ற இவர் தமது தேர்ச்சிக்குச் சான்றான 'டிப்ளமா'வை மட்டும் வாங்கிக் கொள்ளவே யில்லை.

கலைகளுக்கு ஒரு சங்கமமான கலாக்ஷேத்திரத்தில் இந்தக் கலாசாகரமும் போய்ச் சங்கமித்ததுண்டு. இங்கே இவர் கற்பித்தது: சித்திரம், சிற்பக் கலை. கற்றது: கதகளி.

இவரை ஒரு சினிமா ஸ்டுடியோக்காரர் ஆர்ட் டைரக்டராக இருக்கும்படி அழைத்தார், அறுநூறு ரூபாய் சம்பளத்தில். ராஜகோபாலுக்கு விருப்பமில்லை. ஆனால் ஸ்டுடியோக்காரர் வலுக்கட்டாயமாக அழைத்துக் கொண்டு போய் விட்டார். ஆறு மாதங்கள் இருந்து பார்த்தார். பணம் மட்டும் வந்து கொண்டிருந்தது. வேலை தான் கிடையாது. திடீரென்று ஒரு நாள் முதலாளியிடம் போய், "நாளைமுதல் ஆயிரத்திருநூறு ரூபாய் கொடுப்பதானால் இருக்கிறேன். இல்லாவிட்டால் விலகிக்கொள்கிறேன்..." என்றார். முதலாளி விஷயம் புரியாமல் விழித்தார். "நீங்கள் எனக்கு ஏதாவது வேலை கொடுப்பதானால் இந்த அறுநூறு ரூபாயே போதும். சும்மா உட்கார்த்தி வைப்பதானால் அதிகமாகக் கொடுங்கள்... நான் அனுபவிக்கும் வேதனைக்கு ஈடாகவாவது இருக்கட்டும்!..." என்றார். இன்னும் சில மாதங்களுக்குத் தமக்கு — தம் திறமைக்கு — அங்கே வேலை இருக்காது என்று தெரிந்தவுடன் ஒரு கும்பிடு போட்டு விட்டு வெளியே வந்து விட்டார்.

நாடக மேடையில் முப்பரிமாண உத்தியையும் சுழலும் அரங்கத்தையும் முதன் முறையாக அமைத்துக் காட்டிப் புகழ் பெற்றிருக்கும் கலாசாகரம் முப்பது வருடங்களுக்கு முன்பே தமக்கென்று ஒரு தனி வழியை உண்டாக்கிக் கொண்டிருப்பதுடன், அதன்படியே பல அருமையான சிற்பங்களையும் உருவாக்கி யிருக்கிறார்.

பில் என்ற ஆங்கிலேய நீதிபதியின் சிலையைச் செய்து கொடுத்தார் ஒரு முறை. அதற்கு இவர் 'பில்' போடவில்லை. சன்மானமாக நூறு ரூபாய் கொடுத்தார் அவர். திருப்தியுடன் வாங்கிக் கொண்ட ராஜகோபாலைத் திக்குமுக்காடச் செய்து விட்டது, அதைத் தொடர்ந்து மாதந்தோறும் அந்த ஆங்கிலேயர் அனுப்பிய நூறு ரூபாய்.

தலைவர்கள் சிலைகள் செய்வதற்கென அரசாங்கத்தாரிடமிருந்து அழைப்பு வருமே?...

வருகிறதாம்; டெண்டர் கோருகிறார்களாம். ஆனால் இவர் அவற்றுக்குப் பதில் கூடப் போடுவதில்லை. காரணம்? "அரியக்குடி ராமானுஜ அய்யங்காரின் கச்சேரியைக் கேட்க வேண்டுமானால் அவரையே அழைத்துத்தான் பாடச் சொல்லிக் கேட்க வேண்டும்..... 'அரியக்குடி போல் எத்தனை பேரால் பாட முடியும்?' என்று டெண்டர் விட்டுக் கொண்டிருந்தால் எப்படி?... அதே போலத்தான் இந்த விவகாரமும்!" என்கிறார் சிரித்துக் கொண்டே.

பல்கலைஞரான இவர் மரத்தைக் கொண்டு 'ஸ்பிரிங்' செய்ய முடியுமா? என்று ஆராய்ச்சி செய்து வெற்றியும் கண்டிருக்கிறார். (ஒன்றரையடி நீளம் கொண்ட அந்த 'மர—ஸ்பிரிங்' கையால் வளைத்தால் வளைகிறது!)

சொந்த வீடு என்று இருந்தாலும் அதில் நமக்கென்று ஒரு தனியறையை ஒதுக்கிக் கொள்கிறோமல்லவா? அந்த அறைக்குள் நுழைந்தால் ஓர் ஒட்டுறவு, ஒரு பாந்தம், தன் இடத்தில் இருக்கிற ஓர் உணர்வு— எல்லாம் ஏற்படுகின்றன அல்லவா?... அதே போலக் கலாசாகரத்துக்குச் சிற்பம்தான் இந்த ஸ்வக்ஷேத்திரம். நாடக அரங்கில் புது உத்திகளைப் புகுத்தலாம்; வீடுகளை அலங்கரிப்பதற்கென ஆயிரம் யோசனைகளைக் கூறலாம். திரைப்படத்தில் கலையம்சம் மிளிரும்படி செய்யலாம். ஆனால் இத்தனை செய்தாலும் 'பச்சை மண்ணைத் தொடும்போது தான் கை, அகம் எல்லாம் குளிர்கின்றன. மெய் சிலிர்க்கிறது' என்கிறார் அவர். மண் அவருக்குத் தாய்ச் சரக்கு. சிற்பம்தான் அவர் கலையுணர்வு வாழும் கருவறை.

கலாசாகரத்தின் ஒரே ஓர் ஆசை: நம் நாட்டுக் குழந்தைகள் மனத்தில் நிலைத்து நிற்கும்படியாக ஒரு சிற்பம் செய்துவிட வேண்டும்!

— முகுந்தன்



பாட்டாளி மகன் பழனிக்கு மூன்று செல்வங்கள், தங்கம், மாணிக்கம், ரத்தினம் என்று. 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பது போல, பழனி குருடனாகி அவர்களை மேலும் அநாதைகளாக்கிவிட்டுச் சென்று விடுகிறான். சின்னஞ் சிறு வயசில் மூன்று குழந்தைகளும் பலவித இன்னல்களை அனுபவிக்கின்றனர். பெரியவர்களான பிறகாவது இம்மூவருக்கும் விடிவு பிறந்ததா? நடு நடுவே இவ்வேழைகளுக்குப் பணக்கார இடங்களில் ஒதுங்க இடம் கிடைக்கிறது — அங்கும் மேலும் மேலும் பல சோதனைகள் தொடர்கின்றன.

தங்கம் தன் பணக்காரக் காதலனைப் பெற்றும் வாரி விபத்தில் பறி கொடுத்துச் சித்திரவதைக் குள்ளாகிறாள். மாணிக்கம் நாடக நடிகனாகி, பிறகு பணக்கார இடத்தில் ஒதுங்க அவனுக்குத் திருட்டுப் பட்டமும், தண்டனையும்தான் கிடைக்கின்றன! விடுதலை பெற்ற மாணிக்கம் கடைசியில் பெருங்குடியனாகி, விதவை அக்கா தங்கத்தின் கற்பைச் சூறையாட வரும் யமனாகிறான்.

துக்கப்படுவதற்கே பிறந்த தங்கத்தின் மரண சமாதியில் குருட்டுத் தந்தையும், சகோதரர்களும் ஒன்று கூடுகின்றனர்.

கலைஞர் கருணாநிதியின் வசனங்கள் நம்மை மறக்க முடியாமல் நெஞ்சை நெகிழ்விக்கின்றன. மாதிரிக்கு இரண்டு இடங்கள்:

ஹாஸ்யம்: படிக்காத மேதை மாணிக்கம் படித்த மேதை சேகரிடம்: ''எப்பா! எவ்வளவு படிப்பு? எத்தனை டிகிரி வாங்கியிருக்கே? நம்ம டிகிரி ஏதாவது ஜுரம் அடித்தால்தான்!''


சோகம்: ''பாவம் செய்தவர்களுக்கு எங்கேயோ நரகம்; பொம்பளை ஜென்மத்துக்குப் பூலோகமே நரகம்!''

ஒரு குறை: அடுத்த வீட்டுப் பெண்மணி அநாதைக் குழந்தைகளுக்கு அரிசி வழங்கிப் பசிப் பிணியிலிருந்து மீட்கிறாள்! ஆனால் குழந்தைகள் பாடுகின்றனர்: 'அழுவதைக் கேட்க ஆளும் இல்லே, ஆறுதல் வழங்க யாருமே இல்லே' என்று!

தேவிகா தங்கமாக வந்து ஏழைகளின் கஷ்டங்களை அநுபவிக்கிறாள். மாஸ் அப்பீல் காட்சிக்குக் காஞ்சனா வந்து விடுகிறாள்! கிருஷ்ணர் வேஷத்தில் வந்த ராஜேந்திரன் சங்கீத ரஸிகசிகாமணி சாரங்கபாணியை ஆட வைக்கிறார்! அயரவைக்கிறார்; நம்மைச் சிரிக்க வைக்கிறார்! 'சோ' ஆடிக் குதித்துப் புது மொழிகளை உதிர்த்து, ஏழைகளின் 'நீலி'யை எடுத்தியம்புகிறார்!

ஒளிப்பதிவு கண்ணுக்கு இனிமையாயிருக்கிறது. முரசொலி மாறனின் டைரக்ஷனில் தயாராகியுள்ள இந்தப் படத்தை நல்ல கதைக்காகவும், வசனங்களுக்காகவும் ரஸிகர்கள் விரும்பி வரவேற்பார்கள்.

கருணாநிதியின் படம்தான்; ஆனால் பிரசார நோக்கு மாதிரிக்குக்கூட இல்லே.



உங்கள் கேசம் உதிருகிறதா?

இம் மாதிரி அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்:



★ கேசம் குறைதல்
★ மெழுக்கென்ற, துவண்ட ரோமம்



இளமையில் வழுக்கை
இக் நிலை ஏற்படுவதைப் பெரும்பாலும் தடுத்திருக்க முடியும்.

கேசம் குறைதல், ரோம உதிர்வு ஆகியவை உங்களைப் பாதித்தால் இன்றே ப்யூர் சில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்குங்கள். உங்கள் ரோமத்திற்கு ஆக்கம் தரும் பதினெட்டு அமினோ-அமிலங்கள் யாவும் அடர்வான நிலையிலே செறிந்துள்ளது ப்யூர் சில்விக்ரின். உச்சந் தலையிலே அழுத்தித் தேய்த்தால் ப்யூர் சில்விக்ரின் மயிர்க்கால்களை ஊடுருவி, நீடித்த நலனைக் கேசத்திற்கு மீட்டுக் கொடுக்கத் தேவைப்படும் இயற்கையான ஊட்டத்தை வழங்குகிறது.
ஆல் அபௌட் ஹேர் (ALL ABOUT HAIR) என்ற, படங்கள் கொண்ட இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினீர்களானால் இவ் விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1, சில்விக்ரின் அட்வைசரி சர்விஸ், தபால் பை 727, பம்பாய் 1.

Silvikrin

சில்விக்ரின் – கேச ஆரோக்கியத்திற்கான வழி



ப்யூர் சில்விக்ரின
கேசக் கோளாறுகளின் சிகிச்சைக்கான நேரு தீவிர குணம் செறிந்த தயாரிப்பு. ஒரு மாத சிகிச்சைக்குப் போதுமானது.

சில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்
நாள் முழுதும் உங்கள் கேசத்தைப் பாங்காகப் படிய வைத்திருக்கும். கேசக்கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கப் போதுமான ப்யூர் சில்விக்ரின் அடங்கியது.




SP/I/F/3/66

மனச்சாந்தி

கோமகள்

வெள்ளி விழா சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற கதை

2





அந்த நேரத்தின் உணர்வுகளை இட்டு நிரப்பியவாறே காலை வெய்யிலின் உக்கிரம் இலேசாகக் கொழுந்து விட ஆரம்பித்தது. கிழக்கேயிருந்து கோவில் மணி 'ராம் ராம்' என்று முழங்கிக் கோயிலின் பூஜை நேரத்தை அறிவித்துக் கொண்டிருந்தது.

ஜபதபங்களை முடித்தானதும் துளசி தீர்த்தத்தை உள்ளங் கையில் விட்டு உறிஞ்சிவிட்டு அங்கவஸ்திரத்தின் நுனியில் கைகளைத் துடைத்துக் கொண்டார் ரங்கநாதன். ரகுகுல திலகவின் நடுநெற்றித் திருமண்ணாக ஒளிரும் பூஜை விளக்கின் மெல்லிய சுடரைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தவாறே நின்ற போது, வாசற்படியில் நிழலாடியது. அவர் கைகளைப் புருவமேட்டில் வைத்து உற்றுக்கவனித்தார்.



கண்களின் சுருங்கிய விரிவில் வாசற்படியில் நின்ற உருவம் புலப்பட்டது. நெற்றியிலும், கைகளிலும், கழுத்திலும், மார்பிலும் திருநாமம் துலங்க வயதான தோற்றத்தின் பலஹீனம் மின்ன நிற்பவரின் க்ஷவரம் செய்யாத முகம் பொலிவு குன்றிக் கிடந்தது.

""நான்தான் வரதாச்சாரி!"" என்று குரல் வந்தது.

""ஓ! ஸ்வாமிகளா? வாருங்கோ! இப்படி விசுப்பலகையிலே உட்கார்ந்துக்குங்கோ"" என்று மரியாதையோடு வரவேற்றார் ரங்கநாதன்.

தாழ்வாரத்தின் ஓரம் விசுப்பலகை ஒன்று கிடந்தது. அதில் வரதாச்சாரி பவ்யமாக, அவர் மரியாதையை ஏற்றவாறே அமர்ந்தார்.

விசிறி ஒன்றை எடுத்து வந்து வரதாச்சாரியிடம் தந்துவிட்டுத் தாமும் ஓர் ஓரம் அமர்ந்த ரங்க

நாதன் ''நல்ல வெய்யிலில் வந்திருக்கீங்களே, சமீபத்திலே நம்ம வீட்டிலே 'திதி கிதி' வரதை நினைவுபடுத்த வந்தேளா? உம்.... இப்போது மாசி நடக்கிறது. பங்குனி கடைசியிலேன்னு நம்ப கிச்சாக்குத் திதி வரும்!'' என்று தீவிர யோசனையோடு கூறினார்.

''அது விஷயமா வரல்லே நான்! ஐயா! நீங்க எந்தக் காலத்திலே இருக்கீங்க? இந்தக் கிராமத்திலே இப்போ யார் ஐயா உங்களைப் போலப் புரோகிதத்துக்கு எதிர்பார்க்கிறா? ஏதோ உங்க குடும்பம் ஒண்ணும், உங்க தூரத்து மச்சினர் ஒருவரும் தானே சாஸ்திரப்படி சம்பந்தப்பட்டதை நம்பி என்னைக் கூப்பிடறேள்? தெவசம் பண்றது உங்க குடும்பம் மட்டும்தான் ஐயா! வேறே யாரும் பண்றதில்லே. ராகு காலத்திலே கல்யாணம் பண்ற சீர்திருத்தக்காரங்க இங்கே நிறைஞ்சுட்டாங்க ஐயா. அது மட்டுமா? வர்ணாசிரம தர்மப்படி இப்படி ஒரு ஜாதியை அதிலேயும் அர்ச்சனை பண்ற ஜாதியை நிர்மாணிச்சுட்டு, இப்போ கேலி பேசறதும், 'சுரண்டல் பேர்வழி'ன்னு ஏளனம் பண்றதும் கேவலமில்லையா ஐயா? எனக்கு மரியாதை தர வேண்டாம். நான் செய்யற தெய்வ காரியத்தையாவது மதிக்க வேண்டாமா ? நானும் மனுஷன்தானே ஐயா? சநாதன சின்னங்களை இகழ்றதும், போகிற போதும், வருகிற போதும், குத்தலாப் பேசறதும், கேட்கச் சகிக்க முடியல்லே. அது போகட்டும். கோயில் வாசல்லே நின்னு பீடி சிக்ரெட் குடிக்கிறதை நான் தடுக்க முடியறதா? கோயில் மதிலைச் சுற்றி அசிங்கம் பண்றதைக் கண்டிக்க முடியறதா? நான் இந்தக் கிராமத்துக்குப் பிழைக்க வந்தவன். வாய் பேசினால் கொஞ்சம் நஞ்சம் கிடைக்கிற வருமானத்திலேயும் மண். 'ராமா, நீயே பார்த்து நல்ல புத்தியைக் கொடுப்பா'ன்னு ரகசியமா பிரார்த்திச்சுக்கிறதோட நின்னுக்கிறேன்.......

''நீங்க தினசரி கோயிலுக்கு வந்திண்டிருக்கச்சே இத்தனை மோசமில்லே, ஐயா! ஒரு பத்து நாள் முன்னே கோயிலுக்குப் பின்னாடி ஒரு கூட்டம் போட்டிருந்தாங்க. ஏதோ கலையாம். நடனமாம். அதுக்குச் சினிமா நடிகர் தலைமையாம். கோயில் பூஜை நடக்க முடியாத அளவு, ஒரே சத்தமும் பேச்சும், பாட்டும் இமிலோகப்பட்டன. இந்தக் காலத்திலே கடவுளுக்கு மதிப்பில்லே. சினிமா நடிகருக்கு ஏக மதிப்பு.

''அன்னிக்கு என் ராமன் வழிகாட்டினான் வரும்படி, வந்தேன். இன்னிக்கு அவன் வழி சொல்லலே. கண்ணையும், காதையும் மூடிண்டு, நான் செய்யற பூஜையைக்கூடக் கேட்டுக்காமல் இருக்கான். அதனால் நான் வந்த வழியே திரும்பணும் போல் இருக்கு. உங்க உத்தரவும், சகாயமும் தேவை'' என்றார்.

''ஸ்வாமிகளே! அப்படிச் சொல்லாதீங்கோ, அதை மட்டும் சொல்லாதீங்கோ!'' என்று பதறினார் ரங்கநாதன். ''உங்கள் கைத்தனிகை உண்டு பழகிய என் அப்பன் ராமனைப் பட்டினி போட்டு விடாதீங்கோ. உங்களுக்கு இதுதான் ஊர். இனி தலைமுறை, தலைமுறைக்கும் இதேதான் ஊர். இப்படிச் சொல்லித்தான் அன்று உங்களை உங்களூரிலிருந்து கொண்டு வந்தேன்....''

''மெய்தான். உண்மையைக் கேட்டால் நான் வறுமையைக் கண்டுகூடப் பயப்படலே. எனக்கு வேண்டியது பண பலம் இல்லே. ஜனபலம்தான். எனக்கு இங்கே ஜனப் பாதுகாப்பு இல்லே. நான் ஏளனப்படுத்தப்படறேன். பாதுகாப்பில்லாமப் போனதாலே பிறர் அலட்சியப்படுத்தற அளவுக்கும் மேலே போயாச்சு. அவன்கள் இத்தனை தூரம் துணிஞ்சிட்டான்கள். அதைச் சொல்லவே கூசறது ஐயா. நான் ஏழை. தீனன். உங்களைத் தவிர இப்போ, யார்கிட்டேயும் நான் எதையும் வாய் திறந்து கேட்க முடியாது. தயவு செய்து தப்பாக நினைக்காதீர்கள்!''

''உங்கள் மனக் குறைக்கு மாற்றுத் தேட முயல்கிறேன்.''

''ஆண்டாளோட வாழ்க்கை நன்னு அமையணும்னு நானே ராத்திரிக்கே ரகசியமா எங்களை இந்த ஊரை விட்டு எங்கள் ஊருக்குக் கொண்டு போய் விட்டுடுங்க. உங்களுக்குக் கோடிப் புண்ணியமுண்டு.''

கொட்டி விட்டோம் பாரத்தை, ரங்கநாதன் ஏற்று விடுவார் என்ற நம்பிக்கையிலிர அவர் நடந்தார். ரங்கநாதன் தடுமாறினார். வரதாச்சாரி, புரிந்த வார்த்தைகளால், புரியாத விடுகதை ஒன்றைச் சொல்லி விட்டுப் போய் விட்டார். விடுவித்துக் கண்டு பிடிக்க வேண்டும்.... 'ஆண்டாளோட வாழ்க்கை நன்னு இருக்கணும்னு....?' என்றொரு சொல் போட்டாரே? அப்படியானால் ஆண்டாளைப் பொறுத்த விஷயம் என்று அர்த்தமா? ரங்கநாதன் வெகுநேரம் வரையில் விசுப் பலகையிலேயே அமர்ந்து யோசனையில் ஆழ்ந்தார்.

மனையில் அமர்ந்து தம்ளர் நீர்த்தத்தை வாழை இலையில் தெளித்து விட்டு, ரங்கநாதன் சாப்பிட அமர்ந்தார். கறியமுதைப் பரிமாறியவாறே லட்சுமி அம்மாள், ''நான் கேள்விப்பட்டது வாஸ்தவம்தான் போலே இருக்கு. பாவம்! அவருக்கு இப்படி ஒரு துயரம் கேவலமா வர வேண்டாம். முதல் காரியமா அவா குடும்பத்தைக் கொண்டு வந்த மாதிரி, கொண்டு விட்டுடுங்கோ. அந்தப் பாவம் நமக்கு ஏன்?'' என்றாள்.

''என்ன சொல்றே, லட்சுமி? உனக்கு ஏதாவது தெரியுமா?''

''தெரிஞ்சுதான் சொல்றேன். முதல்லே நான் நம்பலே. வரதாச்சாரியே கோடி காட்டிட்டுப் போறதைப் பார்த்தால்....'' என்று அவள் தான் அறிந்ததைக் கூறினாள். கேட்டு ரங்கநாதனின் மெய்யும், மனமும் பதறின.

ஊரில் குறிப்பிடத்தக்க செல்வந்தருள் ஒருவர் ரங்கநாதன். ஆனால் வெறும் பகட்டு ஆசைகளுக்கும், படாடோபத்துக்கும் இடமின்றி வாழ்ந்த பக்தர் அவர். ராமர் கோயில் கட்டிய புதிதில் ஊர்ப் புரோகிதத்தையும், கோயில் பூஜையையும் கவனித்துக் கொள்ள ஒருவரை நியமிக்க எண்ணினார்.

அப்படி ஓர் ஆசார சீலரைத் தேடி அழைத்து வருவதற்காகத் திருவரங்கத்துக்குப் பயணமானார்.

நல்ல சநாதன பரம்பரையில், ஒரே குடும்பத்தில் ஏழெட்டுச் சகோதரர்களாக இருந்த வரதாச்சாரியை, விசாரித்தறிந்து குடும்பத்தோடு அவரைத் தம் காரிலேயே அழைத்து வந்தார். வரதாச்சாரியின் வயதான தாயாருக்கு இதில் மகத்தான விருப்பம். ஒரு பக்திமான் விரும்பி அழைக்கும்போது அங்கு போய்ப் பணி புரிவது நல்லதென ஆசி கூறி மகனை மனைவி, பிள்ளைகள் சகிதம் அனுப்பி வைத்தாள்.

ரங்கநாதன் தம் செலவிலேயே அவருக்குக் குடியிருக்க வீடு கட்டிக் கொடுத்தார்.

இங்கு வந்தபின் குடும்பம் பெருகி வரதாச்சாரி பிள்ளைகுட்டிக்காரராகி விட்டார். செலவுகள் அதிகரித்தன. பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் கல்யாணத்தைப் பண்ணி வைத்தார். மூத்த பிள்ளை ராமர் கோயில் பொறுப்பை ஏற்க, இளையவன் புரோகிதத்தை ஏற்றுக் கொண்டான். வரதாச்சாரி வயது முதிர்வை ஓய்வோடு கழிக்க வேண்டியதுதான். அவரது கடைக்குட்டிப் பெண் ஆண்டாளுக்குத்தான் கல்யாணம் நடக்க வேண்டும். அவளுக்கு, அழகு குணம் எதிலும் குறைச்சல் இல்லை. ஆனாலும் புரோகிதர் பெண்ணாயிற்றே. சட்ட மூலம் வேண்டாம் என்கிறதை வாய்மூலம் யார் கேட்காமல் இருக்கிறார்கள்? வரதட்சிணையைக் குறைத்துக் கேட்கும் வரனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பசு திருமுன் அவர் பக்தி மனம் புண்பட்டு விட்டது. நொந்து புண்ணாகிய அவர் சொற்கள் மீண்டும் நினைவுக்கு வந்தன. "ஆண்டாளோட வாழ்க்கை நன்னா இருக்கணுமின்னா நாளைக்கு ராத்திரியே எங்களை ஊரை விட்டு அழைச்சிண்டு போய் விட்டுடுங்க......"

"என்னா......! ஒரு நாழியாக் கூப்பிடறேனே, உங்க காதிலே விழலியா? பெருமாள் மாதிரியே அறிதுயில் பண்றேளா?" என்றவாறே அவர் கால்மாட்டில் அமர்ந்தாள் லட்சுமி அம்மாள்.

"ஆமாம், லட்சுமி. எல்லாம் வரதாச்சாரியைப் பற்றித்தான். நாமெல்லாம் தகுந்த பாதுகாப்போடு இருக்கிறோம். பிறத்தியார் மரியாதை காட்டறா. ஆனால் வரதாச்சாரி இப்போ எந்த ஸ்திதிக்கு வந்துட்டார் பார்த்தியா? அவர் பந்துக்கள்கிட்டேயிருந்து நான்தானே பிரிச்சுக் கொண்டு வந்தேன்...."

"வாஸ்தவம்தான். ஏதோ அந்தக் காலத்திலே, பக்தி மனசிலே பொங்கிப் பிரவகிச்சபோது, சில கொடுத்து வச்சவா, உங்களைப் போல் கோயில்களைக் கட்டிப் போட்டா. அப்புறம் யார் வேலைவெட்டியைப் போட்டுட்டுக் கோயில்லேயே கிடப்பா? இதுக்குன்னு தனியா ஒருத்தரை நியமிக்க வேண்டி வந்தாச்சு. அதனாலே அதுக்குன்னு ஒரு ஜாதி. இதை நம்பி, லோகாயதமா முன்னேயுமே, பெருமையா நின்னு கொண்டிருந்தது. இன்னிக்குப் பிறத்தியாருக்குக் கேவலமாப் போச்சு! வேறே பிழைக்கவும் அவர்களுக்கு வழியில்லே. எப்படி வேடிக்கையா காலம் மாறுகிறது, பார்த்தேளா? பக்தி குறைஞ்சதுமே அது சம்பந்தப்பட்டதெல்லாம் கேலியாத் தோணறது. சுவாமி அதைப்





பொறுத்துக்கலாம். அவருக்கு உருவத்தைப் போலவே மனசும் கொஞ்சம் கல்லுதான்! உயிரோட நிக்கற புரோகிதர்கள்? அவர்கள், மான அவமானம் பார்க்கிறதா, பசியைப் பார்க்கிறதா? பக்தியைத்தான் பார்க்கிறதா? மூணும் கெட்டான் நிலைமை அவர்களுக்கு...''

''அடேயப்பா, பிச்சி விளாசறியே லட்சுமி! ரொம்ப நன்னாச் சொன்னே.....!''

''உம்! நானா ஒண்ணும் சொல்லிடலே. எனக்கு இத்தனை தூரம் பிரிச்சுப் பார்த்துச் சொல்லத் தெரியுமாக்கும்? மனசாலே புரிஞ்சுக்க முடிஞ்ச அளவு சொல்லத் தெரியுமா? எல்லாம் உங்க கடைசிப் பிள்ளை ராகவன் எழுதியிருக்கான். நேத்திக்கு அவன் அனுப்பின புஸ்தகத்திலே பார்க்கலியா? இந்தப் பிரச்னையை நன்னா அலசி எழுதியிருக்கான். இருங்கோ, அதை எடுத்து வந்து தரேன்'' என்ற லட்சுமி அம்மாள் எழுந்து போய் ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்து அவரிடம் தந்தாள்.

அது ஓர் ஆஸ்திகப் பத்திரிகை. அடிக்கடி ராகவன் எழுதும் கட்டுரைகள் அதிலே வந்து கொண்டிருந்தன. விரல்கள் பெருமிதத்தோடு பத்திரிகையைப் பிரித்தன. புரோகிதர்களின் கஷ்ட நிலைமையையும், திண்டாட்டத்தையும் ஒழுங்குவாரியாகப் பிரித்து அழகாக எழுதியிருந்தான் ராகவன். சமூகம் ஒன்று திரண்டு ஆஸ்திகத்தையும், அதற்கு இன்றியமையாத தேவையான புரோகிதர்களையும் காப்பாற்ற முன்வர

வேண்டுமாம். மாறி வரும் காலத்தில் சநாதன தர்மங்களை மக்கள் கைவிட்டதோடு, அது சம்பந்தப்பட்டவர்களையும் இகழ்ந்து வருகிறார்களாம். அவர்களுக்கு வருமானமும் இல்லை. கௌரவமும் இல்லை. அவர்களும் மனிதர்கள்தாம்; ஆசையும், தேவையும் அவர்களுக்கு ஏற்படும் என்று யாரும் எண்ணுவதில்லையாம்.

''தேவலையே, நன்னா எழுதியிருக்கானே. நேத்திக்கு இந்தக் கட்டுரையைப் படிச்சிருந்தால் எனக்கு அவ்வளவா புரிஞ்சிருக்காது. இன்னிக்கு நம்ப வரதாச்சாரியோட பேசின தோஷம், பையன் எழுதற 'பாயிண்ட்ஸ்' எல்லாம் புரியறது'' என்று முணுமுணுத்த வாறே மேலே தொடர்ந்து படித்தார்.

''இப்போதெல்லாம் பிறர் காண விளம்பரம் கிடைக்காத துயர் புரோகிதர்களுக்குத் தான். ஏதோ தங்களையும், தங்கள் காலத்தையும் நொந்து கொண்டு தெய்வமே என்று தொழில் செய்கிறார்கள் அவர்கள். அவர்களும் சமுதாயத்தின் ஒரு பகுதியல்லவா? ஒரு முழுமை பெற்ற சமுதாயத்தில் ஒருவர் துயரை மற்றவர் அநுதாபத்தோடு நோக்கி உதவி புரியவில்லை யென்றால், அங்கே ஜனநாயக மனப்பான்மை உண்டு என்று எண்ண முடியுமா? நெசவாளி, ஆலைத் தொழிலாளி, விவசாயி போன்றவர்களின் இன்னல்கள் தீர, சட்டங்களும் அநுதாபிகளும் துணை செய்கிறார்கள். இதனால் நல்ல விளம்பர சாதனமும் உண்டாகிறது. பொதுமக்களின் அநுதாப கவனமும் கிட்டுகிறது. புரோகிதத் தொழில் நசித்து அவர்கள் எண்ணிக்கை குறைந்தபின்னும் அவர்களின் மறுமலர்ச்சிக்கு யாரும் பாடுபடவில்லை. எனவே, அவர்கள் இத்தொழிலுக்கு வரப் பயந்து இதனின்று மாறிவிடவே விரும்புகின்றனர். அது மட்டுமல்ல, இவர்களை இகழவும், கேலி பேசவும் இடமாயிற்று. இதில் நிலைத்து வாழ்ந்து விடலாம் என்ற உறுதியான பாதுகாப்பும் இல்லை.

''கோவில் இருண்டு கிடக்கும்போது அங்கு ஒளியேற்றவும், இறைவனை நெருங்கி நியம நிஷ்டையுடன் பூஜிக்கவும் வாய்ப்புப் பெற்றவர்கள் பிறரின் கடுசரங்களால் தொழிலை வெறுக்கும் நிலையும் வந்தாயிற்று. அப்படியானால் கோவில்களின் கதி? நம்பிக்கையும், மரியாதையும் தந்து நிரந்தரப் பாதுகாப்பும் தரவில்லையானால், அங்கே யார் நிலைத்து நின்று இறை கைங்கரியத்தைச் செவ்வனே ஆற்ற முடியும்? இதைப் பொது மக்களும் ஆஸ்திகர்களும் நன்றாகக் கண்டு, அவர்களை அன்புடன் ஆதரிக்க முன்வர வேண்டும்! அப்போதுதான் நாட்டில் சமயமும், பக்தியும் அறநெறியும் வாழ முடியும். கோவிலில் ஒழுங்காகப் பூஜை நடந்தால்தான் மக்கள் வறுமை, பிணி முதலியவற்றிலிருந்து விடுபட்டு ஆரோக்கியத்துடன் வாழ முடியும்.''

புத்தகத்தை மூடி மார்பில் வைத்துக் கொண்டு வரதாச்சாரியைப் பற்றி யோசித்தார் ரங்கநாதன். அவர் நினைப்பதை அவர் மகன் எழுதியிருக்கிறான். வரதாச்சாரி எப்படிப் பயப்படுகிறார்? 'அவருக்குப் பண பலம் வேண்டாம். ஜன பலம் வேண்டும் என்றாரே. அவரை எப்படியும் நான் பாதுகாப்போடு வைத்துக் கொள்வேன். நாளைக்கே அந்தப் பயல் நாகநாதனையும், தங்கராஜுவையும் அழைத்து வரச் சொல்லிக் கண்டித்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளச் சொல்லுவேன். சீக்கிரமாக ஒரு வரனைப் பார்த்து ஆண்டாளைக் கட்டி வைப்பேன். அப்புறம் வரதாச்சாரி திருப்தியாக இருப்பார். எந்தச் சலசலப்புக்கும் இடமில்லை!' இப்படி நினைவில் நீண்டு கொண்டிருந்தவரின் கண்களில் காலண்டர் தென்பட்டது.

'ஓ! இன்னிக்கு வெள்ளிக்கிழமையா? அதுதான் அவள் முந்தானையை விரிச்சுப் படுக்க நேரமில்லாமல் அடுக்களைக்குள் போயாச்சோ? சனி, ஞாயிறு லீவுக்காக மூலைக்கொருத்தரா சிதறிக் கிடக்கும் நான்கு பிள்ளைகளும் இன்னிக்கு ராத்திரி ஆளுக்கொரு காரைத் தூக்கிக்கொண்டு சம்சாரம் பிள்ளைகள் சகிதம் புறப்பட்டு வந்துவிடுவார்களே. கடைசிப் பையன் ராகவன்தானே கல்யாணத்துக்குப் பாக்கி. அவனையும் ஒரு குடியும் குடித்தனமுமாக வச்சுட்டா, பெருமான் கூப்பிடற வரைக்கும் அவர் நாமத்தைச் சொல்லிண்டிருக்க வேண்டியதுதான்!' என்ற எண்ணமும் இழையோடியது.

மாலை வெய்யில் சாய்ந்து கொண்டிருந்தது. உள்ளே லட்சுமி அம்மாள் இரவு வரப் போகும் பிள்ளைகளுக்கு விருந்து தயார் செய்து கொண்டிருந்தாள். தள்ளாத காலமானால் என்ன, பாசம் விடுகிறதா? ''உம்! லட்சுமி இப்படிக் கோவில்வரையில் போயிட்டு வரேன்'' என்று குரல் கொடுத்து விட்டு அலுப்புடன் எழுந்த ரங்கநாதன் கைகளைத் துழாவி மூலையிலிருந்த தடியைப் பற்றிய வாறே வெளியே வந்தார்.

என்ன ஆணவம் இந்த நாகநாதனுக்கும், தங்கராஜுவுக்கும்? அதுக்குத் தாபமில்லே போடறானுங்க சநாதனிகளோட பிள்ளைங்க! தர்மத்தை விட்டுத்தான் தொலைச்சான்களே' அப்புறம் அதைக் குலைக்கவுமா கங்கணம் கட்டிக்கணும்? கோயில்கிட்டே கூட்டம் போட்டது தப்புன்னு இத்தனை வயசான வரதாச்சாரி, வயசின் உரிமையிலே சொல்லக் கூடாதா? நாம் கொண்டு வந்து குடியேத்தினால் நம்ப அடிமையா என்ன அவர்? நமக்காக அவரைக் கொண்டு வந்தோம்கிறதும் மறந்து போய் விட்டதே. இவர்கள் நாளைக்கு நாட்டை ஆளப் போறான்களாம்! தனி மனுஷனுக்குத் தர வேண்டிய மரியாதையை மறுக்கிறவன் எந்த விதமாக தரமா ஆள முடியும்? எப்படியும் வரதாச்சாரியைப் பழி வாங்கப் போறான்களாம். அவர் பெண் ஆண்டாளைத் தூக்கிக் கொண்டு போய் வேறு ஜாதிக்காரனுக்குக் கட்டாயமாகத் தாலி கட்டப் போறானாம்! சட்டமே அநுமதிக்குதுடான்னு வாதம் பேசறான். பலாத்காரத்தையா சட்டம் அநுமதிக்கிறது? ஜாதி எல்லாம் ஒன்னு ஆக வழி பண்ணணும். எந்தக் காரியமும் இஷ்டத்திலே நடக்கணும். இஷ்டமில்லாத பலாத்காரத்திலே நல்லது கூட நஞ்சுக்கு ஒப்பாயிடும்னு புரியலியே.



இப்பொழுது மிகச் சிறந்த,
தனிப்பட்ட கலவைகொண்ட, முச்செயல்-திறனுடைய
ஹேர் ஆயில் டானிக்
பிராஹ்மி
ஆம்லா
மாகா
ஆகியவை அடங்கியது.
BRAHMI AMLA MAKA
BAM
TRIPLE ACTION
HAIR OIL TONIC
பல தலைமுறைகளாகப் பயன்பட்டுவரும் பிராஹ்மி, ஆம்லா, மாகா ஆகியவை இப்பொழுது ஒரு அற்புத ஹேர் ஆயிலான பேமில், உங்களுக்கென, ஒருங்கே இணைந்து கிடைக்கின்றன. பேம் கால்கேட்-பாமாலிவ் கம்பெனியாரின் புதிய, தரமான தயாரிப்பு.
பேமில் அடங்கியிருக்கும் சேர்க்கைப் பொருள்களான பிராஹ்மி-ஆம்லா-மாகா தலைமுறை தலைமுறைகளாக கேசத்தை அழகுபெறச் செய்யும் குணங்களுக்காகவும், அபரிமிதமான கேச வளர்ச்சிக்காகவும், கேசம் உதிர்வதையும், முதுமை எய்துமுன் நரைப்பதையும் தடுப்பதற்காகவும், மயிர்க்கால்களுக்கு இதமளித்து,
பேம்
அயர்ந்த நித்திரையை அளிக்கும் பதற்காகவும் பெரிதும் போற்றப் பட்டு வருகின்றன.
பழமையார்ந்த இந்தியக் கலை முறைகளை நம்புங்கள்...தினந்தோறும் உங்கள் மயிர்க்கால்களில் பேம் தேய்த்து, மிருதுவான அடர்ந்த, செழுமையான கூந்தலைப் பெறுங்கள்.

''ராமா! எப்படி இருந்த கிராமம் இது! புஜனை மடத்தில் அதிகாலையில் மார்கழிக் குளிரையும் பொருட்படுத்தாமல் குரல் வெடவெடக்கப் பாடும் வரதராஜனின் பிள்ளையா இந்தச் சீனுவாசன்? தாச னுக்குத் தாசனாக அன்பு முகம் காட்டும் வேங்கடேசனின் பிள்ளையா இந்தக் கதர்ச னம்? இவன்கள் தெரியாதவனுக்குப் புத்தி சொல்வது போக, தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறான்களே. இவர்கள் நிரந்தர வரு மானம் தேட இந்த உள்ளங்களா பலி? காலம் இப்படியே போய்க் கொண்டிருந் தால் தரும தேவதையே செத்து விடாதா?''

இப்படி எண்ணிக் கோவிலை அடைந்தவ ருக்கு ராமன் சந்நிதியிலே மனக் கதவு திறந்து 'கொண்டது; சக்தி வெல்லும் என்ற நம்பிக்கையும் பிறந்தது.

வீட்டை அடைந்தபோது உள்ளே அடுக் களையில் லட்சுமி அம்மாள் இன்னும் சற்று நேரத்தில் வந்து குழுமிவிடப் போகும் பிள்ளைகள், பேரன்கள், மருமகள்களுக்காகச் சிரத்தையாக அக்காரவடிசல் தயார் பண்ணிக் கொண்டிருந்தாள்.

ஆயிற்று. தெருவில் கார் நிற்கும் சத்தம் கேட்கிறது. அதோ வரும் போதே ஆர வாரக் குரல் கொடுத்துக் கொண்டே வரும் இரண்டாம் பிள்ளை நாராயணன். குழந்தை களை அதட்டிக் கொண்டே வரும் அவன் மனைவி பத்மாவதி. 'தாத்தா, பாட்டி' என்று ஓடி வரும் குழந்தைகள் கண்ணன், ராம் குமார், நப்பின்னை. வீடு களைகட்டி விட்டது. அடுத்து மூத்த மகன் ராமசாமி, மூன்றும் பிள்ளை கேசவன் எல்லோரும் மனைவி, குழந்தைகள் சகிதம் வந்தாயிற்று. ஒருத்தன் டாக்டர், ஒருத்தன் இன்ஜினீயர், ஒருத்தன் வக்கீல். கடைசிப் பிள்ளை ராகவன்தான் காலேஜ் லெக்சரர். அவனைத்தான் இன்னும் காணோம்.

சாப்பாடு அமர்க்களமாய்த் தயாராகி விட்டது. எல்லோரும் கூடத்திலே இலை போட்டு ஒரு பந்தியாய்ச் சாப்பிடும் திருநாள், இந்த வெள்ளிக்கிழமை இராத்திரி ஆரம் பித்து, ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் வரை யில் இது நீடிக்கும்.

லட்சுமி அம்மாள் கூடத்தில் இலை போட் டாள்.

''அவனும் வந்துட்டுமே, லட்சுமி!'' என்றார் ரங்கநாதன்.

''வரட்டுமே? அதுவரை மத்தபேர் பசி யோட இருப்பானேன்? சாப்பிட்டுண்டே இருந்தா அவன் வந்துடறான்!''

''நாங்களெல்லாம் பெண்டாட்டி பிள்ளைக ளோட சரியான நேரத்தில் புறப்பட்டு வந் துட்டோம். இதோ இருக்கிற சிதம்பரத் திலேயிருந்து அவனாலே புறப்பட்டு வர முடியலே. இத்தனைக்கும் ஒண்டிக் கட்டை!'' என்று மூத்தவன் அலுத்துக் கொண்டான். அவனுக்கும் குடும்பம் பெரிது. அவன்தான் வக்கீல்.

''சம்ஸ்கிருதத்திலே இன்னும் ஏதாவது பரீட்சை இருந்தால் படிச்சுப் பாஸ் பண்ண



''ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அரிசி கொண்டுபோகத் தடை என்று தெரிந் திருந்தும் அரிசி கடத்துகிறாயே?''

''பக்கத்து வீட்டு அம்மாளிடம் ஓர் ஆழாக்கு அரிசி கடன் வாங்கி யிருந்தேன். அதைத் திருப்பித் தரக்கூடாதா?''

உட்கார்ந்திருப்பான்'' என்று கேலி பேசி னான் நாராயணன். அவன் இன்ஜினீயர்.

மூன்றுமவனும் தன் பங்கை விடவில்லை. ''எல்லாம் அப்பா தருகிற செல்லம்தான். தனக்கு வாரிசு அவன்தான்னு பெருமைப் படறாரில்லையா? 'டிஸிப்பிளின்' இதிலேயே இல்லைன்னு காலேஜிலே என்ன சொல்லித் தந்துடப் போறான்? மண்டையைப் போட்டு உடைச்சிண்டு உப்புச்சப்பில்லாத 'ரிசர்ச்' பண்ணி 'டாக்டரேட்'டும் வாங்கிட்டான். அமெரிக்க சர்வகலாசாலைக்குப் போய் சம்ஸ் கிருதத்தின் புராதன வரலாறு, அதன் மேன்மை பற்றி நூறு 'லெக்சர்' பண்ணப் போறானாம். அவன் இனிமேல் இந்தக் கிராமத்தைத் தேடி வரதுன்னு சரிப்படுமா?'' என்று பொறுமைக் கனல் பறக்கக் குத்த லோடு முடித்தான் கேசவன். அவன் ஒரு டாக்டர். எம்.டி. பாஸ் பண்ணிவிட்டு மேல்நாடுகளுக்குப் போக வாய்ப்புக் கிட்டா மல் ஏங்கிக் கிடப்பவன்.

ரங்கநாதன் தமக்குள் சிரித்துக் கொண் டார். அவர் உணர்வில் உதிர்த்தவர்கள் தான் நால்வரும். நாலும் நாலு போக்கு.

எல்லோரும் சாப்பிட அமரும் போதே வாசலில் கார் நிற்கும் சப்தம் கேட்டது. கடைசியாக ராகவனும் வந்து சேர்ந்துவிட் டான். குழந்தைகள் எச்சிற் கையோடே ஓடிப் போய்ச் சித்தப்பாவைக் கட்டிக் கொண்டன.

மற்றொரு தலை வாழையிலை போட்டு ராகவனுக்கும் பரிமாறினாள் லட்சுமி அம் மாள். சாப்பிடும் போதே குடும்பக் கதைகள் ஆபீஸ் அலுவல்கள், முக்கிய வரவு செலவுகள் எல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லியான தும் ராகவன் கூறினான். ''அமெரிக்காவுக்கு



அகண்ட பரப்புடன் சாலையை பத்திரமாக இறுகப் பற்றுகிறது

பயர்ஸ்டோன் டீ லக்ஸ் சாம்பியன் கார் டயரிலுள்ள பிரபல "ராப்-அரவுண்ட்" டிரெட் அமைப்பின் அகலம் 18% அதிகம்... அபாரமான நிலைபுறுதி பெறுவதற்காக சாலைமீது அதிக ரப்பரைப் பதியச் செய்கிறது; எனவே, எவ்வகை சீதோஷ்ண நிலையிலும் எத்தகைய சாலையிலும் சரி, திடீர் வளைவுகளோ முனைத் திருப்பங்களோ எதனையும் சமாளிக்க உதவுகிறது. இதோ முடிவாக உல்லாசமாக ஓட்டும் சுகத்தைப் பெற்றுவிட்டீர்கள்.

ஸூப்-ர்-டஃப் ரப்பர்— அதிகச் செலவின்றி ஆயிரக் கணக்கான மைல்கள் அதிகமாக ஓடவும், அதிக ரீடிரெட் பெறவும் உதவுகிறது.


நான்-ஸ்கிட் ஆங்கிள் ஸேஃப்டி டிரெட்- வழுக்கும் ஆபத்தையே தவிர்க்கிறது.

ராப்-அரவுண்ட் டிரெட் அமைப்பு - சாலைமீது, அதுவும் முனைத்திருப்பங்களிலே அபாரமான நிலைபுறுதி தருகிறது.

Firestone

பயர்ஸ்டோன் டீலக்ஸ் சாம்பியன் டயர்

'ராப்-அரவுண்ட்' டிரெட் பொருந்தியது



Stronachs-2 24 TAM

இன்னும் இரண்டு மாசத்திலே போகவேண்டியிருக்கும் அப்பா!''

''என்னடா, ராகவா! இத்தனை சாவகாசமா சொல்றே, சமாசாரத்தை?'' என்றான் மூத்தவன்.

''விஷ் யூ குட் லக் ராகவா!''

''ஏண்டா, வந்ததுமே சொல்றதுக்கென்னடா ?''

''என்னிக்குன்னு கரெக்ட் டேட் தெரியுமோ?''

''பாம்பே வரை நாமும் போனா என்ன?''

''ஹை! சித்தப்பா அமெரிக்கா போகிறார் டோய் !''

குழந்தைகளைப் பாசத்தோடு பார்த்தான் ராகவன். பிறகு எழுந்து போய்க் கைகழுவி வந்தான். சகோதரர்கள் எல்லாரும் வெற்றிலைத் தட்டைச் சூழ்ந்து உட்கார்ந்தனர். மறுபடியும் அமெரிக்கப் பிரயாணத்தைப் பற்றிய பேச்சு எழுந்தது.

ராகவன் அதிக மகிழ்ச்சி கொள்ளவில்லை. அளவோடுதான் நிற்கிறான் என்றாலும், ஏதோ கவலைப்படுவதாகத் தெரிந்தது ரங்கநாதனுக்கு. ''ஏண்டா, ராகவா? ஒருமாதிரி வருத்தமா இருக்கிறே? அமெரிக்கா போற சந்தோஷத்தை அநுபவிக்கவேண்ணாலும், அங்கே நீ செய்யப் போற காரியத்தை நினைச்சி சந்தோஷப்பட வேண்டாமா ? நம்ப உபநிஷதங்களை, நம்ப புராணங்களை இல்லே எடுத்துச் சொல்லப் போறே ? சம்ஸ்கிருதத்தோட பெருமையை நீ திக்திக்கத் திக்கிப் பேசப் போறே.....''

''அது மட்டுமில்லேப்பா. தமிழ் நூல்களைப் பற்றியும்கூட சில இடங்களிலே பேசறதா இருக்கேன்.''

''அதுதான் சரி. நீதான் ரெண்டு மொழியிலேயும் பட்டம் வாங்கி இருக்கியே..... அதுசரி, ஏண்டா, என்னமோ போலிருக்கே?''

''காரணத்தைச் சொன்னால் அண்ணா எல்லாம் சிரிப்பார்கள். அப்பா.... எனக்கு உங்களை யெல்லாம் பிரியணுமேன்னு இருக்கு. புறப்படற போது அழுதுடாமே இருக்கணுமேன்னு கவலையா இருக்கப்பா!''

''இதுதானடா, உன் விசனம்?''

''சரியான கோழைடா நீ....!''

''ராகவா! துணையோட போனா எல்லாம் சரியாயிடும். சீக்கிரம் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கின்டு அவளையும் கூட்டிப் போயேன்' என்று சீண்டினார் ரங்கநாதன்.

''ராகவா! ஹோட்டலிலே சாப்பிடாதவனாச்சே நீ! அங்கேயெல்லாம் போய் எப்படிடா இருப்பே?'' என்றவாறே பேச்சில் வந்து கலந்து கொண்டாள் தாயார்.

''நானே சமைச்சிப்பேனம்மா....''

''அட சீ! உன் புத்தி போகலியே! நீயே சமைச்சிச் சாப்பிடப் போறியா?''

சகோதரர்களின் விமரிசனம் கல்யாணப் பேச்சில் வந்து நின்றது

''என்னடா சொல்றே ராகவா?'' என்றவாறே பையனைக் கூர்ந்தார் ரங்கநாதன்.

''நான் ஒண்ணு சொல்லிடணும்னு ஆசைப்படறேன்... அம்மா மாதிரி பழைய பழக்கவழக்கம் கொண்டாடற மனகம், பக்தியையும் சம்பிரதாயத்தையும் ஏத்துக்கற மனகம் கொண்ட பெண்ணாக இருந்தால் பாருங்கள்.''

''சரியான கட்டுப்பெட்டி!''

''இந்தக் காலத்திலே நீ சொல்ற மாதிரி ஒரு பெண்ணை வலை வீசித் தேடணும்டா!''

லட்சுமி அம்மாள் கணவன் முகத்தைப் பார்த்தாள். அவர் மாயப் புன்னகை செய்தார். இனம் கண்டு கொண்ட விதத்தில் அவள் உதடுகளும் இளநகை சிந்தின.

இரவு மணி ஒன்பதடித்த போது எல்லாரும் உறங்கிவிட்டனர். விசுப்பலகையை விட்டுத் தட்டுத் தடுமாறியவாறே எழுந்திருந்த ரங்கநாதன் மூக்குக் கண்ணாடி, தடி சகிதம் அழிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். வெறும் பனியனோடு ராகவன் படுத்துக் கிடந்தான். அவனைத் தட்டி எழுப்பலாம் என்று அவர் நினைக்கு முன்பே, அவனே எழுந்து உட்கார்ந்து, ''என்னப்பா வேணும்?'' என்றான்.

''என்னோட வா சித்தே. காத்தாட உலாத்திட்டு வரலாம்'' என்றவரைப் பின் தொடர்ந்தான் ராகவன்.

உலகையே பால் தெளித்துக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது பால் நிலா. ராமர் கோயில் பாதை வழியே கிழக்கே சென்ற ரங்கநாதன் மூலைப் பக்கம் நடந்தார். நந்தவனத்தை அடுத்துச் சின்னஞ்சிறு ஓட்டு வில்லை வீட்டருகே இருவரும் நெருங்கினர்.

''அப்பா.....!'' என்று ஏதோ கேட்க முயன்ற ராகவனைக் கையசைத்துப் பேசாமல் இருக்குமாறு கூறியவர், கதவை விரற்கணுவால் தட்டினார்.

''யாரது?''

''நான்தான் ரங்கநாதன். வரதாச்சாரி இருக்கிறாரா?''

சட்டெனத் திறந்தது கதவு. கையிலிருந்த மண்ணெண்ணெய் விளக்கின் சிற்றொளியில் முகமெலாம் வரவேற்கும் மரியாதை பாவனை ஒளிர, ''வாங்க ஐயா, அப்பா இருக்கிறார். உள்ளே வந்து உட்காருங்க'' என்று உபசரித்த ஆண்டாள் ராகவனைக் கண்டதும் முகத்தை உள்ளுக்கிழுத்துக் கொண்டு ஒதுங்கி நின்றாள்.

ஏழைமையில் பூக்கக்கூடிய மலரா இவள்? எங்கோ செல்வந்தர் வீட்டின் பெட்டகத்தில் வைரமாகப் போற்றப்பட வேண்டியவள் இவள். என்ன பண்பு, எத்தனை அடக்கம்! ரங்கநாதன் தன் மகனை உள்ளே வருமாறு தலையசைத்துவிட்டு நடந்தார்.

குரல் கேட்டதுமே வரதாச்சாரி பதறியடித்து ஓடி வந்தார். கையும், காலும் ஓடாமல், எப்படி மரியாதை செய்வதெனத் தெரியாமல் தவித்தார். ''வாங்க, ஐயா, வாங்க... சின்ன ஐயாவும் வாங்க. இந்த நேரத்தில் ஏழை வீடு தேடி... சொல்லி யனுப்பி யிருந்தால் வந்திருப்பேனே....''

''இப்போது நாங்கள் வர வேண்டிய முறைக்குத்தான் வந்தோம், சுவாமிகளே. நீங்கள் உட்காருங்களேன்.''

''ஐயா பேசறது எனக்கு விளங்கலியே. எனக்குப் புத்தியும், மூளையும் குழம்பி யிருக்கு. புரிஞ்சிக்கிற ஸ்திதி போயிட்டது ஐயா. என் வீடு தேடி வந்திருக்கேன். நல்ல சேதி சொல்லுங்கோ ஐயா!''

''நல்ல சேதிதான் ஸ்வாமிகளே! உட்காருங்க முதலில்!''

''நாளைக்கு இந்நேரத்துக் கெல்லாம் எங்களை ஊரை விட்டு அனுப்பிச்சிடுவீங் களா ஐயா?''

''பொறுங்கள் ஸ்வாமி களே, பொறுங்கள்! நீங்கள் எதுக்கும் பயப்படா தீங்க...'' என்னும் போதே குறுக்கிட்டார் வரதாச்சாரி.



''எப்பவுமே நீ எனக்கு நேர் எதி ரேடயாதான் இருக்கேங்கறது தெரிந் திருக்கே. இன்னும் புடவை டிசைன் வேறே இப்படி அமையணுமா...?''

''எப்படி ஐயா, பயம் இல்லாமல் இருக்க முடியும்? ஏதாவது சத்தம் கேட்டால் ஆண் டாள் நடுங்கறு ஐயா. ஏதேனும் இசை கேடா நடந்துட்டா.... நினைக்கவே முடியலே ஐயா. காலம் மாறிப் போச்சு. ஆதிமூலம் மாதிரி நீங்கதான் எங்களை முதலே வாயி ருந்து காப்பாத்தணும் ஐயா!''

மூடுமந்திரமாக நடக்கும் இந்தப் பேச்சுக் களின் சாராம்சம் விளங்காத ராகவன், ''என்னப்பா, ஒன்றும் புரியவில்லையே? ஏன் இவர்கள் ஊரை விட்டுப் போகணும்?'' என்று வினவினான்.

''கோவிலுக்குப் பக்கத்திலே நம்ம ஊர் இளவட்டங்கள் தலைவனான தங்கராஜுவும், நாகநாதனும் ஏதோ கூட்டம் போட்டுக் கயவாளித்தனமாகப் பேசியிருக்கிறான்கள். அவர்களை நேரிலே கண்டு, 'இப்படிக் கோயி லுக்குப் பக்கத்திலேயே, இப்படி யெல்லாம் அவதூறாகப் பேசலாமா? அதெல்லாம் தப்புப்பா, இப்படிப் பண்ணாதீங்க'ன்னு ஸ்வாமிகள் கேட்டிருக்கார். வரைமுறை தெரியாத அரைகுறைப் பையன்கள்தானே? அவன்களுக்குக் கோபம் வந்து விட்டது. 'என்னய்யா எங்களுக்குப் புத்தி சொல்றது? உம்ம பெண்ணையே கடத்திப் போய் வேறு ஜாதிக்காரனைத் தாலி கட்டச் சொல்றேன். அப்போ ஜாதி சீக்கிரம் ஒண்ணாயிடும், பாரும்'னானும்...!''

''என்ன அநியாயம்!'' என்று பதறினான் ராகவன்.

தூணோரம் நின்ற ஆண்டாளிடமிருந்து மெல்லிய விசும்பல் எழுந்தது.

''அப்பா... இந்த மாதிரி பலாத்காரத் தீமைகளையும், கொடுமைகளையும் உணர்ந்தி, அடியோடு நசுக்கிவிட முயற்சி செய்யாமல் பயந்து தப்பிப் போவதின் மூலம் வளரவிடக் கூடாது. உலகம் எல்லோருக்கும் பொது வானது. தனி மனிதனுக்குத் தீமை செய் யாத வகையில் தனக்குப் பிடித்த வழியோடு வாழ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. சீர்திருத்தம் என்ற பெயரில் பண்பற்றவர்களின் பலாத் காரத்தை அநுமதிக்க முடி யாது. அவர்களைக் கண்டிக் கும் உரிமை இந்தக் கிராமத் துக்கே உண்டு! அப்பா....!''

''வெறும் கண்டிப்பால் பயனில்லை, ராகவா? செய்து காட்ட வேண்டிய தருணமில்லையா இது?''

''என்னப்பா செய்யப் போகிறீர்கள்? எதைச் செய் வதானாலும் இப்போதே செய்து விடலாமே?'' என்ற வேகத்தோடு கேட்டான் ராகவன்.

''அம்மா! ஆண்டாள்! இங்கே வாம்மா!'' என்றார் ரங்கநாதன்.

தயங்கியவாறே தூண் மறைவிலிருந்து வந்த ஆண்டாள் இமைரென மறுபடியும் விசிக்க ஆரம்பித்தாள். அந்த அழுகைக் குரலிலேயே, ''எங்களை ஊருக்கு அனுப்பிச்சுடுங்க ஐயா' உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. அந்த ராமனுக்கு எங்க கைத்தளிகை பிடிக்கலே ஐயா!'' என்றாள்.

ரங்கநாதன் மெல்லச் சிரித்தார். ''அம்மா ஆண்டாள்! மனுஷாளோட பிழைக்குத் தெய்வத்தை நோகாதேம்மா. அந்தக் கருணை வள்ளலுக்கு நீங்களெல்லாம் இங்கே இருக்கிறதிலேதானம்மா சம்மதம். அதை ஐயன் தெரியப்படுத்திட்டான். எங்களூர்க் காரன் அவமரியாதையாகப் பேசிட்டான். அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன், அம்மா!''

''அபசாரம்! அபசாரம்!''

''பார்த்தாயாடா ராகவா! இவள் பதவி சான அடக்க வொடுக்கமான பெண். உங்க அம்மா மாதிரியே சாஸ்திரம் தெரிந்தவள், சொல் பொறுக்காதவள். பெயரைப் பார்த் தாயா? சாட்சாத் ஆண்டாளேதான்!'' என்றார் மகிழ்ச்சி பொங்கும் குரலில்.

ராகவன் தந்தையின் மொழிகளைச் செவி மடுத்தவாறே வியப்போடு அவளைப் பார்த் தான். அவள் விலகி நடக்க முயன்றபோது ரங்கநாதன், ''அம்மா, ஆண்டாள்! எங்க ளுக்கு நீ நமஸ்காரம் பண்ணலியே. வாம்மா, வந்து நமஸ்காரம் பண்ணு'' என்றார்.

வரதாச்சாரி பதறினார். ''வாம்மா, வந்து சேவிச்சுக்கோம்மா. நானே மறந்து போனேன் சொல்ல. குழந்தை என்ன செய்வாள்?''

ஆண்டாள் மண்டியிட்டு வணங்கியபோது ''சீக்கிரமே விவாகம் நடக்கணும்'' என்றார் ரங்கநாதன். பிறகு எடுத்த எடுப்பிலேயே, ''ஸ்வாமிகளே! ஒண்ணு உங்களைக் கேட்கப் போறேன். நம்ம பையனை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்று ராகவனைக் காட்டினார்.

மற்ற மூவருமே இன்னதென்றறியாத வியப்பில் மூழ்கி நின்ற போது வரதாச்சாரி, ''என்ன ஐயா சொல்றீங்க?'' என்றார்.

''பையனுக்கு ஆண்டாளைப் பிடிச்சுடும்ங் கிறதிலே துளியும் சந்தேகமில்லே எனக்கு. ஆண்டாளுக்கும் என் பையனை நிச்சயம் பிடிச்சுடும்னுதான் நினைக்கிறேன். நீங்க தர்மத்தின் வேராச்சே ஸ்வாமி? பெண்ணை எப்படிப்பட்டவனுக்கு கன்னிகாதானம் பண்ண ணும்னு நினைச்சிண்டிருந்தேளோ? நீங்க தேடற மாதிரி யோக்கியதை என் பைய னுக்கு இருக்குன்னுதான் நினைக்கிறேன். அவன் சம்ஸ்கிருதத்திலே டாக்டர் பட்டம் வாங்கினவன். பக்திபாவத்தோட சநாதன தர்மத்திலே நிக்கிறவன். இங்கிலீஷ் படிப்பு மட்டும் படிச்ச மத்த மகன்களிலே இவன் தனியானவன். இவனுக்கு ஒரே ஒரு தகுதிக் குறைவுதான் இருக்கு. தலையை என்னையும், உங்களையும் போல இல்லாமல் நாகரிகமா மாத்திண்டிருக்கான். உங்களோட சநாதன குடும்பத்திலே சம்பந்தம் கொள்ற பாக்கியம் எனக்குக் கிடைச்சதுன்னு...'' என்று அவர் கூறிக் கொண்டிருக்கும் போதே நெடுஞ் சாண்கிடையாக அவர் கால்களில் விழுந்தார் வரதாச்சாரி.

''ஐயா! வேண்டாம் ஐயா!. இந்த ஏழைக்கு அத்தனை பெரிய தகுதி வேண் டாம். அப்படி ஆசைமூட்டிப் பார்க்காதீங் கய்யா. நான் மறுக்க முடியாமல் பேராசைப் பட்டுடுவேன்......''

''ஸ்வாமிகளே, இதென்ன, எழுந் திருங்கோ!'' என்று தோளோடு தோள் சேர அணைத்து எழுப்பிய ரங்கநாதன், வரதாச் சாரியைத் தம் பக்கத்தில் அமர்த்திக் கொண் டார். ''ஸ்வாமிகளே! நான் குருவா நினைக்கப் பெருமைப்படற நீங்கள் என்னை நமஸ்கரிக்கலாமா?''

''உங்களுக்கு நானா குருவா இருக்கமுடியும்? இனிமே உங்களுக்குக் கடவுள் ஒருத்தர்தான் குரு. நீங்க உசந்து நிக்கிறீங்க ஐயா. இந்த மாதிரி ஒரு தியாகத்தை வேறே எந்தச் செல்வந்தராவது ஓர் ஏழை அர்ச்சகருக் காகப் பண்ண முன்வருவாரா? என் ஆண்டாளுக்காக உலகத்தையே கொடுத்தா லும் தகும் என்றாலும்கூடச் செல்வந்தரான நீங்கள் எங்களுக்காக அந்தஸ்தை விட்டு இறங்கிவர வேண்டாம் ஐயா......''

''இவ்வளவுதானே ஸ்வாமிகளே! உங்க நல்ல மனசு அப்படியெல்லாம்தான் சொல் லும். நான்தான் தீர்மானிச்சுட்டேனே. இப்போ நான் கேக்கறதுக்குப் பதில் சொல் லுங்கோ. கிட்டத்திலே முகூர்த்தம் வச்சுக்க லாமா? எவன் ஆண்டாளைப் பத்திக் கேவல மாகப் பேசினானோ, அவனுக்கே அவன் தர்ம லட்சுமியா நின்னு படியளக்கப் போறா. இனிமே அவனுக்கு அவள் முதலாளி. என்ன ராகவா? 'என்ன செய்யப் போகிறீர்கள், அப்பா?' என்றாயே, நான் செய்வது சரி தானே? இது பயந்து செய்யும் கல்யாணம் என்று நினைத்து விடாதே. இதுதான் ராமன் விரும்பி எனக்குக் காட்டிய வழி. ஒருவிதத் திலே பார்க்கப் போனால் இந்த மாதிரி ஒரு பிரச்னை ஏற்பட்டதே இந்த நல்ல தீர்வு காணத்தானென்னு நினைக்கிறேன்...!''



''சார்! வெள்ளி விழாக் கொண்டாடி எனக்கு ஸ்வீட், காரம், காப்பி எல்லாம் வாங்கித் தாரும் நீங்க! நான் திரும்பிக் கொண்டு வந்து கொடுக்கிற இருபத்தைந்தாவது கதை இது!''

''ஆனால் அப்பா! கைகேயி வரம் கேட்ட தால்தான் ராவணனை சம்ஹாரம் பண்ண முடிந்தது என்பதுபோல் சொல்கிறீர்களே. உங்கள் பிரியப்படி இந்தக் காரியம் நடக்கட் டும். ஆனால் அவதூறு பண்ண முயன்றவர் களைக் கண்டிக்க வேண்டும் அப்பா....''

''அதையும் செய்தால் போயிற்று. பண பலம் வேண்டாம். ஜனப் பாதுகாப்பு வேண்டும் என்றீர்களே. இந்தப் பாதுகாப்பு போதுமா ஸ்வாமிகளே?'' என்றவர் தொடர்ந்தார். ''ஆனாலும் நான் ரொம்ப சுயநலம் மிக்கவன். என்னைப் போல சுயநலம் படைச்சவன் யாருமே இல்லே. முதலாவது நீங்களில்லாம வேறு யார் கிட்டேயாவது தர்ப்பணம் பண் ணவோ, அல்லது வேறு வைதீக காரியம் பண் ணவோ எனக்கு மனசில்லே. ரெண்டாவது நான் கட்டின ராமர் கோயில்லே பூசைபண்ண உங்களைத் தவிர வேறே யாரையும் அமர்த்தப் பிரியமில்லே. அப்புறம் மூணாவதாகவும் என்னப்பன் ராமன் இப்படி நடக்கச் சொல் லிக் காட்டினான். அதுக்கேத்த மாதிரி இந்தப் பிள்ளே ராகவனும் சொன்னான். அவனுக்குப் படிச்ச பெண் வேண்டாமாம். தன் அம்மா மாதிரி அடக்கவொடுக்கமான, சாஸ்திரம் தெரிஞ்ச பெண் வேண்டுமென்றான். அடுத்த மாசம் அமெரிக்கா புறப்படப் போறான் அவன். அவனுக்கு, கூடப் போய் மடியோடு தளிகை பண்ணிப் போட உங்க பெண் ஆண்டாளும் வேண்டியிருந்தாள். இப்போ. சொல்லுங்கோ, இதெல்லாம் என் சுய நலங்கள் இல்லையா? ஆக எனக்கும் என்னப்பன் ராமனுக்கும் நீங்கள் இங்கே இருப்பதில்தான் விருப்பம்......!''

''இந்த மாதிரி சுயநலங்கள் உலகத்திலே பெருகினால் துக்கமே இல்லே ஐயா. மோட்ச சாம்ராஜ்யமாகிவிடும்!'' என்று மறுபடியும்

கைகளைக் கூப்ப முயன்றவரைத் தடுத்தார் ரங்கநாதன்.

''ஸ்வாமிகளே! இதுதான் வேண்டாம் என்றேன். என்னப்பன் ராமனைத் தொட்டு அபிஷேகம், அலங்காரம், பூஜைகள் செய்யும் இந்தக் கரங்கள் என்னை இப்படி ஓயாமல் நமஸ்கரிக்கலாமா? அது எனக்குத்தானே பாவம்! ராமனைக் கும்பிடுங்கள் ஸ்வாமிகளே!''

''ராமனைத்தான் கும்பிடுகிறேன் ஐயா. இதோ நீங்களே கோயிலாக நிக்கிறீங்கோ! உங்கள் மனசே சந்நிதியாக இருக்கிறது! இங்கே ராமன் இருக்கிறானே! அவனைத்தான் சேவிக்கறேன். இந்த நல்ல இடத்தை விட்டு விட்டா ராமன் அங்கே வெறும் கோயில்லே இருக்கிறான்?''

ரங்கநாதனுள் ஒரு புல்லரிப்பு ஏற்படுகிறது. அவர் மனக்கண்முன் மறுபடியும் யாதவமணியாய் வருகிறான் ரகுகுலதிலகன்.

வெள்ளி நிலவின் ஒளியிலே ராமர் கோயிலின் கோபுர கலசம் மின்னிக் கொண்டிருந்தது. ரங்கநாதனும் ராகவனும் வரதாச்சாரியின் வீட்டை விட்டுக் கிளம்பி வரும் போது கோயிலருகே ஒற்றை நெருப்புப் பொறி தென்பட்டது. ரங்கநாதன் ஆவேசமாக நெருங்கினார். * கரிய உருவங்கள் இரண்டு அசையாமல் நின்றன.

''யாரடா அது?''

எதிர்க் குரல் வரவில்லை.

''கோயில் வாசல்லே வந்து பீடி குடிக்கறது யார்டா?'' குரலின் அழுத்தத்தில் எதிரி வெலவெலத்திருக்க வேண்டும்.

''நான்தாங்க தங்கராஜு!''

''இன்னொருத்தன்?''

''நாகநாதன்.''

''ஏண்டா! உங்களுக்குப் பீடி குடிக்க இந்த இடம்தானா கிடைச்சுது? உங்கப்பன் இந்தக் கோயிலைக் கட்டச்சே, பட்டினி கிடந்து, திட்டு தொடர்பு தள்ளி மண் சுமந்தான்கடா!''

''தப்புதாங்க. இனிமேல் பண்ணலீங்க ஐயா!''

''இந்த நேரத்திலே இங்கே என்னடா வேலை உங்களுக்கு? காவாலிப் பசங்களா! அர்ச்சகர் வீடு, ஊரை விட்டு ஒதுங்கித் தனியா நிக்கறதுன்னு கலாட்டா பண்ண வந்திருக்கீங்களாடா?''

''முதலாளி! நாங்க தெரியாமல் தப்பு பண்ண நினைச்சிட்டோம். எங்களை மன்னிச்சுடுங்க முதலாளி......'' அந்த இருவரும் நெடுஞ்சாண்கிடையாகக் கீழே விழுந்தார்கள்.

''இதெல்லாம் என்னடா? சினிமாவிலே கத்துண்ட பாடமா? எழுந்திருங்கடா. நீங்க இந்தக் கோயில் மண்ணைச் சுத்தமாகவா வச்சிருக்கீங்க? இந்த மண்ணிலே நெடுஞ்சாண் கிடையா ஏண்டா விழறீங்க? எழுந்திருங்க! உங்க பாவம் கழியணுமின்னு 'ஸ்வாமிகள்' காலிலே போய் விழுங்கடா....''

''எங்களை மன்னிச்சுடுங்க முதலாளி. ஏதோ ஒரு வேகத்திலே அர்ச்சகர் ஐயா எங்களைக் கூப்பிட்டுக் கண்டிச்ச போது அப்படியெல்லாம் சொல்லிட்டோம். கொஞ்சம் முன்னாலே நீங்க அங்கே பேசினதை யெல்லாம் கேட்ட போதுதான் எங்க சிறுமை தெரிஞ்சது ஐயா. நீங்க உங்க அந்தஸ்தைக் கூட விட்டு, ஒரு தனி மனிதரோட மனசு புண்படறதைக் காப்பாத்த முன்வந்தீங்க. அது மட்டுமில்லே முதலாளி. எங்க மேலே உங்களுக்குக் கோபம் ஏற்பட்டதே அது நியாயம். கூடவே நாங்க செய்ய நினைச்ச கேவலமான பாவ காரியத்துக்காக நீங்க மன்னிப்புக் கேட்டுக்கிட்டீங்களே ஐயா! 'எங்களூர்க்காரரை மன்னிச்சுடும்மா'ன்னு நீங்க கேட்டதைப் பார்த்த போது எங்களுக்கு வெக்கமும், துக்கமும் தோணிச்சு முதலாளி. நாங்க செய்ய நினைச்ச தப்பை ஒத்துக்கறோம் ஐயா. அதுக்கு எப்படிப்பட்ட ஆக்கினை கொடுத்தாலும் உட்படறோம். இதை நாளைக்கே பகிரங்கமா வேணாலும் விசாரிச்சு தண்டனை கொடுங்க ஐயா. அது தான் நியாயம். அப்பத்தான் எங்க மனசும் ஆறும்......!'' குரலின் பாவத்தில் நடிப்பின் சம்சயம் இல்லை. செய்ய நினைத்த தவறின் பாவத்தை எண்ணிப் பெருக்கும் கழிவிரக்கமும், கண்ணீரும் கலந்து உதிர்ந்தன.

''நாளைக்கு நிச்சயம் அதைச் செய்யறேன். இருந்தாலும் உங்களுக்காக இல்லேன்னாலும், இன்னும் திருந்த வேண்டிய எத்தனையோ பேருக்காக இந்த விசாரணையை நடத்தியே தீருவேன். நாளைக்குப் பத்து மணிக்கு வீட்டிலே 'ஆஜர்' பண்ணுங்க.....''

அந்த இருவரும் வாய்க்கால் பக்க சந்துக்குள் நுழையுமட்டும் பேசாதிருந்த ரங்கநாதன் மகனைப் பார்த்தார்.

''பார்த்தாயா, ராகவா? நம்ம கிராமத்து மண் நல்ல மண். சில சமயம் டவுன்லே யிருந்து குப்பைக் கருத்துக்கள் காற்றிலே வந்து இங்கே விழுந்துவிடும். பிரயாணம் பண்ணிட்டுத் திரும்பறவாகிட்டே ஒட்டிண்டு வரும், மூட்டை பூச்சி மாதிரி. ஏமாந்த பேர் பாதிக்கப்படறாங்க. முழிச்சுக்கிட்டவன் திருந்திடறான். எல்லாத்துக்கும் அடிப்படைக் காரணம் என்ன தெரியுமா? கல்வி வசதி இல்லாததாலே, கண்டதே காட்சி, கொண்டதே கோலம்னு திரியறான்கள். ஒரு சராசரி மனிதன் எப்படியெல்லாம் இருக்கணுமோ, அப்படி இருக்க முடியலே. இவன்கள் டவுனுக்குப் போய்ப் படிக்க வசதி ஏது? அதனாலே என் மனசிலே இப்போ ஒரு புது எண்ணம் தோணறது ராகவா... நம்மூரிலேயே ஒரு பள்ளிக்கூடம் கட்டலாம்னு முடிவு பண்ணிட்டேன். என்ன சொல்றே ராகவா?''

''நான் என்னப்பா சொல்லப் போறேன்? நீங்க எது செய்தாலும் அது நல்லதாத்தான் இருக்கும். ஒரு கோயில் கட்டின தோட இன்னொரு கோயிலையும் கட்டப் போறீங்க! அந்தப் புண்ணியம் உங்களுக்குக் கிடைச்சிருக்கு. அது மட்டுமில்லேப்பா! வரதாச்சாரி ஸ்வாமிகள் சொன்ன மாதிரி எனக்கும் நீங்களே ஒரு கோயிலாத்தான் தெரியறீங்க....!'' என்று பக்தி பரவசனாய்ப் பதிலளித்தான் ராகவன்.



சென்னை, இஞ்சினீயரிங் காண்ட்ராக்டர் ஸ்ரீ வி. கோபாலன் அவர்கள் குமாரத்தி சௌ. சாவித்திரிக்கும் சென்னை, இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்டைச் சார்ந்த ஸ்ரீ வி. சுவாமிநாதன் அவர்களுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள்!

ஜலதோஷத்தை எதிர்க்க

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்


சிவப்பு லேபில்

சாப்பிடுங்கள்




சாதாரண ஜலதோஷம்கூட அபாயகரமானது தான். அது உடலைப் பலவீனப் படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் ஜலதோஷத்தை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்பரீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வாராமல் தடுக்கும் சக்தியை யூட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.







வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை இளக்கி வெளிப்பேற்றி சுவாசப் பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் வாராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர் - ஹிந்துஸ்தான் லிமிடெட், பம்பாய்



திருவருட் செல்வர்

திருமுருக கிருபானந்தவாரியார்

பக்தர் மனத்தை உருக்கும்படி செய்து வருகின்றாராம் சுவாமி. ஏன் வருகின்றார் அவர்? ''தொண்டனார் தூநெறியை வெளிப்படுத்த'' வருகின்றாராம். அவ்வாறு வருகின்றவர் இரு கோவணங்களும், திருநீற்றுப் பையும், தருப்பையும் முடிந்த தண்டினை ஏந்தியிருந்தார். வனப்புடன் வந்த அத்திருவாளரைக் கண்டதும் அமர்நீதி நாயனாரின் அகமும் முகமும் மலர்ந்தன.

கண்ட வர்க்குறு காதலின்
மனங்கரைந் துருகத்
தொண்டர் அன்பெனும் தூநெறி
வெளிப்படுப் பாராய்த்
தண்டின் மீதிரு கோவண
நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்(து)அமர் நீதியார்
திருமடம் குறுக.

அமர்நீதி நாயனார் எதிரோடி வந்து அடியவர் அடிமலர்மீது வீழ்ந்தார். அவரைத் திருமடத்துக்கு அழைத்து வந்து பீடத்தின் மீது இருத்தி வழிபட்டார். ''எம்பெருமானே! எத்தனையோ அடியார்களை நான் பார்த்திருக்கிறேன். ஆயினும், தங்களைப் போன்ற திருக்கோலத்தினையும் காட்சியையும் உடையவரை அடியேன் கண்டதில்லை. அடியேன் செய்த மாதவத்தின் பயனாக இன்று தேவரீரைக் கண்டேன்'' என்று கூறி வலம் செய்தார்.

பேணும் அன்பரை நோக்கி ''நீர்
பெருகிய அடியார்க்(கு)
ஊணும் மேன்மையில் ஊட்டிநற்
கந்தைகீள் உடைகள்
யாணர் வெண்கிழிக் கோவணம்
ஈதல்கேட் டும்மைக்
காண வந்தனம்'' என்றனன்
கண்ணுதற் கரந்தோன்

நெற்றிக் கண்ணை ஒளித்துவிட்டு வந்திருக்கிறாராம் சுவாமி.

''அன்பனே! உன்னுடைய வள்ளன்மை எங்கும் பாராட்டப் பெறுகின்றது. அடியார்க்கு நிரம்ப அன்னம் அளித்து, கந்தை, கீள், உடை, யாணர் வெண்கிழி (அழகிய வெண்மையான) கோவணம் முதலியன தருகின்றாய் என்று கேள்வியுற்றோம். ஆதலின் உன்னைக் காணும் பொருட்டு வந்தோம்'' ,என்று அருளிச் செய்தார் சுவாமி.

''சுவாமி! எல்லாம் சிவன் தந்தது. சிவன் தந்த அனைத்தையும் சிவனடியார்க்குத் தருகிறேன். எனக்கென்று ஒன்றுமில்லை. எல்லாம் தங்களைப் போன்ற பெரியவர்கள் ஆசீர்வாதம். சுவாமி! இத்திருமடத்தில் தங்களைப் போன்ற தவமுடைய அந்தணர்களும் சந்நியாசிகளும் அமுது செய்வதற்கு ஏற்றவாறு வேதியர்கள் தூய்மையாக உணவு தயாரிப்பது உண்டு. ஆதலின் தேவரீர் இன்று இவ்விடத்தில் அமுது செய்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார் அமர்நீதி நாயனார்.

''அப்படியா! மிக்க மகிழ்ச்சி. நான் 'காவிரி சென்று ஸ்நானம் செய்துவிட்டு வருவேன். இந்தக் காலத்தில் திடுதிப்பென்று மழை வந்துவிடுகின்றது. ஒரு வேளை ஸ்நானம் செய்துவிட்டு வரும் வழியில் மழை வந்துவிட்டால் கோவணம் நனைந்துவிடும். எனவே இதனை அலட்சியம் செய்யாமல் மிகவும் காவல் உள்ள இடத்தில் வைத்திருந்து நான் ஸ்நானம் செய்துவிட்டு வந்தவுடன் தருவாய்'' என்று கூறித் தன்னிடமிருந்த இரண்டு கோவணங்களில் ஒன்றைக் கொடுத்தருளினார் சுவாமி. வேதம்தானே சிவபெருமானுக்குக் கோவணம்? அக்கோவணத்துக்குக் கலை நூல்களே நூல்கள். அதன் பெருமையை யாரே அறியவல்லார்?

''மன்னுகலை துன்னுபொருள் மறை
நான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்
காண் சாழலோ''

(திருவாசகம்)


கோவணத்தைப் பெற்றுக் கொண்ட குற்றமில்லா அன்பர், ''சுவாமி! பத்திரமாக வைத்துக் கொண்டிருப் பேன். விரைவில் நீராடி வாருங்கள்'' என்றார்.

கங்கையைத் தலையில் முடித்த கடவுள் காவிரியாடச் சென்றார். இதனால் காவிரியின் பெருமை நன்கு விளங்குகிறது. வேதியரின் கோவணத் தைப் பெற்றுக் கொண்ட அமர்நீதி நாயனார், தாம் அடியார்கட்குத் தருவ தற்காக வைத்திருந்த கோவணம், ஆடை முதலியவைகளுடன் வைக் காமல் வேறு ஒரு தனியிடத்தில் பத் திரமாக வைத்தார்.

மறையவராக வந்த மணிகண்டர் அமர்நீதி நாயனார் பத்திரமாக வைத்த கோவணத்தை மறைத்து விட்டார். நீலோற்பல மலர்கள் விளங்குகின்ற காவிரியில்தான் அவர் நீராடினாரோ? அன்றிக் கங்கையில்தான் நீராடி னாரோ? மழையில் நனைந்து நடுங்கி ஒடுங்கிக் கொண்டே திருமடத்துக்குத் திரும்பி வந்தார். அவருக்காக அறு சுவையுண்டிகளைத் தயாரித்து வைத்த அமர்நீதி நாயனார் எதிர்சென்று வணங்கி வரவேற்றார்.

தொண்டர் அன்பெனும் தூயநீர்
ஆடுதல் வேண்டி
''மண்டு தண்புனல் மூழ்கிய ஈரத்தை
மாற்றத்
தண்டின் மேலதும் ஈரம், நான்
தந்தகோ வணத்தைக்
கொண்டு வாரும்'' என் றுரைத்தனர்;
கோவணக் கள்வர்.

மழையில் நனைந்தால் மீண்டும் குளிக்க வேண்டும். திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்தி மழையில்



நனைந்து விட்டால் பிராயச்சித்த அபி ஷேகம் செய்வார்கள். இங்கோ இறை வர் மழையில் நனைந்து வந்தார். அதனால் மீண்டும் நீராட வேண்டும். எந்த நீரில் ஆடுவது? தூய தண்ணீரி லன்றோ ஆடவேண்டும்? ''தொண்டர் அன்பெனும் தூயநீராடுதல் வேண்டி'' வந்தார் என்கிறார் பிரபு சேக்கிழார். அவரது வாக்கின் அருமைதான் என்னே? அழகுதான் என்னே?

''அன்பரே! நான் நினைத்தது போலவே ஆகிவிட்டது. மழையில் நனைந்து விட்டேன். தண்டின் மீதுள்ள கோவணமும் நனைந்து விட்டது. ஈரத்தை மாற்ற வேண்டும். ஆகவே, தங்களிடம் ஏற்கனவே கொடுத்து வைத்த கோவணத்தைக் கொண்டு வாருங்கள்'' என்று அருளினார் கோவணக் கள்வர்.

ஐயர் செய்த வஞ்சனையை அறியாத அமர்நீதி நாயனார் உள்ளே சென்று கோவணத்தை வைத்த இடத்தை நோக்கினார். அங்கு அது இல்லை. வேறு இடங்களிலும் தேடினார். எங்கும் காணவில்லை. திகைத்தார்; இங்கும் அங்குமாக ஓடினார்; மனம் வாடினார்; 'சந்தேகமின்றிக் கோவணம் காணமற் போய் விட்டது' என்று கருதினார்.

''என்னப்பா! புதிதாக நெய்து கொண்டு வரப் போகிறாயா? குளிரில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். சீக்கிரம் கொண்டு வா'' என்றார் மறையவராக வந்த இறைவர்.

''தேவ தேவா! கருணாநிதி! உமது அடியார்க்குக் கோவணமும் ஆடையும் தருவதையே நியதியாகக் கொண் டிருப்பவன் அடியேன். அடியேனுக்கு இப்பெரிய இடர் வந்து விட்டதே. பெரும் பாவத்துக்கு ஆளாகி விட் டேனே?'' என்று பலப் பல சொல்லிப் பரமனைச் சிந்தித்தார் அமர்நீதி நாயனார். காற்றினும் வேகமாகச் சுழன்றது அவருடைய உள்ளம். மனைவியையும், மக்களையும் பார்த்து வினவினார். ''காண வில்லை'' என்று கூறி அவர்களும் வருந் தினார்கள். 'மறையவர் ஈரத்துடன் நிற்கிறாரே' என்ற கவலையுடன் வேறு ஒரு சிறந்த கோவணத்தை எடுத்துக் கொண்டு வந்தார்.

வேறு நல்லதோர் கோவணம் விரும்பி
முன் கொணர்ந்தேன்
கீறு கோவணம் அன்று; நெய்
தமைத்தது; கிளர்கொள்
நீறு சாத்திய நெற்றியீர்! மற்றது களைந்து
மாறு சாத்திஎன் பிழைபொறுப்பீர்''
என வணங்க.

''எம்பெருமானே! கருணைக் கடலே! தாங்கள் கொடுத்து வைத்த கௌபீ னத்தை நல்ல பாதுகாப்பான இடத்தி லேயே வைத்திருந்தேன். எப்படியோ அது வைத்த இடத்தினின்றும் காணமற் போய் விட்டது. என்னை மன்னிக்க வேண்டும். இதோ, இந்தக் கௌபீனம் தனியாக நெய்யப்பட்டது. ஈரக் கோவ ணத்தைக் களைந்து விட்டு இதனை உடுத்திக் கொண்டு எனக்கு அருள் புரிய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார் நாயனார்.

அடியவர் பிரமசாரி அன்றோ? கோபம் பொங்கியது அவருக்கு. திரி புரம் எரித்த விரிசடைக் கடவுள் வெகுண்டார். ''நன்றாக இருக்கிறது உனது தன்மை! உன்னிடம் கோவ ணம் கொடுத்து வைத்து நீண்ட நாட் களும் ஆகவில்லை. இன்றுதான் கொடுத்து வைத்தேன். அடியார்கட்கு நல்ல கோவணம் தருவதாகக் கூறி நீ நடித்து உண்மையில் கோவணத்தைக் கவர் கிறாய் போலும்! அழகாக இருக்கின்றது உன் வியாபாரம்'' என்று கடிந் துரைத்தார்.



மறையவரின் கோபத்தைக் கண்டு மிகவும் அஞ்சினார் அமர்நீதி நாயனார். அவரது பொறிபுலன் கலங்கி விட்டது. உடல் நடுங்கியது. பலமுறை அடியவர் திருவடியில் வீழ்ந்தார். மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ''அக்கோவணத் துக்குப் பதிலாக நல்ல பட்டாடைகள், நவமணிகள் முதலிய பற்பல பெற்றுக் கொண்டு அருள் புரிய வேண்டும்'' என்று வேண்டினார். பத்துப் பன்னிரண்டு முறை காலில் வீழ்ந்து பணிந்தார்.

சிறிது கோபம் தணிந்தவர் போல் சுவாமி ஒரு நாடகம் நடித்தார். ''அன்பனே! நிறையப் பொன்னும் மணியும் பிரமசாரியாகிய எனக்கு எதற்கு? உன் கையில் கொடுத்த கோவணத்துக்குச் சமமான கோவணத்தை இதோ தண்டில் கட்டிக் கொணர்ந்திருக்கிறேன். இதனைத் துலாக்கோலில் வைத்து ஈடாக ஒரு கோவணம் நிறுத்துத் தந்தால் போதும்'' என்று கூறித் தண்டினில் கட்டப்பட்டிருந்த கோவணத்தை எடுத்தார்.

அமர்நீதி நாயனார் வணிகர். பொருள்களைத் தராசில் நிறுத்து வாணிபம் புரிந்தார். ஆதலால், அத்துலையைக் கொண்டே சிவபதம் சேர்க்க எண்ணினார் இறைவர்.

துலை கொண்டு வந்து நாட்டப்பட்டது. மறையவர் தந்த கோவணத்தை ஒரு தட்டில் இட்டனர். மற்றொரு தட்டிலே தம்மிடம் நெய்து அழகாக இருந்த கோவணத்தை இட்டார் நாயனார். தட்டு சமம் ஆகவில்லை. மறையவர் கோவணமிட்ட தட்டு தாழ்ந்தது; மற்ற தட்டு உயர்ந்தது. தராசில் தவறு என்று பார்த்தார்கள். தராசு சரியாகத்தான் இருந்தது. அடியவர்கட்குக் கொடுப்பதற்கென்று வைத்திருந்த கோவணங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகத் தட்டினில் இட்டார் அமர்நீதியார். மறையவர் தட்டு தாழ்ந்து, அவரது தட்டு உயர்ந்து கொண்டே இருந்தது. அதனைக் கண்டு அதிசயித்தார் நாயனார். ''இது உலகில் எங்கும் இல்லாத மாயை; இக்கோவணத்தின் பெருமைதான் என்னே? எத்தனை கோவணமிட்டாலும் தட்டு சமமாகவில்லையே?'' என்று உள்ளம் மருண்டார்.

மறையவராக வந்த இறையவரோ இதனைக் கவனிக்காதவர் போல் ஜபம் செய்து கொண்டிருந்தார்.

வெண்மையான ஆடைகள், பட்டாடைகள், சிறந்த பீதாம்பரங்கள் எண்ணில்லாதன இட்டார். நாயனரது தட்டு உயர்ந்தது; இறைவருடைய தட்டு தாழ்ந்து கொண்டே வந்தது. ஒன்றும் புரியவில்லை நாயனாருக்கு. அதற்குச் சேக்கிழார்பெருமான் ஒரு காரணம் சொல்கிறார்.

மூட்டில் அன்பர்தம் அன்பிடுந்தட்டுக்கு
முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடும்
தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டுந்துகில் அநேககோ டிகளிடும்
பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத்
தட்டு.

அன்பு வைத்த இடத்தில் அருள் ஏற்படும். அன்புக்கு அருள் தாழத் தானே வேண்டும்? குழந்தை மீது அன்பும் அருளும் கொண்டார் அப்பா. ''உன் மேல் ஏறிக் கொள்கிறேன்'' என்று கூறும் குழந்தை. அப்போது தந்தைதானே தாழ வேண்டும்? அது போல, அடியவர் அன்புக்கு ஆண்டவர் அருள் தாழும். அன்பு மேலிட மேலிட அருள் தாழ்ந்து கொண்டே செல்லும். இதனை இறைவர் இச்செயல் மூலம் அறிவிக்கிற அழகும், சேக்கிழார் பெருமான் கூறும் சொல் திறமும் மிக மிக அழகாக அமைந்துள்ளன.

''எம்பெருமானே! ஆடை, பட்டு முதலியன இட்டும் தட்டு சமமாக வில்லை. ஆதலால், ஒரு விண்ணப்பம். என் தட்டில் பொன், மணி முதலியவற்றை இடுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார் நாயனார்.

''இவையெல்லாம் எனக்கு உதவுமா? இனி வேறு என்ன சொல்லவிருக்கின்றது? உனது விருப்பம் போல் செய்க'' என்றார் இறைவர்.

சேக்கிழார் காலத்தில் பதினாறு காரட் கிடையாது. நல்ல செம்பொன், வெள்ளி, நவமணித் திரள், வேறுபல உலோகங்களும், மற்றைய பொருள்கள் எல்லாவற்றையும் தராசில் இட்டார் அமர்நீதி நாயனார். அப்போதும் நாயனரது தட்டு தாழாது மேலே உயர்ந்தது. அதனைக் கண்டு அனைவரும் வியப்புற்றனர்.

தவநிறைந்த நான் மறைபொருள்
நூல்களாற் சமைந்த
சிவன் விரும்பிய கோவண மிடுஞ்செழுந்
தட்டுக்(கு)
அவனி மேலமர் நீதியார் தனமெலாம்
அன்றிப்
புவனம் யாவையும் நேர்நிலா என்பது
புகழோ?



புத்துணர்ச்சி மயம்

Premium
பிரீமியம் டால்க்

கருமையும் பொன்னிறமும் இணைந்த எடுப்பான டப்பாக்களிலுள்ள ஜே. கே. ஹெலன் கர்ட்டிஸ் பிரீமியம் டால்க் அத்தகையதே... கோடை நாட்களில் குளுமை நிறைந்த இதமான உணர்வை உங்களுக்கு அளிக்கும்... வசந்த காலப் புத்துணர்வோடு உங்களை நாள் முழுதும் வைத்திருக்கும்.

பிரீமியம் டால்க் — உலகப் புகழ் பெற்ற ஹெலன் கர்ட்டிஸ் ஸ்தாபனத்தின் தரமான அழகுசாதன அணிவகுப்பைச் சார்ந்தது.

J.K. Helene Curtis

ஏகபோக விநியோகஸ்தர்கள்: ஸ்பென்சர் & கோ. லிட்.


டுவின் டஸ்கர் துணிமணிகள்... டுவின் டஸ்கர் துணிமணிகள்... டுவின் டஸ்கர் துணிமணிகள்...
TWIN TUSKER
உங்களுக்கு கட்டுபடியாகும் விலையில் அதி நேர்த்தியான தாமுள்ள துணிமணிகள்—அவை தான் டுவின் டஸ்கர்! உறுதியானவை, நீடித்து உழைப்பவை, பலமுறை வெளுத்த பிறகும் அவைகளின் புதுமைப் பொலிவும் கெரவின் நேர்த்தியும் குன்றுதிருக்கவேண்டி சீரிய முறையில் தயாரிக்கப்பட்டவை.
மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை.
மானேஜிங் ஏஜண்டுகள் :
ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.
மதுரையைச் சேர்ந்த ஹார்வியின்
ஹார்வி
டுவின் டஸ்கர்
பாப்ளின்
டிரில்
கேம்பிரிக்

ஆசை என்னும் சங்கிலியின் நுனியில் இருக்கிறார் ஆண்டவர். ஒவ்வொரு பொருளின் மீதும் உள்ள ஆசையைவிட்டு விட்டால் சுவாமி வந்து விடுவார்.

"ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே"
— கந்தர நுபூதி

ஆசை முழுவதும் விட்டு விட்டவர் அருகில் இருக்கின்றாராம் ஆண்டவர்.

புவனமெல்லாம் ஒருங்கு கூடினும் இறைவருடைய கோவணத் தட்டுக்கு நிகராகாதது கண்ட அடியவர் அந்தணரைத் தொழுதார். "இனி வேறு பொருள் ஏதும் இல்லை. அடியேனும் அடியேனுடைய மனைவியும் மகனும் தராசில் ஏறுவதற்கு அனுமதி தர வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

இறைவர், அமர்நீதி நாயனாரைப் பிறவிப் பெருங் கடலினின்றும் கரையேற்றும் பொருட்டுத் தராசில் ஏற இசைவு தந்தருளினார்.

கற்பின் மிக்க மனைவியுடனும் மைந்தருடனும் ஒப்பற்ற அத்தராசை வலம் வந்தார் நாயனார். "சிவபெருமானே! இதுகாறும் திருநீற்று நெறியிலே பக்தி வைத்து அடியவர்க்குச் செய்த தொண்டில் அணுவளவேனும் தவறு இல்லையெனில், இத்தட்டு சமமாக வேண்டும்" என்று கூறிப் பஞ்சாட்சரத்தை ஜபித்துக் கொண்டே மனைவி மைந்தருடன் தட்டின் மீது திருநல்லூர் மேவிய தேவ தேவரைத் தொழுது ஏறினார்.

"இழைத்த அன்பினில் இறைதிரு
நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோமெனில் பெருந்துலை
நேர்நிற்க!" என்று
மழைத்த டம்பொழில் திருநல்லூர்
இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினார்
ஏறினார் தட்டில்.

தம்முடைய உடைமை யெல்லாம் துறந்த அமர்நீதியார் முடிவில் தம் மனைவி மக்களையும் தம்மையுமே துறந்தார். மனைவி மைந்தருடன் தாமே தராசில் ஏறினார்.

உடனே, துலையின் இரு தட்டுக்களும் சமமாகிவிட்டன. புவனத்தவர் கோவணமும், அமர்நீதியாரது குறைவிலாத அடிமைத் தொண்டும் ஒப்புடையனவன்றோ? இறைவருடைய பிரம்மசரியமும் அமர்நீதியாருடைய அடிமைத் தொண்டும் சமம் என்பதை உலகுக்கு உணர்த்தும் பொருட்டுத் துலை நேர்பட நின்றது.

அப்பர் பாடுகிறார் :



"என்ன தம்பி! உன் அரிசி வியாபாரம் எப்படி நடக்குது?"

"ம்...ம்...ம்...அதை நிறுத்திவிட்டேன்; இப்போ 'அரிசி ஸ்டாக் இல்லை'ன்னு போர்டு எழுதி விக்கறேன். வியாபாரம் சக்கைப்போடு போடுதுங்க!"

நாட்கொண்ட தாமரைப் பூந்தடஞ்
சூழ்ந்த நல்லூரகத்தே
கீட்கொண்ட கோவணங்காவென்று!
சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட கண்ணி மனைவியொ
டங்கோர் வாணிகரை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்கு
மன்றேஇவ் வகலிடமே

தொண்டருடைய பெருமையைக் கண்டு எல்லோரும் அதிசயித்தனர்.

தேவர்கள் அமர்நீதியாரின் பெருமையை வியந்து பூமழை பொழிந்தனர். அப்பூ மழையில் மறைந்து விட்டார் இறைவர். திருநல்லூரில் தேவாதி தேவர் எந்தக் கோலத்துடன் உள்ளனரோ அதே கோலத்துடன் விடையின் மீது உமையம்மையாருடன் காட்சியளித்தருளினார். முக்கண் மூர்த்தியைக் கண்ட அமர்நீதி நாயனார் தொழுதார், துதித்தார்.

நாதர் தம்திரு வருளினால் நற்பெருந்
துலையே
மீது கொண்டெழு விமானம தாகிமேற்
செல்லக்
கோதில் அன்பரும் குடும்பமும் குறை
வறக் கொடுத்த
ஆதி மூர்த்தியா ருடன்சிவ புரியினை
அணைந்தார்.

தலைவருடைய கருணையால் துலையே விமானமாகியது. அதில் அமர்ந்திருந்த அமர்நீதி நாயனார் அவரது மனைவியார், மைந்தர் மூவரும் மேற்சென்று சிவபுரம் சேர்ந்து சிவானந்தப் பெருவாழ்வு பெற்றார்கள். (தொடரும்)

மாப்பிள்ளை நடந்தால்

• ரவீன்ஸ் •

“கூப்பிடு ராமசாமியை!” என்ற அதிகாரத் தொனி கல்யாண வீட்டை இரண்டு பண்ணிற்று.

மறு கணம் பலர் பல பக்கங்களில் ராமசாமியைத் தேடிப் பறந்ததில் ஏற்கனவே கும்பலில் இரண்டுபட்டுக் கொண்டிருந்த கல்யாண வீடு நாலாகி, எட்டாகிக் கக்கல் கக்கலாவது போன்று ரகளைப்பட்டது.

சீட்டாட்டக் கும்பல், கையிலிருந்த சீட்டுகளைப் போட்டு விட்டு விழித்து நின்றது பரபரப்புக்குக் கா ர ண ம் தெரியாமல். சீட்டைக் கையில் எடுத்துக்கொண்டு விட்டால் யாருக்குத்தான் இவ்வுலகத்தில் நடக்கும் விஷயங்கள் தெரியும்?

தன் பேத்திக்குச் சம்பந்தத்துக்காக எச்சுமிப் பாட்டியிடம் விசாரித்துக் கொண்டிருந்த காமுப் பாட்டிகூட ஸ்தம்பித்து நின்றுவிட்டாள் ஒரு விநாடி. ஆனால் இதெல்லாம் அசந்து விடக் கூடியவளா அவள்! அடுத்த நிமிடமே தன் பேச்சைத் தொடரத்தான் செய்தாள்.

சத்தம் போட்டுக் கர்ஜித்த விசு மாமாவை அணுகிப் பெண்ணின் அண்ணன் ராகவன் கேட்டான்: “என்ன மாமா விவரம்?”

“மாப்பிள்ளைப் பையனைச் சரியாகப் பார்த்தியாடா?” என்று அதட்டினார் அவர்.

“என்ன விஷயம் மாமா?”

“போய்ப் பார்த்துவிட்டு வாடா” என்றார் மாமா விறைப்பாக.

“என்ன? என்ன விஷயம் மாமா?” என்று கேட்ட ராகவனுக்கு உடல் முழுதும் வியர்த்துக் கொட்டியது. விஷயம் என்னவென்று தெரியாவிட்டாலும் விஷயம் விபரீதம்தான் என்று புரிந்து கொண்டு விட்டான்.

“மாப்பிள்ளை அழகை நடக்க விட்டுப் பாருடா” என்று கூறினார் மாமா.

என்ன சொல்கிறார் அவர் என்று புரியாமல் சற்று நிதானித்த ராகவன் பிறகு வேகமாக நடந்தான்.

விசு மாமா பம்பாயிலிருந்து வந்தவுடனேயே, “உலகம் கெட்டுப் போச்சுங்கறது எல்லாம் வெறும் பேச்சு. அதைக் கெடுத்ததே நாம்தானே! மாப்பிள்ளை பெண் வீட்டுக்கு வந்து பெண்ணைப் பார்ப்பதுதான் சம்பிரதாயம். நீங்க வலைத்தானை அழைச்சுக்கிட்டு மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்க் காட்டிவிட்டு வந்திங்களாமே? நல்லா இருக்கா?” என்று இடித்துக் காட்டியிருந்தார்.

அந்தச் சம்பவத்தைத் திரும்பவும் தம் சிந்தனைக்குக் கொண்டு வந்த அவர், இப்போது பெண்ணின் தந்தையை நோக்கிக் கத்தினார்: “அசல் பேஸ்துடா நீ! இப்போ தெரியுதா காரணம்?”

“என்ன காரணம் விசு? விஷயத்தை உடைக்காமல் இப்படிக் கத்திக்கிட்டு இருக்கியே!”

“டேய், மாப்பிள்ளை நடந்து பார்த்தியாடா நீ?”

“ஏன்? என்ன விஷயம்?”

“பார்த்தியா?”

“பார்த்தேனே!”

“நல்லா யோசனை பண்ணிச் சொல்லு. நீ இவங்க வீட்டிலே இருந்த நேரம் முக்கால் மணி. அதிலே நீ அவன் நடந்து பார்த்தியா?”

“இல்லே போல இருக்கே. அதைப் பத்தி இப்ப என்ன?”

“அங்கேதாண்டா உன் மூளை கெட்டுப் போச்சு. நான் இப்ப அவனைப் பார்க்கப் போனேண்டா. அவன் என்னைக் கண்டு எழுந்து மரியாதை செய்யலே. என்னடா விஷயம்னு பார்த்தா, பையனுக்குக் கால் சரியில்லே. நொண்டறாண்டா. தெரியுமா உனக்கு?”

அகில உலகமே இருண்டு விட்டது பெண்ணின் தகப்பனாருக்கு. ‘மாப்பிள்ளை நொண்டியா? ஐயோ!’

“டேய், விசு! நீ பேசறது உண்மைதானாடா?”

“போடா சோம்பேறி, கல்யாணத்தை நிறுத்த என்ன செய்ய வேண்டுமோ அதைப் பத்தி யோசனை பண்ணு. திரும்பத் திரும்ப என்னை இதைப் பத்திக் கேட்காதே.”

இதற்குள் அங்கு திரும்பி வந்த ராகவன் “மாப்பிள்ளை குளிக்கிறாராம். அவரைப் பார்க்க முடியலே மாமா!” என்றான்.





வில்லன் சிரிப்புச் சிரித்த மாமா வெற்றிப் பெருமிதம் கொண்டவர்போல் பெண்ணின் தந்தையை நோக்கிச் சொன்னார்: ''பார்த்தியாடா அவங்க சமாளிக்கிற விதத்தை? ம்... நான் சொன்னதைச் செய்.''

அசந்து போய் உட்கார்ந்து விட்டார் பெண்ணின் தகப்பனார். தலையில் இடி விழுந்தது போலிருந்தது அவருக்கு.

விஷயத்தைக் கிரகித்துக் கொண்ட ராகவன் ஓடினான், ராமசாமியைத் தேடி. ராமசாமிதான் இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தவன்.

இதற்குள் அந்தப் பக்கம் வந்த கல்யாணப் பெண் தன் தந்தை கண் கலங்குவதைக் கண்டு விஷயம் என்னவென்று மாமாவைக் கேட்க, அவர் விஷயத்தைச் சொல்ல அவள் இடிஇடி யென்று சிரித்தாள்.

மாமாவின் நிலை சற்றுத் தடுமாறியது. பெண் அதிர்ச்சி தாங்காமல் 'ஹிஸ்டீரி' விட்டாளா என்ன? கலங்கிப் போன மாமா, ''அம்மா வசி, வசிக்கண்ணு! நீ ஒண்ணுக்கும் கலங்காதேடி, உனக்கு இந்த மேடையிலேயே வேறொருத்தனை முடிச்சுடறேன்'' என்று தேறுதல் சொல்ல, மேலும் மேலும் சிரித்தாள் வசி. சற்றுத் தன் உற்சாகம் குறைந்ததும், ''நல்ல வேடிக்கை மாமா இது'' என்றாள் அவள்.

''என்னடி பொண்ணே, இது உனக்கு வேடிக்கையா இருக்கா?''

''பின்னே என்ன மாமா? அவருக்கு நேற்று முன்தினம் காலில் சுளுக்கு ஏற்பட்டு விட்டது. இன்னும் குணமாகவில்லை. அதனால்தான் அவர் விந்தி விந்தி நடக்கிறார். நீங்க என்னடாவென்றால்....''

''ஓஹோ...உன்னிடம் இப்படிச் சொல்லியிருக்காங்களா அவங்க வீட்டுப் பொண்ணுங்க ?'' என்றார் மாமா.

''இல்லே, மாமா! உண்மையே அதுதான். எனக்கு அவரை நன்றாகவே தெரியும்.''

''எவ்வளவு நாட்களாக?''

''இரண்டு வருஷங்களாக...''என்று சொன்னவள் கன்னம் ரத்தச் சிவப்பாவதைக் கண்ட மாமா, ''ஓஹோ! காதலுக்குக் கண்ணு தான் இல்லேன்னு கேள்விப்பட்டிருக்கேன். இப்போ அதுக்குக் கால்கூட வேண்டாம்னு தெரியுது'' என்றார் எகத்தாளமாக.

வசி தன் காதல் கதையை விவரித்து, எப்படியோ இந்த விஷயத்தைத் தன் தந்தைக்கு மறைத்துத் தன் ஒன்றுவிட்ட அண்ணன் ராமசாமி மூலம் தன் காதலைக் கல்யாணமாக நிறைவேற்றிக் கொண்ட விவரத்தைச் சொல்ல, மாமாவின் முகம் பிரகாசம் அடைந்தது. அப்போதுதான் ''என்ன மாமா! கூப்பிட்டீர்களா?'' என்று பயத்துடனேயே வந்த ராமசாமியைப் பார்த்து மாமா சொன்னார்:

''டேய், மாப்பிள்ளைக்குக் காலில் சுளுக்காம். கொஞ்சம் விளக்கெண்ணெய் தடவி ஒத்தடம் கொடுக்க ஏற்பாடு செய். நீதான் இந்த வேலையை நிறைவேற்ற லாயக்கு!''



நவீன காலத்து
வாழ்க்கை
வசதிகள்
YOU ARE NOT HYGIENIC WHILE USING A
SOAP CAKE
HOMACOL
SOAP SYSTEM
NANDKISHORE KHANNA & SONS, POST BOX 1067, BOMBAY-1
Distributors: PRINCE & CO., 40, Rajah Annamalai Chettiar Road, Madras
SASIDHARA CONCERN, 33, Jumma Masjid Rd., Bangalore



ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்
KUM KUM PASTE
Eyetex
ARAVIND LABORATORIES
ஐடெக்ஸ் கண்மை
சாஸ்திரிய முறையில்
தயாரிக்கப்பட்டது.
ஐடெக்ஸ் பிந்தி
குங்கும சாந்து பல
கவர்ச்சியான கலர்களில்
எங்கும் கிடைக்கும்.
ஐடெக்ஸ்
குங்கும் பேஸ்ட்டு
EYETEX
அரவிந்த் லாபரட்டரீஸ், P. B. 1415 சென்னை-17



மாமலையேறிய மாணவர்கள்

பத்திரிகை நிருபர் ஒருவர் மாமலையேறி வெற்றி கண்ட கோஷ்டித் தலைவர் ஜெய்குமாரைக் கேட்டார்: ''உங்களுக்கு மாமலை ஏற வேண்டுமென்ற எண்ணம் எப்படித் தோன்றியது?''

''உங்களுக்குப் பத்திரிகைத் தொழிலில் சேர வேண்டுமென்ற எண்ணம் எப்படித் தோன்றியது? அதைப் போலத்தான் எனக்கும் மலைகளின் மீது ஏற வேண்டுமென்ற ஆசையும் பிறந்தது!'' என்று பளிச்சென்று பதிலளித்தார் ஜெய்குமார்.

''எனக்கு அது வேலை!''

''எனக்கு மலை யேறுவது பொழுது போக்கு!''

மாணவர்கள் என்றும் 'ஸ்டிரைக்' செய்வதில்தான் ஆசை என்ற எண்ணத்தை ஜெய்குமார் தலைமையில் சென்ற ஆறு மாணவர்கள் தங்கள் அபார சாதனை மூலம் பொய்ப்பித்து விட்டனர். பிற நாட்டுக்காரர்களுக்குத் தான் எவரெஸ்ட் மலைச் சிகரங்களை எட்டிப் பிடிக்கும் ஆசை இருக்கும், நம்மவர்கள் இதில் பின்தங்கி யிருக்கின்றனர் என்ற அவதூறை நீக்கி விட்டார்கள். இருபத்துமூன்று வயதுக்குள் உள்ள இம்மாணவர்கள்.

இந்திய தொழில் நுணுக்கக் கல்லூரியைச் சேர்ந்த ஜெய்குமார், ஜார்ஜ் வர்கீஸ், ஸ்ரீகாந்த்; பம்பாய் சர்வகலாசாலையைச் சேர்ந்த ராம்தாஸ் பிரபு, ஹரிஷ்சாப், பிலானி பிர்லா தொழில் நுணுக்கக் கல்லூரியைச்



சேர்ந்த வி. வி. சீனிவாசன்; ஹிமாசலப் பிரதேச சர்வகலாசாலை மாணவர் ஜகதீஷ் குமார் ஆகியோர் இந்த மாபெரும் சாதனையைச் செய்ய முன்வந்தார்கள். பஞ்சாபிலே அதிக உயரமுள்ள இருபத்திமூன்றாயிரம் அடிகளுக்கு மேலுள்ள இமாலய மலை உச்சி ஷிலாவை அடைந்தார்கள்.

கோஷ்டித் தலைவர் ஜெய்குமாருக்குச் சிறு பிராயத்திலேயே மலையேறும் ஆசை உண்டு! ஜெய்குமார் நிரம்பிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது சகோதரி உஷா தேர்ந்த விமான ஓட்டியாகப் பெருமை பெற்றவள். தென்னிந்தியாவில் உள்ள ஆனைமலை, நீலகிரி மலை ஆகியவற்றைத் தம் நண்பர்களுடன் ஏறிப் பழகியவர் ஜெய்குமார். தம் பள்ளிப் படிப்பைக் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தொடங்கினார். பி.யு.சி. வகுப்பை லயோலாக் கல்லூரியில் கற்று இப்போது இந்தியத் தொழில் நுணுக்கக் கல்லூரியில் மெக்கானிகல் பிரிவில் இறுதியாண்டு படித்து வருகிறார்.

ஜெய்குமார் மலையேறும் கலையை முறை யாகப் பயின்றவர். என். ஸி. ஸி. படையில் சேர்ந்துள்ள தருணத்தில் அவருக்கு இமா லய மலையேறும் பள்ளியில் கற்கும் வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்திக் கொடுத் தனர். பத்தொன்பதாம் வயதிலேயே முதல் தர மலையேறும் நிபுணர் பட்டத்தைப் பெற்றார். ஆகவே ஷீலா சிகரத்தை அடை யும் கோஷ்டியின் தலைமையை நன்றாக அவ ரால் நிர்வகிக்க முடிந்தது.

பனி மூடிய மலைச் சிகரத்தில் இயற்கையை வெற்றி கொள்ளுவதோடு, மனிதனுக்கு ஏற்படும் மாறுதல்களை அறிந்துகொள்ளும் ஆசையும் இம்மாணவர்களுக்கு இருந்தது. இதுவரை ஏறாத மாமலை ஷீலாவை வெற்றி பெறவேண்டும் என்ற அவா இந்த இளைஞர் களுக்கு உள்ளத்தில் உத்வேகத்தை ஏற்படுத்தி யது. குளுப் பள்ளத்தாக்கில் உள்ள மணலி யிலிருந்து இவர்கள் கோஷ்டிப் பிரயாணத் தைத் தொடங்க வேண்டும். ரோஹ்டங்ட் கணவாய், குன்கன் கணவாய் ஆகியவை பனி மூடியிருந்ததனால் இவர்கள் போட்ட திட்டப் படி மே மாதக் கடைசியில் புறப்பட இயல வில்லை. இதற்குள் இவர்களால் சும்மா யிருக்க முடியவில்லை. டியோ — திப்பா — 19,980 அடி உயரமுள்ள மலைச் சிகரத்தில் ஏறிப் பயிற்சி பெற்ற பின், நூற்றிருபத் தைந்து மைல் தூரம் கடக்க வேண்டிய மாமலை ஷீலாவை ஏறத் திட்டமிட்டனர். தங்கள் ஆசை, துணிவு ஆகியவற்றினால் நூறு மைல் தூரமுள்ள பயங்கரப் பள்ளத்தாக்கு களையும், கணவாய்களையும் ஒரு வாரத்தில் கடந்து 16,000 அடியில் தங்கள் அடிவார முகாமை அமைத்தனர். எத்தனையோ இடை யூறுகளுக்கும் பனிச் சரிவுகளுக்கும் மத்தியில் ஜூலை 19ம் தேதியும் 20ந் தேதியும் மாணவர் கோஷ்டி இரு பிரிவாகப் பிரிந்து சென்று ஷீலா மலை உச்சியை அடைந்தனர். முதல் பிரிவின் தலைவன் ஜெய்குமார் 19—ந் தேதி காலை 8 மணிக்கு இந்திய தேசியக் கொடி, என். ஸி. ஸி. கொடி, இந்தியத் தொழில் நுணுக்கக் கல்லூரிக் கொடி ஆகியவற்றை ஷீலா மலைச் சிகரத்தில் நிலைநிறுத்திப் புகழ்க் கொடியை உயர்த்தினார்.

ஷீலா மலைச் சிகரத்தில் மாணவர்களில் ஒருவர் முன்னேறிக் கொண்டிருந்தார். திடீரென்று கூழாங்கல் அளவுள்ள பாறை விழுந்தது. உடனே அந்த மாணவர் மலை ஏறுவதை விட்டு மலைச் சரிவில் நன்கு ஒண்டிக் கொண்டு அங்கு நன்கு பதிந்திருந்த பாறை யின் பக்கலில் பதுங்கிக் கொண்டார். அடுத்த கணம் உயரே இருந்து பெயர்ந்த மிகப் பிரும்மாண்டமான பாறை உருண்டு சரிந்து கீழே கீழே போய்க் கொண்டிருப்பதைக் கண்டார். அந்தச் சமயத்தில் அந்த மாண வர் ஏற முயன்றிருந்தால் அந்தப் பாறையால் தாக்கப்பட்டு அதள பாதாளத்தில் போயிருப் பார். வரப்போகும் ஆபத்தைச் சிறு கற்க ளின் உருவத்தில் முன்கூட்டியே உணர்த்திய கடவுளின் கருணையை அந்த மாணவர் சொல்லிச் சொல்லி வியந்தார்!

மாணவர்களின் இந்த அரிய சாதனைக்கு வித் திட்டவர்கள் கேரள மலையேறுபவர்கள் சங் கத்தினரும், அதனைச் சேர்ந்த கர்னல் ஜி. வி. ராஜாவும் ஆவார். இவர் களுக்கு நிதி உதவி அளித் தவை புதுதில்லி இந்திய மலை ஏறுவோர் கழகம், சென்னை ராஜ்ய விளை யாட்டுக் கழகம், என். ஸி. ஸி., கேரள விளை யாட்டுக் கழகம். —மணி.





இரு ஜெய்குமார்

நம்பிக்கை வீணாகவில்லை!

"ராகம்"

இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட புகழ் பெற்ற வைரங்களில் சான்சி வைரமும் ஒன்று. இது இந்தியாவில் எங்கே எப்பொழுது கண்டெடுக்கப்பட்டது என்கிற விவரம் தெரியவில்லை. பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் இது டி சான்சி என்கிற பிரெஞ்சுப் பிரபு ஒருவரிடம் இருந்தது. அதனால் சான்சி என்கிற பெயரைப் பெற்றது.

1589ம் ஆண்டில் ஹென்றி என்பவன் பிரெஞ்சு மன்னனாக மகுடம் சூட்டிக் கொண்டான். அவனுடைய அரச சபையில் டி சான்சி நிதி அமைச்சர் பதவி வகித்தார். ஹென்றிக்கு ஒரு சமயம் பண முடை ஏற்பட்ட பொழுது, அவனுக்கு உதவி செய்ய நினைத்த நிதி அமைச்சர் தம்முடைய சொந்தப் பொருளான சான்சி வைரத்தை மிகவும் நம்பிக்கையான பணியாள் ஒருவனிடம் கொடுத்து, வேறோர் ஊரில் அடகு வைத்துப் பணம் வாங்கிக் கொண்டு வரும்படி சொல்லியனுப்பினார்.

அந்தப் பணியாள் காட்டுப் பாதையொன்றில் சென்று கொண்டிருந்தபொழுது, அவன் அவ்வைரத்தை எடுத்துச் செல்கிறான் என்பதை அறிந்த திருடர்கள் சிலர் அவனை வழிமறித்துக் கொன்றார்கள். ஆனால் அவனிடமிருந்து அவர்களுக்கு வைரம் கிடைத்தபாடில்லை! பிரேதத்தை விட்டெறிந்து விட்டுத் திருடர்கள் ஓடி விட்டார்கள்.



சான்சிக்குச் செய்தி எட்டியது. அந்தப் பணியாள் மீது அவருக்கு அசையாத நம்பிக்கை. வைரத்தைக் களவுபோக அவன் விட்டிருக்க மாட்டான் என்று அவர் திடமாக நம்பினார். அவனுடைய பிரேதத்தைக் கொண்டு வரச் செய்து பரிசோதித்துப் பார்த்தார். அவனுடைய வயிற்றைக் கிழிப் பார்த்தபோது அதிலிருந்து வைரம் வெளிப்பட்டது! கள்ளர்களிடம் வைரம் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதற்காக அவன் அதை விழுங்கி விட்டிருக்கிறான்!

இவ்வைரம் பிறகு இளவரசன் சார்லஸ் வசம் வந்தது. இவ்விளவரசன் அவ்வைரத்தை அணிந்து கொண்டு ஒரு போருக்குச் சென்றான். அங்கே அவன் பெருந்தோல்விகண்டு ஓடினான். அப்பொழுது எப்படியோ இவ்வைரம் தவறிப் போர்க்களத்தில் விழுந்து விட்டது. அதை ஒரு சுவிஸ்நாட்டுப் போர்வீரன் கண்டெடுத்தான். அது விலை உயர்ந்த வைரம் என்பதை அவன் உணர்ந்து கொள்ளவில்லை. ஏதோ உயர்ந்த கண்ணாடிக் கல் என்று நினைத்து விட்டான் போலும். ஒரு சில ரூபாய்களுக்கு அதை அவன் ஒரு பாதிரிக்கு விற்றான். அதன் மதிப்பை அறியாத அந்தப் பாதிரி ஒருசில ரூபாய் ஆதாயத்துடன் ஒரு வியாபாரிக்கு விற்றான்!

கடைசியில் எப்படியோ அது போர்த்துக்கீசிய மன்னன் வசம் சேர்ந்தது. அவனுக்கு ஒரு சமயம் பணம் தேவைப்பட்டது. சான்சி வைரத்தை சான்சியிடமே அடகு வைத்து அவன் பணம் பெற்றுக் கொண்டான்!

புகழ் பெற்ற ஆங்கில அரசி எலிஸபெத்தின் கைக்கு இவ்வைரம் ஒரு சமயம் வந்து சேர்ந்தது. அவள் இறந்தபிறகு அவளைத் தொடர்ந்து பட்டமேறிய மன்னனுக்கு இது சொந்தமாயிற்று. 1688ம் ஆண்டில், இங்கிலாந்தின் சிம்மாசனத்தி

லிருந்து விரட்டப்பட்ட இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் இதைத் தன்னுடன் எடுத்துச் சென்று, பதினான்காம் லூயி என்கிற பிரஞ்சு மன்னனுக்கு விற்றான்.

பிரெஞ்சுப் புரட்சியின்போது களவாடப்பட்ட வைரங்களில் இதுவும் ஒன்று. ஆனால் இவ்வைரம் மீட்கப்படவில்லை. எங்கெங்கு சென்றதோ, எத்தனை கைகள் மாறியதோ, தெரியவில்லை. வெகு நாட்கள் கழித்து ஒரு பணக்கார ருஷிய குடும்பத்தினிடம் இது இருப்பது தெரிய வந்தது. இதை அவர்கள் ஓர் ஆங்கில வியாபாரிக்கு விற்றார்கள். அவன் இதைப் பாட்டியாலா மகாராஜாவுக்கு விற்றான். சான்சி வைரம் இந்தியாவில் தான் இருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது.



வைரங்களின் வரலாறு 4

ஓர்லாஃப் என்கிற பெயரைப் பெற்று விட்ட மற்றோர் இந்திய வைரத்தின் வரலாற்றைக் கவனிப்போம்.

நீல வைரத்தின் கதைக்கும் இதன் கதைக்கும் நிறைய ஒற்றுமை இருக்கின்றது. இது இந்தியாவில் எங்கே எப்பொழுது கண்டெடுக்கப்பட்டது என்பது தெரியவில்லையாயினும், மைசூரிலிருந்த கோவிலொன்றின் தேவியின் சிலையின் கண்கள் ஒன்றில் இது வெகுகாலம் பொறித்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. மைசூரில் கூடாரமடித்திருந்த பிரெஞ்சு சேனையைச் சேர்ந்த பிரெஞ்சுப் போர்வீரன் ஒருவன் இவ்வைரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டான். அதை எப்படியாவது திருடி விடுவது என்று தீர்மானித்துக் கொண்டான்.

முதல் வேலையாக அவன் ராணுவத்திலிருந்து விலகிக் கொண்டான். பிறகு கோயிலுக்கருகில் ஒரு வேலையில் அமர்ந்தான். கிறிஸ்துவனான அவனுக்குக் கோயிலுக்குள் நுழைய அனுமதி கிடைக்கவில்லை. எப்படிக் கோயிலுக்குள் நுழைவது என்பதைப் பற்றி யோசிக்கலானான். இந்துவைப் போல் வேஷம் போட்டுக் கொண்ட இப்பிரெஞ்சுக்காரன் தாராளமாகக் கோயிலுக்குள் நுழைந்தான். ஆனால் தேவியின் சிலை உட்பிராகாரத்திலிருந்தது. குருக்கள் மட்டுமே அங்கே நுழைய முடிந்தது. அதைப் புரிந்து கொண்ட இவன் பெரிய பக்தனைப் போல் நடிக்க ஆரம்பித்தான். எப்படியோ சில நாட்கள் கழித்து குருக்களுக்கு உதவி செய்யும் வேலை இவனுக்குக் கிடைத்தது. பிறகென்ன? ஒரு நாள் இரவு இவன் தேவியின் சிலையிலிருந்த வைரத்தைப் பெயர்த்தெடுத்துத் தனது துணிக்குள் மறைத்துக் கொண்டு வெளியேறினான். வெளியே புயற்காற்று வீசிக் கொண்டிருந்தது. அதையும் பொருட்படுத்தாமல் சென்னையை நோக்கி நடையைக் கட்டினான். பல வித கஷ்டங்களுக்குப் பிறகு சென்னையை அடைந்த அவன் அதைக் கணிசமான விலைக்கு ஒரு கப்பல் தலைவனுக்கு விற்றான். அவன் அதை ஓர் அமெரிக்க வைர வியாபாரிக்கு விற்க, அவன் அதை ருஷ்ய இளவரசன் ஓர்லாஃப் என்பவனுக்கு விற்றான்.

இரண்டாம் கேதரைன் என்கிற ருஷிய அரசிக்கு ஓர்லாஃப் காதலனாக இருந்தான். அவளை மகிழ்விக்கும் பொருட்டு இவ்வைரத்தை அவளுக்கு 1772ம் ஆண்டில் பரிசாகக் கொடுத்தான்.

195 காரட் எடையுள்ள இவ்வைரம் ஓர்லாஃப் என்கிற பெயரைப் பெற்று ருஷிய பொக்கிஷ சாலையை அடைந்தது.

ருஷியாவில் கம்யூனிஸ்ட் அரசாங்கம் பதவியைக் கைப்பற்றியதல்லவா? அதற்குப் பணம் தேவைப்பட்டது. அப்பொழுது அது அரசாங்கப் பொக்கிஷ சாலையைச் சேர்ந்த விலை உயர்ந்த மணிகள், நகைகள் முதலியவற்றை விற்க ஆரம்பித்தது. அப்படி அவ்வரசாங்கத்தால் 1922ம் ஆண்டிலிருந்து 1926ம் ஆண்டு வரை விற்கப்பட்ட பொருள்களில் ஓர்லாஃப்பும் ஒன்று.

இப்பொழுது ஓர்லாஃப்பும் இந்தியாவில் இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த ஓர்லாஃப் வைரம் மைசூர் கோவிலிலிருந்து களவாடப்பட்ட வைரமல்ல என்றும் பிரெஞ்சு வைர நிபுணன் டேவர்னியே முகலாயப் பொக்கிஷத்திலிருந்து எப்படியோ எடுத்துச் சென்ற வைரந்தான் அது என்றும் சிலர் கருதுகிறார்கள்.

[தவறுகள் மலிந்தபோது அவற்றைச் சுட்டிக் காட்டி, நல்ல கருத்துக்களைப் பரப்புவது எழுத்தாளன் கடமை. எழுத்துக்குள்ள சக்தி அளவிட முடியாதது. உதாரணமாகச் சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றின் விவரங்களைக் காண்போம்.]

சக்தி பிறக்குது எழுத்தினிலே

மீனாட்சி கிருஷ்ணன்

ராஃல்ப் நேடர் 32 வயதேயான வழக்கறிஞர். ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்ற இவ்விளைஞர் அண்மையில் எழுதி வெளியிட்ட ''எந்த வேகத்திலும் அபாயகரமானது'' (Unsafe at any speed) என்ற நூல் அமெரிக்கப் பொருளாதாரத்தின் ஆணி வேர் என்று சொல்லப்படும் வாகன உற்பத்தியாளர்களைக் கதிகலங்க அடித்திருக்கிறது.

''நாட்டில் இயந்திர வளம் பெருகப் பெருக வேகம் அதிகரிக்கிறது. வேகமான வளர்ச்சியில் போட்டி போடும்போது மிருதியான வேகம் மேலும் தேவைப்படுகிறது. ஆனால் இந்த வேகத்தைத் திறமையாக அடையும் சக்தி நாம் சமைக்கும் இயந்திரங்களுக்கு இருக்கிறதா?'' என்றதொரு மனச்சாட்சியைத் துளைக்கும் கேள்வியைக் கேட்டுவிட்டு ரோல்ஸ் ராய்ஸ் சருக போக்ஸ்வாகன் வரை எல்லா வாகனங்களிலும் உள்ள குறைகளை அலசி ஆராய்ந்திருக்கிறார். ஆனால் இந்த நூலால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஸ்தாபனம் ஜெனரல் மோட்டார்ஸ். இந்நூல் வெளியான பிறகு அவர்களது வியாபாரம் 5.7 சதவிகிதம் குறைந்துபோய் விட்டது. 1965-ல் உற்பத்தி செய்யப்பட்ட ''கார்வைர்''-என்ற வாகனங்களில் 18,596 கார்கள் பழுது பார்ப்பதற்காகத் தொழிற்சாலைக்குத் திரும்பி விட்டன. அவற்றின் விற்பனை 70 சத விகிதம் குறைந்து விட்டது.

இதனால் கலவரமுற்ற ஜெனரல் மோட்டார்ஸ் அதிபர்கள் நேடரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஒற்றர்களை நியமித்தனர். இந்த ஒற்றர்கள் அவரை எக்கச்சக்கமான நிலைகளில் சிக்கவிட முயன்றனர். முடிவில் தோல்வியுற்றனர். அதோடு நிற்காமல், இவ்விஷயம் அமெரிக்கக் காங்கிரஸ் வரை எட்டி, முடிவில் அந்த மோட்டார் உற்பத்தி ஸ்தாபனத்தின் தலைவர் ஜேம்ஸ் ரோச் தாமே வாஷிங்டன் சென்று மன்னிப்புக் கோரும் நிலைமை ஏற்பட்டது. நூலைப் படிக்கும்போது நாம் யூகித்தறிய முடியாத பல நூறு உண்மைகள் புலப்படுகின்றன. உதாரணமாக ஒன்று:

''சென்ற ஆண்டில் (1965) அமெரிக்காவில் ஒன்றரைக் கோடி விபத்துக்கள் இரண்டு கோடி கார்களால் ஏற்பட்டன. இவற்றில் மாண்டவர்கள் 49,000. ஊனமுற்றவர்கள் 18 லட்சம். பொருட் சேதம் தவிர, ஊதிய நஷ்டம் மாத்திரமே 81 லட்சம் டாலர்கள். முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவர்களின் மரண விகிதம் அதிகமாவதின் பெரிய காரணம் கார் விபத்துக்கள்.''

இதுபோன்ற திடுக்கிடும் செய்திகள் பல அடங்கிய இந்நூல் அமெரிக்கக் காங்கிரஸின் பார்வைக்கு வந்தது. அதன் விளைவாக வாகன உற்பத்திக் குறைபாடுகளைக் கண்காணிக்க 'செனட் சப் கமிட்டி' ஒன்று உருவாகியிருக்கிறது. அதன் தலைவர் ஆப்ரகாம் ரிபிகாவ் என்பவர் நேடருக்குச் சிறந்த புகழுரை தந்திருக்கிறார்.

ஜெனரல் மோட்டார்ஸ், போர்டு, கிரைஸ்லர் ஸ்தாபனங்கள் தமது உற்பத்தித் திட்டங்களில் பாதுகாப்பு சாதனங்களை அதிகமாகப் புகுத்துகின்றனர், இந்நூலின் விளைவாக.

எந்த விஷயத்தையும் எளிதில் புகழாத ''டைம்'' பத்திரிகை இந்நூலைப் பற்றிக் கூறியதாவது: ''வழக்கறிஞர் ஒருவரின் ஒருமுகமான தனிப்பட்ட கருத்துக்களடங்கியது இந்நூல். என்றாலும் உற்பத்தித் திறனில் மிக உயர்ந்த நிலையை அடைந்து விட்டதால் தலைக்கனம் மிகுந்துவிட்ட வாகன உற்பத்தித் துறைக்கு இந்நூல் ஓர் அதிர்ச்சி வைத்தியம்!''

உண்மைதானே! மக்களைப் பாதிக்கும் விஷயங்களை அப்பட்டமாக உரைக்கும் இந்நூல் வெளியான மூன்றே மாதங்களில் அமெரிக்காவில் அதிகமாக விற்பனையாகும் நூல்களில் ஆறுவதாக விளங்குகிறது. இதன் பயனாக, பிரிட்டனைச் சேர்ந்த ''சன்டே டைம்ஸ்'' ராஃல்ப் நேடரை ''கோலியாத்தை வென்ற டேவிட்'' என்ற விருதைக் கொண்டு கௌரவித்திருப்பதில் வியப்பில்லையல்லவா?



ஸ்ரீ கே. எஸ். காசிராமன் B. Com., அவர்களுக்கும், கல்கத்தா, ELMIச்சார்ந்த ஸ்ரீ எஸ். வி. சர்மா அவர்களின் குமாரத்தி சௌ. லலிதாவுக்கும் சமீபத்தில் கன்னியாகுமரி, மகாதானபுரத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

அத்தியாயம் பதினெட்டு

லக்ஷ்மியின் தவிப்பு

நான்கு வெண்புரவிகள் பூட்டிய ரதமொன்று மதுரையிலிருந்து புறப்பட்டுத் தஞ்சையை நோக்கிக் காற்றெனக் கடுகி விரைந்து கொண்டிருந்தது. ரதத்துக்கு முன்பாகச் சில மெய்க்காவல் வீரர்கள் குதிரைகளில் பறந்து கொண்டிருந்தார்கள். விசுவநாதன் ரதத்தினுள்ளே தனியாகச் சாய்ந்து கொண்டிருந்தான்.

அவனுடைய வாழ்க்கையில் அவனால் மறக்க முடியாத பிரயாணம் அது. ரதத்தினுள்ளே சூழ்ந்திருந்த தனிமை அவனுக்கு எல்லையற்ற குதூகலத்தைக் கொடுத்தது. அதைப் போலவே ரதத்தின் வேகமும் அவனைப் பரவசத்தில் ஆழ்த்தியது. லட்சுமி அப்போது அவனுடைய நெஞ்சு முழுவதும் நிரம்பியிருந்தாள். அவனுக்கு அருகில் அவள் ரதத்தில் அமர்ந்திருப்பது போலவும், அவனுடைய விழிகளில் தென்பட்ட பொருள்களிலெல்லாம் அவளது புன்னகை பூத்த முகம் காட்சியளிப்பது போலவும் தோன்றியது.

பொறுப்புக்களையெல்லாம் அரியநாத முதலியார் ஏற்றுக் கொண்டு, ''தங்களுக்குப் பாண்டிய நாட்டைப் பற்றிய கவலையே சிறிதும் வேண்டாம். தஞ்சையில்மகிழ்ச்சிகரமாகச் சில தினங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு திரும்புங்கள்; திரும்பியவுடன் திருமணம் எப்போது என்பதை மட்டிலும்என்னிடம் கூறுங்கள்'' என்று விடை கொடுத்து அனுப்பினார்.

தோழராகவும், ஆலோசகராகவும் நம்பிக்கை மிகுந்த ஊழியராகவும் விளங்கிய அவருடைய அன்பு அவனுக்கு எப்போதுமே பெருந் துணையாக இருந்தது. அரசியல் கடமைகளில் மட்டும் அவர் அவனுக்குத் துணை நிற்கவில்லை. அவனுடைய தனிப்பட்ட வாழ்விலும் அவர் பெரும் பங்கு கொண்டிருந்தார். அவர் இன்றி அவன் இல்லை என்றே கூறலாம்.



வெற்றித் திருநகர்

அகிலன்

ராமராயர், சாளுவர் ஆகிய இருவர் அனுப்பிய ஓலைகள் பற்றியும் அவன் முதலியாரோடு கலந்து ஆலோசித்தான். அவர் அவ்வளவாக அவற்றைப் பொருட்படுத்தவில்லை. ''லட்சுமி தேவியாரின் பேரன்பு உங்களுக்கு இருக்கிறது; அவருடைய துணை ஒன்றே போதும் சாளுவ நரசிம்மரை வழிக்குக் கொண்டு வருவதற்கு!'' என்று அவனுக்கு உற்சாகமூட்டினார்.

''உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்!'' என்று லட்சுமி ஓலை அனுப்பி வைத்தாளல்லவா? 'நானும் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன், லட்சுமி!' என்று தனக்குள் கூறிக் கொண்டான் விசுவநாதன்.

தஞ்சைப் பெரிய கோயிலின் கோபுரம் அதன் எல்லைக்குள் செல்வதற்கு முன்பே விசுவநாதனுக்கு வரவேற்பு அளித்தது. நகர வாயிலுக்குத் தம்முடைய வீரர்களோடு வந்திருந்து விசுவநாதனை அன்போடு வரவேற்றார் சாளுவ நரசிம்மர். அவனுடைய ரதத்தில் அவனுக்கருகில் அமர்ந்து கொண்டு அவனைத் தமது மாளிகைக்கு அழைத்துச் சென்றார்.

மாளிகை வாயிலில் அவனுக்காக வழி மேல் விழி வைத்துக் காத்திருந்த லட்சுமிக்கு அவனைக் கண்டவுடன் இந்த உலகமே மறந்து விட்டது. கண்களை இமைக்காமல், வாயைத் திறக்காமல், நெடுநேரம் அவனையே உற்றுப் பார்த்தாள். பல யுகங்களாக அவனைப் பிரிந்திருந்த ஏக்கம் அவள் கண்களில் தெரிந்தது. விசுவநாதன் தனக்குள் புன்முறுவல் பூத்துக் கொண்டான்.

தஞ்சை மாளிகையில் சாளுவநரசிம்மர் அவனுக்கு ஏற்பாடு செய்திருந்த உப



சாரங்கள் விசுவநாதனுக்கு வியப்பை அளித்தன. அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவன் தடுமாறுவதைக் கண்ட சாளுவர், "விசுவநாதா! இது விஜயநகரத்து இரவல் மாளிகையில்லை. நீ இப்போது என்னுடைய சொந்த நாட்டுக்கும் சொந்த வீட்டுக்கும் வந்திருக்கிறாய். உன்னை முறைப்படி வரவேற்க வேண்டியது என் கடமை. இங்கு எல்லாவற்றையும் நீ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!" என்று வற்புறுத்தினார்.

'லட்சுமியை மட்டும் நான் ஏற்றுக் கொண்டால் போதும்!' என்று நினைத்துக் கொண்டு, அவருடைய உபசார வெள்ளத்தில் நீந்துவதற்கு உடன்பட்டான் விசுவநாதன்.

உணவை முடித்துக் கொண்டு ஓய்வாக அவனுடன் பேசுவதற்கு அமர்ந்தார் சாளுவர். லட்சுமியையும் வற்புறுத்தி அருகே அழைத்துக் கொண்டார்.

"ஓயாது ஒழியாது கடமைகளில் மூழ்கியிருந்த எனக்கு அமைதியாக வாழ்வதற்கே விஜயநகரத்தில் பொழுது கிடைக்கவில்லை. சோழ நாட்டுக்கு வந்தவுடன் சில தினங்களாவது ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். சோழர்கள் காலத்து நாட்டைப் போல் இது இப்போது இல்லாவிட்டாலும், இன்னும் இங்கே ஆடல்களுக்கும், பாடல்களுக்கும் கலைகளுக்கும் குறையில்லை. அவற்றில் என்னை மறந்திருக்க வேண்டுமென்று தோன்றியது; உன்னையும் அழைத்திருக்கிறேன். எனக்கும் வேறு துணை கிடையாதல்லவா?"

வியப்படைந்தான் விசுவநாதன். அரசியல் விஷயங்களை அடியோடு மறந்துவிட்டவர்போல் அவர் நடந்து கொண்டது அவனுக்குப் புதிராக இருந்தது.

"இரண்டு மூன்று தினங்கள் தங்கிச் செல்வது போல் வந்திருக்கிறேன்" என்றான் விசுவநாதன்.

"ஓ! அவ்வளவு அவசரமா?" என்று கேட்டு விட்டுச் சிரித்தார் சாளுவர். "பாண்டிய நாட்டுக்கு வந்ததும் வராததுமாக நீ முழுமூச்சோடு வேலைகளில் மூழ்கிவிட்டாய் என்பதை அறிந்தேன். விஜயநகரத்து ஆட்சி முறைகளை அப்படியே இங்கும் நிலைநாட்டி விடுவாய் என்று தெரிகிறது. உன்னுடைய ஆற்றலிலும் வீரத்திலும் எப்போதுமே எனக்கு நம்பிக்கை உண்டு. சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயருக்கு அடுத்தாற்போல், விஜயநகர சாம்ராஜ்யத்தை உன்னிடம் விட்டிருந்தால் அதை இன்னும் சிறப்பாகக் கட்டிக் காத்திருப்பாய். அவருக்கு ஒப்பானவன் நீ என்பது என் எண்ணம்."

"ஆமாம், அப்பா! இவர் சிறிய கிருஷ்ண தேவராயரேதான்!" என்று பூரிப்போடு கூறினாள் லட்சுமி.

"அபசாரம்! அபசாரம்!" என்று பதறினான் விசுவநாதன்; "அவர்கள் மேருமலைக் கொப்பானவர்கள்; அவர்களுக்கு அருகில் இருந்ததால் மட்டும் நான் அவர்களைப் போல் ஆகிவிட முடியாது."

"விசுவநாதா! நீ உன்னுடைய ஆற்றலையே இன்னும் சரியாக அறிந்து கொள்ளவில்லை. கிருஷ்ணதேவராயருக்கு வாய்ப்புகளும் வசதிகளும் பிறவியிலேயே கிடைத்து விட்டன. அவைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர் உயர்ந்து விட்டார். ஆகவே, ஆற்றலைப் பொறுத்தமட்டிலும் நீயும் ஒன்றும் குறைந்தவனல்ல. வசதிகளையும் வாய்ப்புக்களையும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான்!"

விசுவநாதன் தலை குனிந்தான். சாளுவ நரசிம்மர் அவனுடைய ஆற்றலைப் பற்றி அவ்வளவு தூரம் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை அவன் அன்றுதான் அறிந்து கொண்டான்.

லட்சுமி இப்போது குறுக்கிட்டாள்:

"இதோ பாருங்கள்! உங்கள் தந்தையாராவது அரச குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் அப்பாவோ தொண்டை நாட்டில் காஞ்சி நகரை அடுத்த கிராமத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள். தமிழராகப் பிறந்தும் விஜயநகர சாம்ராஜ்யத்துக்கே அமைச்சராக இருந்ததுமல்லாமல், சோழ நாட்டுக்கு அதிபதியாகவும் விளங்குகிறார்கள். அப்பாவே இந்த நிலைக்கு வர முடிந்ததென்றால், உங்களுக்குள்ள வாய்ப்புக்கும் ஆற்றலுக்கும் நீங்கள் கிருஷ்ண தேவராயரைப் போலவே உயர்ந்துவிட முடியும்!"

"ஓ! லட்சுமிக்கே இந்த அளவுக்கு அரசியல் ஞானம் வளர்ந்து விட்டதென்றால், இனி நான் அரசியலில் இருந்து தாராளமாக ஓய்வெடுத்துக் கொள்ளலாம்" என்று கூறிச் சிரித்தார் சாளுவர்; "ஆனாலும் லட்சுமி பெண் பிள்ளையாக இருப்பதால் எனக்குப் பிறகு இந்த நாட்டை அவளுக்குக் கொடுக்க மாட்டார்கள்; அந்த நிலைக்கு வந்துவிடக் கூடாதென்றுதான் நானும் யோசிக்கிறேன்."

இவ்வாறு கூறிவிட்டுச் சாளுவர் விசுவநாதனை ஏறிட்டு நோக்கினார். லட்சுமியும் ஆவலோடு அவனுடைய முகத்தை உற்று நோக்கினாள்.

"அந்த நிலைக்கு வந்து விடாது என்றுதான் நானும் நினைக்கிறேன்" என்றான் விசுவநாதன்.

அவனுடைய பேச்சு அவருக்குச் சிறிது நம்பிக்கையளிப்பது போல் தோன்றியது.

"வரும்படி நாம் விட்டுவிடக் கூடாது என்பதுதான் என் எண்ணம். விஜயநகரம் இப்போது இருக்கும் நிலையில் எதையும் நம்புவதற்கு இல்லை. என்னை அங்கிருந்து முதலில் வெளியேற்றி விட்டார்கள். இனி உன் அப்பாவையும் வெளியேற்றுவார்கள். பிறகு இருவரென்று பாண்டிய நாட்டுக்கும், சோழ நாட்டுக்கும் வேறு ராஜப் பிரதிநிதிகளை அனுப்பினாலும் அனுப்பக்கூடும். நாம் பாடுபட்டு நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்த பிறகு, நம்மிடமிருந்து நாட்டைப் பறித்து வேறு யாருக்கும் கொடுத்தாலும் கொடுப்பார்கள்."


Zam-Buk
ஜாம்-பக் சிறந்த மூலிகைக் களிம்பு
HERBAL BALM
Zam-Buk
WONDERFULLY SOOTHING AND HEALING FOR
SORE ACHING FEET
ஜாம்-பக், பாரதத்தின் உன்னதமான மூலிகைக் களிம்பு. விரைவாகவும், பத்திரமாயும் குணப்படுத்த உதவுகிறது.
FZ-11 Tam.
காயங்களுக்கு
தீப்புண்களுக்கு
முகப் பருக்களுக்கு


எக்காலத்திலும்
மகோன்னதமானது
அரவிந்த்
இப்பெயர் மிக நேர்த்தியான ஜவுளி ரகங்களின் சின்னம்
விதவிதமான ரகங்கள்
லாங்ப்: பாப்ளின்ஸ்
ஷர்ட்டிங்ஸ்: ஸ்ட்ரைப், டாபி, செக், பைஜாமா
தோத்திஸ்: மெர்ஸரைஸ்ட் லான்: 5531, ஸூட்டிங்ஸ்: காபர்டீன்
பிரிண்ட்ஸ்: ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்
செவ்வான கலர் புட்டாக்கள்
2 x 2 கவர்ச்சியான முழு வாயில்கள் - பிளெயினிலும், புட்டாக்களிலும்
SANFORIZED
Arvind Quality
டெரிலெஸ்ட்* மற்றும்
டெரிலெஸ்ட் டபுள்
டெஸ்டெட்
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்
*REGISTERED USERS

விசுவநாதன் ஏதுமே மறுமொழி கூறவில்லை. சாளுவ நரசிம்மரின் அச்சத்தை ஓரளவு அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனாலும் அவர் காரணமின்றியே அச்சம் கொண்டிருக்கிறார் என்று நினைத்தான்.

சட்டென்று அவர் லட்சுமியிடம் சைகை செய்துவிட்டு அவ்விடத்தை விட்டு எழுந்தார்.

''சரி, நான் சில ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியதிருக்கிறது; வருகிறேன். நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்.''

சாளுவநரசிம்மர் அவர்களைத் தனியே விட்டு விட்டுப் புறப்பட்டார். லட்சுமி ஏக்கத்தோடும் தவிப்போடும் அவனை நோக்கிப் பெருமூச்சு விட்டாள். அவளுடைய கண்கள் கலக்கமுற்றிருந்தன. அவள் மன வருத்தத்துக்குக் காரணம் விசுவநாதனுக்கு விளங்கவில்லை. அவனும் சிறிது கலங்கினான்.

''இனி..... இனி.... என்னால் ஒரு நாள் கூட உங்களைவிட்டுப் பிரிந்திருக்க முடியாது!'' என்று தேம்பினாள் லட்சுமி.

அத்தியாயம் பத்தொன்பது

தந்தையின் கைப்பாவை

விருந்தினனாக வந்திருந்த விசுவநாதனை மகிழ்விக்கச் சாளுவநரசிம்மர் அவருடைய மாளிகையிலேயே ஆடல்களையும் பாடல்களையும் ஏற்பாடு செய்திருந்தார். அவருடைய செயல்கள் யாவும் செயற்கைத் தன்மை கொண்டவையாக விசுவநாதனுக்குத் தோன்றினவே தவிர, அவற்றால் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை. லட்சுமியும் சோர்வோடுதான் காணப்பட்டாள். லட்சுமியின் முகத்தில் மலர்ச்சி குலுங்கியிருந்தாலாவது, அதற்காகவேனும் அவன் அந்தக் கலை நிகழ்ச்சிகளால் பரவசமடைந்திருப்பான்.

விசுவநாதனும் லட்சுமியும் தனித்திருந்த போதுதான் அவர்களால் ஓரளவு மன நிறைவோடு நடந்து கொள்ள முடிந்தது. மேல்மாடத்து நிலாமுற்றத்தில் விசுவநாதன் தனியே அமர்ந்திருந்த போது அங்கு லட்சுமி வந்து சேர்ந்தாள்.

''என்ன யோசனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் லட்சுமி.

''ஒன்றுமில்லை; ஏனோ உன்னுடைய போக்கில் திடீரென்று எனக்கு ஒரு மாறுதல் தென்படுகிறது. அது என்ன மாறுதல் என்றும் என்னால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. நீ ஏதோ கவலையிலும் பயத்திலும் ஆழ்ந்திருப்பாய் போல் தோன்றுகிறது. அதைப் பற்றித்தான் யோசனை செய்து கொண்டிருக்கிறேன்.''

''அப்படியொன்றுமில்லை'' என்று கூறி மழுப்பி விட்டு, ''நான் உங்களோடு ஒன்றாகப் புறப்படும் நாளை ஒவ்வொரு கணமும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; அந்தத் துயரம்தான் என்னை வாட்டிக் கொண்டிருக்கிறது'' என்றாள்.

என்றாலும் அவளுடைய கவலைக்கும் அச்சத்துக்கும் காரணங்கள் இருந்தன. சேர நாட்டு உதயமார்த்தாண்டன் அனுப்பி வைத்த முத்துமாலை கீழே விழுந்து சிதறிய போது, அவள் தந்தை கூறிய சொற்கள் அவளைக் கூரம்புகளாகத் துளைத்துக் கொண்டிருந்தன. விஜயநகரத்தை விட்டுப் புறப்பட்டு, விசுவநாதனுக்கு அருகில் தஞ்சைக்கு வந்த பிறகும், அவனை நேரில் சந்தித்த பின்னரும்கூட, அவளால் அவள் தந்தையின் சொற்களை மறக்க முடியவில்லை.

''இந்த மாலைக்கு விலையாக உன்னையே கேட்கிறான் உதயமார்த்தாண்டன். நான் எதையும் இன்னும் முடிவு செய்யவில்லை.... என் எண்ணத்தை நிறைவேற்றுவதில் எவன் முனைந்து நிற்கிறானோ அவனே என்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாவான்.... அவன் விசுவநாதனாக இருந்தால் அதனால் உன்னை விட நான்தான் மகிழ்ச்சியடைவேன்!''

அன்றைக்கு அவள் தந்தை கூறிய இந்தச் சொற்கள் அவளுக்கு மனப்பாடமாகி விட்டன. அல்லும் பகலும் அவளை அரித்தெடுத்து வந்தன. ஆனால் அவற்றை விசுவநாதனிடம் வெளியிடும் துணிவு மட்டும் அவளுக்கு இன்னும் பிறக்கவில்லை.

''லட்சுமி! இனி நீ நம் திருமணத்தைப் பற்றிச் சிறிதும் கவலையுற வேண்டியதில்லை. நானே அப்பாவுக்கு விரைவில் ஓலை அனுப்புகிறேன். மதுரையிலோ தஞ்சையிலோ உன் அப்பா விரும்புவதுபோல் திருமணத்தை முடித்துக் கொண்டு, நீ என்னுடைய மதுரை மாளிகைக்கே வந்துவிடலாம்'' என்றான் விசுவநாதன்.

''அதற்கு முன்பாக நமக்கு ஒரே ஒரு சோதனை இருக்கிறது. நீங்கள் அதில் வெற்றி பெற வேண்டுமே என்ற கவலைதான் என்னை வாட்டிக் கொண்டிருக்கிறது'' என்றாள் லட்சுமி.

''சோதனையா!''—விசுவநாதன் இலேசாக நகைத்தான்.

லட்சுமி அவனுக்கு மிகவும் அருகில் நெருங்கி வந்தாள். சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு மெல்லிய குரலில் பேசலானாள்.

''முற்காலத்தில் தங்கள் பெண்களை மணம் செய்து கொடுப்பதற்காகப் பெண்களின் தந்தையார் ஆண்களின் வீரத்தைப் பரிசோதிப்பதற்காக எவ்வளவோ செய்திருக்கிறார்கள். ராமபிரான்கூட ஜனகர் விரும்பியவாறு சிவதனுசாகிய வில்லை வளைத்த பிறகுதான் சீதையை மணந்து கொள்ள முடிந்தது. இப்போது அப்பாவும் உங்களுக்கு அப்படியொரு சோதனை வைத்திருக்கிறார்கள். அது என்ன என்பதும் உங்களுக்கே தெரியும். நீங்கள் அவர்கள் விரும்புகிறபடி செய்தாலே என்னை மணம் செய்து

விசித்திரச் செய்திகள்!


பத்திரிகைகளில் பல விசித்திரமான செய்திகள் வருகின்றன அல்லவா? ஆங்கில, அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியான சில விசித்திரமான செய்திகள்:



புஷ்பக் கண்காட்சியின் ஒரு நபருக்கு மூன்றாவது பரிசு கிடைத்தது. அந்தப் பணத்தைத் திருப்பி அனுப்பிவிட்ட அவர், 'நீதிபதிகள் தோட்டக் கலை பற்றி அறிந்து கொள்ள ஒரு புத்தகம் வாங்கிப் படிக்க அந்தப் பணம் உதவும்' என்று கூறுகிறார்.

தன் வீட்டில் திருடன் புகுந்து பணத்தையும் பொருளையும் கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டதாக நேப்பிள்ஸ் நகரில் ஒரு பெண்மணி பொய் வழக்குக் கொடுத்ததாகப் போலீஸார் அவள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். விசாரணையில், ''என் கணவர் இந்தச் செய்தியைப் பார்த்து விட்டாவது வீட்டுக்கு இரவு நேரத்தில் சீக்கிரம் திரும்பி வருவார் என்று எதிர்பார்த்தேன்'' என்றாள் அவள்.

ஆலிஸ் மாக்லின் என்ற ஒரு பெண் ஒரு மோட்டார் விபத்தில் சிக்கிக் கொண்டாள். அது நடந்து



முப்பது வருடங்கள் ஆனபின் அந்த மோட்டார் ஓட்டியின் மீது அவள் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடர்ந்திருக்கிறாள். இதற்கு அந்தப் பெண்மணி என்ன காரணம் சொல்லுகிறாள் தெரியுமா? ''விபத்து நடந்தபோது மோட்டார் ஓட்டி ஏழை. இப்போது பணக்காரர். நஷ்ட ஈட்டை வைத்துக் கொண்டு நிம்மதியாக நான் பிழைக்கலாமல்லவா?''

ஆதாரம்: 'பேஜண்ட்' தகவல்: ரா. வேங்கடசாமி

கொடுப்பது என்ற பிடிவாதத்தில் இருக்கிறார்கள். நீங்கள் அதற்கு உடன்பட வேண்டுமே என்று நான் தினமும் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.''

லட்சுமி இடையில் தட்டுத் தடுமாறிப் பேசி முடித்தாள்; அவளுடைய குரல் தழுதழுத்துத் தொண்டையை அடைத்தது. விசுவநாதனின் மனம் லட்சுமிக்காகப் பாகாய் உருகியது.

ஓரளவே அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. விஜயநகர சாம்ராஜ்யத்துக்குத் துரோகம் செய்யத் தூண்டுகிறார் சாளுவர் என்ற வரையில் அவன் புரிந்து கொண்டிருந்தான். ஆனால் முழு விவரமும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற துடிப்பு அப்போது அவனுக்கு ஏற்பட்டது.

''நான் என்ன செய்ய வேண்டும் என்று அவர் நினைக்கிறார்?''

''நீங்கள் மனம் வைத்தால் சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்குச் சக்கரவர்த்தியாக ஆக முடியுமாம். அப்பாவும் சோழ நாட்டில் விஜயநகரத்தின் மேலாட்சியை உதறித் தள்ளுவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறார். சேரநாட்டு உதயமார்த்தாண்டனும் அப்பாவின் எண்ணப்படி நடக்கக் கூடியவர். நீங்கள் விரும்பினால் அவர்கள் இருவருமே உங்களுக்கு உதவி செய்வதற்கும், உங்கள் மேலாட்சியை ஏற்றுக் கொள்வதற்கும் சித்தமாக இருக்கிறார்களாம்'' என்றாள் லட்சுமி.

விசுவநாதனுக்கு வாயடைத்துப் போய் விட்டது. நீண்ட நேரம் அவன் கல்லாகச் சமைந்திருந்து விட்டான். லட்சுமியைத் தவிர வேறு யாருமே அவனிடம் அந்தச் சொற்களைக் கூறியிருக்க முடியாது. லட்சுமியின் மீதே அவனுக்கு ஆத்திரம் பொங்கி வந்ததென்றாலும், அவள் சாளுவரின் கைப்பாவையாக இயங்குகிறாள் என்பதற்காகப் பொறுத்துக் கொண்டான்.

''ஒன்றும் பேசாதிருக்கிறீர்களே?'' என்றாள் லட்சுமி.

விசுவநாதனின் இதயத்தை யாரோ இறுகப் பற்றிக் கசக்கிப் பிழிவதுபோலிருந்தது. லட்சுமியை இழந்துவிடக் கூடும் என்ற நினைவையே அவனால் தாங்க முடியவில்லை.

நீண்ட பெருமூச்சு விட்டவாறே, ''நான் விரும்பினால் கட்டாயம் தெற்கில் தனியே ஒரு சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்த முடியும்; ஆனால் விஜயநகரத்தின் அழிவின் மேல்தான் அதை உருவாக்க வேண்டும்; எந்தச் சாம்ராஜ்யம் தமிழ்நாட்டை அதன் அழிவிலிருந்து தடுத்துக் காத்ததோ, அதை அழித்து விட்டுத்தான் இங்கே புதியதாக ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும்; அதை என் உடலில் உயிருள்ள வரையில் செய்ய மாட்டேன்!'' என்றான் உறுதிமிக்க குரலில்.

''பிறகு நம் வாழ்வு?''

விசுவநாதன் லட்சுமிக்கு விடை அளிக்க முடியாமல் ஒருகணம் தடுமாறினான். அவனால் அவளைப் பிரிந்து உயிர் வாழவே முடியாதுபோல் தோன்றியது. லட்சுமி இல்லாத உலகம் அவனைப் பொறுத்த வரையில் இருள் நிறைந்த உலகம்தான்.

பனிச்சென்று அவனுக்கொரு யோசனை தோன்றியது.

''லட்சுமி! அரசியல் என்பது எனக்கும் உன் அப்பாவுக்கும் இடையில் உள்ள ஒரு விஷயம். இதுபற்றி நாங்கள் இருவரும் தனியே முடிவு செய்து கொள்ளுகிறோம். நம்முடைய வாழ்வுக்கு அது ஒரு தடையாக இருக்க வேண்டாம்'' என்றான் விசுவநாதன்.

''நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?''

''எப்படியும் நாம் மணந்து கொள்வோம். உன் அப்பா இசைந்தாலும் இசையா விட்டாலும் நாம் மணந்து கொள்வோம். அதற்கு நீதான் உதவி செய்ய வேண்டும்.''

நடுங்கினாள் லட்சுமி. ''என் அப்பாவுக்கு நான் துரோகம் செய்ய வேண்டுமா?''

''இது துரோகமல்ல, லட்சுமி! அவர் செய்வதுதான் துரோகம்!'' என்று தன்னை மறந்து கூவினான் விசுவநாதன்.

அது வரை மாடத்துத் தூணின் பின்னே மறைந்திருந்த சாளுவநரசிம்மர், மெல்ல அங்கிருந்து நழுவிக் கீழே சென்றார். (தொடரும்)


எல்லா
வேலையும்
என்
தலையிலே!
எல்லா வேலையும் நானே செய்ய
வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்...
எனக்கோ ஒரே சோர்வு. குழந்தைகள்,
சமையல், வீட்டுவேலை
எல்லாவற்றையும் எப்படி
நானே சமாளிக்க முடியும்...
என் கணவர் ஒரு நாள்
ஹார்லிக்ஸ் வாங்கி
வந்தார். ஹார்லிக்ஸ்
பருகினால் இழந்த
சக்தியை மீண்டும்
பெறலாம் என்றார்!
Horlicks
இப்பொழுது
என்னைப்
பாருங்கள்!
திட
ஆரோக்கியத்
துடன் தெம்புச்
சுறுசுறுப்புடன்
இருக்கிறேன்.
எல்லாம் ஹார்லிக்ஸ்
செய்த நன்மை!
Horlicks
போஷாக்குக் குறைவிலும்
ஏற்படும் சோர்வும்
தளர்ச்சியும் நீங்க
ஹார்லிக்ஸ் பருகும்படி
டாக்டர்கள் சிபாரிசு
செய்கிறார்கள். ஆடைச்
சத்து நீக்கிய பால்,
கோதுமை மாவு,
மால்ட்டட் பார்லி இவற்றின்
போஷாக்குச் சத்துக்களை
ஒருங்கே கொண்ட
ஹார்லிக்ஸ் இழந்த
சக்தியை மீண்டும் பெற
உதவுகிறது என்பது
டாக்டர்களுக்குத்
தெரியும்.
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி
அளிக்கிறது!



காலம் மாறிப் போச்சு! சுயம்

[எழுத்தாளர் (கடோத்கசன்) திருவாளர் மோகனசுந்தரனார் அவர்களது மணிவிழாவை முன்னிட்டு முப்பது வருடங்களுக்கு முன்பு வெளியான அவரது முதல் நவீனத்துக்குக் காலத்தை ஒட்டிய சில திருத்தங்களுடன் புதிய பதிப்பு வெளியிடப்படுகிறது. பழைய பதிப்பில் ஒரு 'பாரா'வும், புதிய மெருகில் ஒரு 'பாரா'வுமாக மாறி மாறிப் படித்து ரசிக்கவும்.]

பழைய கதை

டங் டங்கென்று மணியோசை புரிந்து நின்ற டிராமிலிருந்து கலா இறங்கினாள். அவளது கையில் டம்பப் பை பளிச்சிட்டது. பஸ் ஸ்டாப் காலியாகக் கிடந்தது. போதுமான பிரயாணிகள் இன்றிப் பஸ்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. 'நம்ம ரிக்ஷாவில் குந்தம்மா' என்ற குரலையும் லட்சியம் செய்யாது நடையைக் கட்டினாள். திருப்பத்தில் சைக்கிள் ஒன்று அவளை முட்டிக் கொண்டு சென்று எதிர்ச் சுவரில் மோதிக் கொண்டது.

'எக்ஸ்யூஸ் மீ' என்று சொல்லியவாறு வாலிபன் ஒருவன் சைக்கிளை நிமிர்த்தித் தனது ஜிப்பாவைத் தட்டி விட்டுக் கொண்டான். கிழிந்து போன தனது ஆரணிப் புடவையை அவன் அமாதகுறையாக நோக்கினான். அவளும் நோக்கினாள். ஆனால் அவனது 'ஸாரி' என்ற சொல்லே அதற்கு ஒட்டுப் போட்டு விட்டது போலிருந்தது.

அதற்குப் பிறகு இருபது கஜம் செல்வதற்குள் அவர்கள் ஒட்டிப் பழக ஆரம்பித்து விட்டனர். அவன் மாகாணத்திலேயே முதலாவதாக பி. ஏ. தேறிவிட்டு வேலையின்றித் திண்டாடிக் கொண்டிருப்பவனும்.

அவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். ராவ்பகதூர் ராமசாமியின் பெண்; சங்கீதப் பள்ளிக்குச் செல்லும் வழியில் தான் இந்த விபத்து ஏற்

புதிய கதை

டிராம் ஓடின செய்தியைப் பழங் கதையாய் ஆக்கிக் கொண்டு தார் வீதி பரந்து கிடந்தது. சர்க்கார் பஸ்ஸுக்குக் 'கியூ'வில் காத்திருந்த அணிமொழிக்கு அலுத்துவிட்டது. அவளது கரத்தை அலங்கரித்த டிரான்ஸிஸ்டர் சங்கீதமும் சலித்து விட்டது. போலீஸாருக்கும் டாக்ஸி டிரைவர் ஒருவருக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக நகரத்திலுள்ள அத்தனை டாக்ஸிகளும் மின்னல் வேலை நிறுத்தம் செய்து விட்டன. ரப்பர் பாத அணி தேய்ந்தாலும் பரவாயில்லை என நடக்க ஆரம்பித்தவளை 'ஸ்கூட்டர்' ஒன்று இடித்துக் கொண்டு சென்று நின்றது.

'மன்னிக்கவும்' என்று 'டெரிலின்' சட்டையைச் சரி செய்து கொண்டு நின்ற சுவிங்கொலாஸ் வாலிபன் விநயமாக வேண்டி நின்றான். தேர்தல் வோட்டுப் பிடிக்கும் ஒரு வேட்பாளரின் குழைவு அவனது உடலில் பிரதிபலித்தது. தலைப்புக் கிழிந்துவிட்ட தனது நைலான் 'ஸாரி'யைச் சரி செய்துகொண்டாள் அணிமொழி.

''எனது ஸ்கூட்டருக்குப் பின்புறம் அமர்ந்து கொண்டால் எங்கு போக வேண்டுமோ....'' அவனது தேமொழி அணிமொழிக்குக் 'கோகோகோலா' போல் இனித்தது. அவள் ஒட்டி உட்கார்ந்தவுடன், அவன் ஓட்டத் தொடங்கினான். ஒரு கிலோமீட்டர் தூரம் போவதற்குள் அவர்கள் நெருக்கம் அதிகமாயிற்று.





பட்டு விட்டது. அவளது வட்டக் கொண்டைக்கு விளிம்பிட்ட கனகாம்பரப் பூ அழகுக்கு அழகு செய்தது.

பிரியும் இடம் வந்தது. 'வருகிறேன்' என்று வீணைக் குரலில் விடைபெற்றுக் கொண்டாள். இரும்புபோல் அவன் நெஞ்சு கனத்தது. தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை போல் அவன் பலமாகத் தலையசைத்தான்.

அவள் முகம் குங்குமம்போல் சிவந்தது. தனது தங்கச் செயினை விரல்களால் நெருடியபடி பிரிந்தாள்.

ஃ ஃ ஃ

சீலோவின் தகப்பனார் அருமையாக வாங்கித் தந்த கிராமபோன் பெட்டியிலிருந்து வந்த சங்கீதம் அவனுக்கு ரசிக்கவில்லை. கையிலிருந்த துப்பறியும் நாவலும் சுவைபடவில்லை. தினசரிப் பத்திரிகைகளில் காணப்பட்ட அரசியல் செய்திகளோ, மூலையில் இருந்த 'மந்திரி குமாரன்' சினிமா விளம்பரமோ அவளது கவனத்தைக் கவரவில்லை. அவளது அகத்திலே புகைப்படம் போல் அவ்வாலிபன் முகம் பதிந்து விட்டது.

''குழந்தாய், இன்று மாசிலாமணிக்கு ராவ்பகதூர் பட்டம் கிடைத்ததற்கு அவர் செலவில் தேநீர் விருந்து நடைபெறுகிறது. போய் வரலாம். வருகிறாயா?'' என்று தகப்பனார் அழைத்தார். அவள் மனம் ஆனந்த நடனமிட்டது.

ஜில்லா கலெக்டர் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் பல ராவ்பகதூர்களும், ராவ் சாகிப்களும் பேசினர். மாசிலாமணிக்கு மாலையிட்டுக் கௌரவித்தனர். உள்ளூர்ப் புகைப்பட நிபுணர் இந்தக் காட்சிகளையெல்லாம் காமிராவில் அடைத்துக் கொண்டிருந்தார்.

''அது யார்? தூரத்தே தெரிபவர், அந்த வாலிபனு?'' மறுகணம் விடுபட்ட அம்பு போல் அவன் அருகில் சென்றான்.

'இந்தியாவின் அடிமைத்தனமும் பட்ட மோகமும் என்றுதான் போகுமோ?' என்றான் அந்தப் பட்டதாரி. அவனது பேச்சு நாயண இசை போல இருந்தது அவளுக்கு.

நியாய விலைக் கடை அருகே வந்தவுடன் பிரியும் கட்டம் வந்தது. 'வணக்கம்' என மழலைப் பாணியில் நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டாள். விலைவாசி போல அவளது மூக்கு நீண்டு வளர்ந்தது. அவள் பிளாஸ்டிக்பொம்மைபோல் தலையசைத்தாள். போக்குவரத்து எச்சரிக்கை விளக்கின் சிவப்பில் அவள் முகம் சிவந்து கிடந்தது. தனது பதினறு காரட் தங்கச் செயினை விரல்களால் நெருடியபடி பிரிந்தாள்.

ஃ ஃ ஃ

சீலோகன் போட்டி ஒன்றில் பரிசாகக் கிடைத்த ரேடியோவிலிருந்து இலங்கை வானொலி இசையையும் விளம்பரத்தையும் வருவித்துக்கொண்டிருந்தது. அவள் கையில் 'மலிவுப் பதிப்பு' ஒன்று இருந்ததே ஒழிய மனம் அதில் பதியவில்லை. தினசரிப் பத்திரிகையில் இருந்த கணவன் – மனைவி கத்திக்குத்து விவகாரங்களோ, ஆகாய–ரயில் விபத்துச் செய்திகளோ, மந்திரியின் பிரசங்கமோ அவளைக் கவரவில்லை. முழுப் பக்கத்தையும் வியாபித்து இருந்த 'நிலாவுக்கு நிறைந்த வயிறு' என்ற சினிமாவின் விளம்பரமோ அவள் மனத்தைத் தொடவில்லை. டெலிவிஷன் காட்சி போல் அவ்வாலிபனது முகம் அவளது அகத் திரையில் படர்ந்தது.

''அணிமொழி: இன்று நடிகர் குண்டப்பாவுக்குப் பாராட்டு விழா; அவரது 'சிவந்ததிமிங்கிலம்' என்ற படத்துக்குச் சர்க்காரது பாராட்டுப்பத்திரம் கிடைத்திருக்கிறதல்லவா, அதற்காக. வருகிறாயா?'' தந்தையின் அழைப்புக் குரல் கேட்டு அவளது மனம் ஒரு 'ராக்–அண்–ரோல்' நடனமிட்டு ஓய்ந்தது.

மந்திரி தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில் பல கட்சிப் பிரமுகர்களும் பேசினார்கள்.

''அதோ, இரண்டாம் வரிசையில் இருப்பது அன்று சந்தித்த வாலிபனு?'' மறுகணம் ஜெட் விமானம் போல் அவனிடம் பறந்தாள்.

''சுதந்திரம் ' பெற்றாலும் என்ன? பட்டமும் விருதுகளும் மறையவில்லை...'' என்று ஏங்கினன், அந்தவாலிபன். அவனது பேச்சு சாஸ்திரிய சங்கீதம் போல அவளது காதுகளில் ஒலித்தது.

''எனக்கு வெளிநாட்டுப் பயிற்சி பெற 'ஜெக்'கிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. விசா கிடைத்தவுடன்



பழைய கதை

"எனக்கு வேலை கிடைத்து விட்டது. இரண்டு நாட்களில் வட இந்தியாவுக்கு ரயிலில் புறப்படுகிறேன்."

யாரோ கற்சட்டியை அவள் தலையில் தூக்கி போடுவது போல இருந்தது.

✤ ✤ ✤

அன்று ஞாயிற்றுக்கிழமை. தபால்காரன் கலாவுக்கு ஒரு கடிதம் கொடுத்து விட்டுச் சென்றான். ஆவலாகப் பிரித்தவள் அசந்து போய் விட்டாள்.

அடுத்த வீட்டுக் கல்லூரி மாணவன் அவளுக்கு எழுதிய காதல் கடிதம். ஒரு மணங்கு பாரத்தை அவள் நெஞ்சில் ஏற்றியது போலிருந்தது.

உடனே பக்கத்துத் தெருவில் இருந்த கல்லூரித் தலைவரை அணுகினாள்.

பிரின்ஸிபால் பட்டாபி என்றால் மாணவர் உலகம் நடுங்கும். அவ்வளவு கண்டிப்பான பேர்வழி. அவர் காதில் செய்தி விழுந்ததும் கர்ஜித்தார். "காதல் கடிதமா எழுதுகிறான்! தொலைத்து விடுகிறேன் பார்!" அவரது கண்கள் அக்கினிப் பிழம்பாயின.

✤ ✤ ✤

ஊரில் பெட்ரோமாக்ஸ் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கலாவின் தம்பி 'ரூ. அ. பை.' கூட்டல் கணக்குப் போட்டுக் கொண் டிருந்தான். 'கோ சம்ரக்ஷணை' வாரத்தில் கலந்து கொண்டு திரும்பிய ராவ்பகதூர் நண்பர் நமச்சிவாயத்துடன் வந்து கொண் டிருந்தார். "வாருங்கள், நமச்சிவாயம்! உட்காருங்கள்! வருகிற தை மாசம் நம்ம கலாவுக்குக் கல்யாணம்முடித்து விட வேண்டியதுதான். நல்ல மாப்பிள்ளையாகச் சொல்லுங்களேன்" என்றார் ராவ்பகதூர்.

"ஏன் நம்ம சங்கரு. சப் இன்ஸ்பெக்டர் வேலை பார்க்கிறான். அதிகாரம் உள்ள இலாகா. வேலையும் உயரும்."

"ரொம்ப சந்தோஷம். நீங்கள் பேசிக் கொடுத்துப் பாருங்களேன். நாளு நாள் கல்யாணம் 'ஜாம் ஜாம்'னு செய்திடுவோம்" என்றார் மகிழ்ச்சியோடு.

இதைக் கேட்ட நமச்சிவாயம் வெற்றி நடை போட்டுக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்.

கலாவுக்கு இந்தக் கல்யாணப் பேச்சே வெறுப்பை அளித்தது. தலை 'சர்க்கா' போல் சுழன்றது.

எங்கேயாவது கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளலாமா என எண்ணினாள். அடுத்த ஜன்மத்திலாவது காதலனுடன் வாழும் வாய்ப்புக் கிடைக்காதா?

✤ ✤ ✤

ராவ்பகதூர் தம் பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தார். அமைதி நிரம்பிய அனுதை ஆசிரமத்தில் அவள் நூல் நூற்றுக் கொண் டிருந்தாள்.

புதிய கதை

விமானத்தில் புறப்படுகிறேன்." அணுகுண்டு அவள் தலையில் விழுந்ததுபோல இருந்தது!

✤ ✤ ✤

அன்று ஞாயிறு தபால் கிடையாது என்று அணிமொழி நம்பியிருக்க ஓர் எக்ஸ்பிரஸ் கடிதத்தைச் சைக்கிளில் தபால்காரன் சேர்ப்பித்தான். ஆவலாகப் பிரித்தாள்.

அடுத்த வீட்டுக் கல்லூரி மாணவன் அவளுக்கு எழுதிய காதல் கடிதம். ஒரு கிலோ கிராம் கனத்தை இருதயத்தில் ஏற்றி வைத்தாற்போன்று இருந்தது. விடுவிடுவென்று கல்லூரி முதல்வரை அணுகினாள்.

பிரின்ஸிபால் பட்டாபிக்கு மாணவர் உலகம் என்றாலே நடுக்கம். அதிலும் பொதுப் பரீட்சையில் காப்பி அடித்ததற்காக இரு மாணவர்களை வெளியேற்றியதற்காக நடந்த ஆர்ப்பாட்டம் ஆரவாரத்துக்குப் பிறகு அவர் பிழைத்ததே புனர்ஜென்மம்!

"காதல் கடிதம்தானேம்மா எழுதினான்? கிழித்து எறிந்து விடு. நான் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் 'காதல் புரிவது எங்கள் ஜீவாதார உரிமை' என்று சத்தியாக்கிரகம் செய்வார்கள். எதற்கு வீண் விவகாரம்!"

✤ ✤ ✤

பாதரஸக் குழல் விளக்கு ஒளி பரப்பிக் கொண்டிருந்தது. அணிமொழியின் தம்பி வடிவேல் நயாபைசாக் கூட்டல் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். 'குடும்பக் கட்டுப்பாடு' கூட்டம் ஒன்றில் பேசிவிட்டுத் திரும்பிய நமசிவாயத்தை ராமசாமி எம். எல். ஏ. வரவேற்றார்.

"அணிமொழிக்குத் திருமணம் நடத்த வேணும். நல்ல பிள்ளையாகப் பாருங்களேன்."

"ஏன், நம்ம சங்கர் இருக்கிறானே, டிபுடி சூப்ரண்டு ஆப் போலீஸ். பார்க்கலாமா?"

"வேண்டாங்க. ஜனநாயகம் பெருகிக் கிடக்கிற காலம். காவல் நிலையம் படுகிற பாட்டிலே போலீஸ் உத்தியோகம் வேண்டாம். சர்க்கார் சேவகமே வேண்டாம். ஏதாவது தொழில் செய்துகிட்டு இருக்கிற பிள்ளையாகப் பாருங்க. பதிவுத் திருமணம் செய்து விடலாம். நாம் எம்.எல்.ஏ.வாக இருக்கும் போதே முடிச்சிட்டா, லைசென்ஸ், கோட்டா ஏதாவது வேணும்னாலும் வாங்கித் தந்திடலாம்."

நமச்சிவாயம் புறப்பட்டுச் சென்றார்.

அணிமொழிக்கு மின்சார விசிறி போல் தலை சுழன்றது.

மூட்டைப்பூச்சி மருந்தைக் குடித்தாவது உயிரை மாய்த்துக் கொள்ள நினைத்தாள்.

✤ ✤ ✤

உள்நாட்டில் ராஜ்யங்களுக்கிடையில் ஏற்பட்ட பல எல்லைப்புறப் போராட்டங்கள் ஒன்றில் பங்கு கொண்ட ஸ்திரீ சத்யாக்கிரகிகளுக்கு அணிமொழி தலைமை வகித்தாள். நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் அடிபட்டு வீழ்ந்தவர்களில் அவளும் ஒருத்தி.

ஆடவர்களை விட ஸ்திரீகள்
வலியால் அதிகம்
அவதிப்படுகிறார்களா?
இருக்கலாம். ஆனால்
ஒன்றுமட்டும்நிச்சயம்
அறிவோம்:
வலியிலிருந்து விடுதலைபெற
லட்சக்கணக்கான ஸ்திரீகள்
அனஸின்
சாப்பிடுகிறார்கள்.
ஸ்திரீகள் மட்டுமல்ல;
ஆடவரும்கூட!


அறிகுறிகள்: தலைவலி, ஜலதோஷம் மற்றும் புளு, பல் வலி,
உடல் வலி, தசை வலி.
மருந்தளவு: வயது வந்தவர்களுக்கு 2 வில்லைகள். குழந்தைகளுக்கு 1 வில்லை.



அனஸின்
சிறந்தது
ஏனெனில் அது
4 வழிகளில் வேலை செய்கிறது



GEOFFREY MANNERS & COMPANY LIMITED



❊ நம்பிக்கையில்லாத் தீர்மானம்

❊ வெள்ளி விழா மலர்

❊ இருட்டடிப்பு ஏன் ?

இந்த மாதம் முதல் வாரத்தில் சென்னைச் சட்ட சபையில் அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை எதிர்க் கட்சித் தலைவர் திரு இரா. நெடுஞ்செழியன் கொண்டு வந்தார். எல்லா எதிர்க் கட்சியினரும் ஒரு மனத்துடன் அதை ஆதரித்தனர்.

அத் தீர்மானத்தை ஆமோதித்து நான் பேசிய பொழுது, அடியிற் கண்ட குற்றச் சாட்டுகளை அமைச்சரவையின் மீது சுமத்தினேன். அவையாவன:

1. வரி ஏய்ப்புக் கணிசமாக வளர்ந்து வருகிறது. அதற்கு முக்கியமான காரணம் வரிப் பளு தாங்க முடியாத அளவுக்குப் போய் விட்டதுதான்.

2. இங்ஙனம் வரிச் சுமை மிகுவதற்கு அடிப்படைக் காரணம், விவசாயம், தொழில், வாணிகம் முதலிய எல்லாத் துறைகளிலும் ஆட்சி தலையிட்டு முதலாளித்துவம் செய்வதால் ஏற்படுகிற மிகப் பெரிய நஷ்டமே.

3. வேண்டாத முறையில் எல்லாத் துறைகளையும் ஆட்சி மேற்கொண்டதால் ஏற்பட்டது பலன் பெருநஷ்டத்துடன் மட்டுமின்றி உத்தியோகஸ்தர்களின் தொகை 'தாறுக்கு மாறாக'ப் பெருகச் செய்து விட்டது.

4. விலைவாசி உயர்வதற்குத் தனிப் பெருங் காரணம் சர்க்கார் கொள்முதல் செய்த தானியங்களின் மீது 17 சதமானத்துக்கும் மேலாக லாபம் வைத்து வியாபாரிகளுக்கு விற்பதே.

5. மாநிலம், மாவட்டம், வட்டம் இவை கட்கு இடையில் செக் போஸ்டுகள் அமைத்துள்ளதால் லஞ்சம் வளரவும், ஒழுக்கம் தளரவும், விலை உயரவும்தான் செய்கின்றன.

6. கூட்டுறவுத் துறை அநேகமாகக் கொள்ளையடிக்கும் துறையாகவே மாறி விட்டது. அதற்கு அரசு கொடுக்கும் கடன் முதலியன ஏறிக் கொண்டே போகின்றன.

7. தங்கப் பத்திர வசூல் காலத்தில் 'பிளாக் மார்க்கெட்'டில் தங்கம் வாங்கும் இருப்பனியைப் பட்டப் பகலில், பகிரங்கமாக அதிகாரிகளே உடனிருந்து ஊக்குவித்தனர்.

8. அரசுக் குடை நிழலில் இருந்துகொண்டும், ஆட்சிக் கோலை ஏந்திக் கொண்டும், கட்சிப் பிரசாரமும், கட்சி நிதி வசூலும் செய்வது முறைகேடாகும்.

9. இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு காமராஜருடன் தமிழக அமைச்சர் திரு வெங்கடராமன் துணைவராகவோ, அன்றி ஆலோசகராகவோ சென்றது — அதுவும் சட்டசபைத் தொடர்க் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது இல்லாமல் சென்றது- நியாயத்துக்கும் ஜனநாயகத்துக்கும் கேடு பயப்பதாகும்.

10. விவசாயப் பம்பு செட்டுகட்கு மின் சாரம் கிடைப்பதைக் குறைத்து விட்டு ரயில் வண்டிகள் ஓட மின்சாரத்தைக் கொடுத்தது பெரும் குற்றம். நிலக்கரியின் உதவி கொண்டு ரயிலை ஓட்டலாம் என்பதைக் கூட உணர அரசு தவறிவிட்டது.

11. தமிழ்நாட்டு உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்த திரு ராமச்சந்திரய்யர் இழைத்த மன்னிக்க வொண்ணாத மாபெரும் குற்றத்துக்காக அவர்மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தவறியதன் மூலம் இந்த அமைச்சரவை மாநிலத்தின் நற்பெயருக்கு இழுக்குத் தேடித் தந்துள்ளது.

12. அரசாங்க இலச்சினை இடந்தோறும் மாறுபட்டிருப்பதைத் திருத்தம் செய்து ஒரே தோற்றம் உள்ளதாகச் செய்ய வேண்டுமென்று சென்ற நான்காண்டுகளாக எடுத்துரைத்து வந்தும் இதைக்கூடச் செய்ய மாட்டாத நிலையில் ஆட்சியாளர் இருக்கின்றனர்.

13. அருப்புக்கோட்டை, நெல்லை நகராட்சிகளைக் கலைத்ததும், தவறிழைத்த பல நகராட்சிகள் காங்கிரசின் ஆதிக்கத்தில் இருப்பதால் அவற்றின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமலிருப்பதும் அரசாங்கத்தின் நேர்மையின்மைக்கே எடுத்துக்காட்டு.

சென்னை
12–8–66 சா. கணேசன்

வெள்ளி விழா மலர் கண்டேன். அற்புதமாக இருந்தது. கடந்த பல ஆண்டுகளாகக் கல்கி பத்திரிகையுடன் தொடர்பு கொண்ட அத்தனை அறிஞர்களும் பங்கு கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சுவையான அனுபவங்களைப் படிக்கும்போது நாமும் அவர்களுடன் அந்த அனுபவத்தில் திளைக்கிறோம். கல்கி பத்திரிகை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சாதித்திருப்பதைப் பற்றிக் கூறுவதென்றால் அது அசாத்தியமாகும்.

ஈன்ற பொழுதில் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்

என்ற பொய்யா மொழியின் வாக்குப்படி, கல்கியின் வளர்ச்சி கண்டு தமிழ்த் தாய் பெருமிதம் அடைவதில் ஆச்சரியமில்லையே!

சென்னை
8–8–66 டி. எஸ். சங்கரன்

கல்கி வெள்ளிவிழா மலரும் விசேஷ இதழும் கண்டேன். ஒரு புதிய உலகினுள் போய் வந்த உணர்வு கொண்டேன். ஐந்து ரூபாய் என்ன, இருபத்தைந்து ரூபாய் கூடக் கொடுக்கலாம். அத்தனை மணமுள்ள மலர்! காஞ்சி காமகோடி ஆசாரியாளின் ஆசி, மலரின்

அழகுக்கு அழகு கூட்டுகிறது இலக்கியத்துக்கும் ஆஸ்திகத்துக்கும் பாலமாய் அமைந்துள்ள ஒரே தமிழ்ப் பத்திரிகையான கல்கி வாழ்க!

மணக்கால்
8-8-66 எம்.ஜே. ராமன், பி.எஸ்ஸி.

நமது கல்கிப்பத்திரிகை அரசியலும் தர்மமும் ஒன்றுதான் என்பதை உலகத்துக்கு உபதேசித்து வருகிறது. உலகத்தில் உள்ள பிரஜைகளை நல்லவர்களாகவும் தர்மத்தை உணர்கின்றவர்களாகவும் நமது கல்கிப் பத்திரிகை செய்து வருகிறது.

இருபத்தைந்து வயது பூர்த்தியாகும் நமது பத்திரிகை மேலும் மேலும் வருகிற ஆண்டுகளில் தேச க்ஷேமத்துக்குச் சேவை புரியும்படி ஸ்ரீ பகவானைப் பிரார்த்திக்கிறேன்.

கல்லிடைக்குறிச்சி
1-8-66 அனந்தராம தீக்ஷிதர்

கல்கி வெள்ளி விழா மலர் மிகமிக நன்றாக அமைந்துள்ளது. எடுத்த எடுப்பில் மலரைத் திறந்தவுடன் அபய ஹஸ்தத்தில் குருநாதருடைய ஆசி. குருநாதரின் படம் ஒவ்வொரு வீட்டிலும் பூஜையில் வைக்கத் தகுந்ததாக அமைந்திருக்கிறது. பேராசிரியர் கல்கி, டி.கே.சி., ராஜாஜி, சதாசிவம் தம்பதி படங்களை ஒவ்வொரு பக்கம் வெளியிட்டிருந்தால் கண்ணாடி போட்டு மாட்டிக்கொள்ள வசதியாயிருந்திருக்கும். கேலிச் சித்திரங்கள் வெகு ஜோர் (கல்யாணமே, வைபோகமே).

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியவர்கள் நம்மிடையே வாழுகிறார் என்ற எண்ணத்துடனேயே மலரைப் படித்தேன். ஆனால் "மணியம்" அவர்களின் "மறக்க முடியாத மூவர்" கடைசி வாக்கியத்தை ("பேராசிரியர் கல்கியை அழைத்துக் கொண்ட யமதர்மராஜன் ஓவியர் சந்திரா, வசந்தன், கி. ரா. கோபாலன் ஆகியோரையும் அழைத்துச் சென்று விட்டான். அமரருலகில் ஒரு பத்திரிகை தொடங்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கு இருக்குமோ, என்னவோ!") படித்தபோது கண்ணீர் விட்டுவிட்டேன்.

புதுக்கோட்டை ஸ்ரீராம சுதாரத்ன
6-8-66 வி. தியாகராஜன்

கல்கி வெள்ளி விழா மலர் எழுத்தோவியங்களுக்கு மட்டுமன்றி, எழுத்துலக மேதைகளுக்கும் சிறப்பளிக்கும் வகையில் மிகச் சிறப்பாக அமைந்திருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியது. கவிமணி, தமிழ்த் தாத்தா, மறைமலையடிகள், திரு.வி.க. ஆகியோருக்கு அமரர் கல்கி சூட்டிய புகழ்மாலைகள் என்றென்றும் நின்று நிலவக் கூடியவை. அம்மேதைகளின் இலக்கிய வாசகங்களுக்குத் தீட்டப்பெற்றுள்ள வண்ண ஓவியங்களும், எழுத்தின் பொருளாக விளங்கும் இறைவனும் ஓர் எழுத்தாளனாக எவ்வாறு இயங்கிறான் என்பதைச் சித்திரிக்கும் காட்சிகளும், தங்கள் கைவண்ணத்தால் கல்கியை மேன்மையுறச் செய்த தமிழ்ச் செல்வர்களாகிய டி.கே.சி., ரா. பி. சேதுப்பிள்ளை, பாஸ்கரத் தொண்டைமான் போன்றவர்களின் சொல்லோவியங்களின் மாதிரிகளை எடுத்தியம்பும் வண்ண ஓவியங்களும், பார்த்துப் பார்த்து மகிழத் தக்க வகையில் பரவசமூட்டுகின்றன.

எல்லா வகையிலும் பெருமைப்படத்தக்க வகையில் மலரை வெளியிட்டிருக்கிறீர்கள்.

சென்னை-18
8-8-66 அழ. வள்ளியப்பா

கால் நூற்றாண்டு காலம் இந்தியாவுக்கும் பல துறைகளிலும் கல்கி சேவை செய்து பாரத மக்களிடமும், மலாயா, இலங்கை, பர்மா இன்னும் எத்தனையோ நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பாராட்டும், புகழும், நற்பெயரும் சிறப்பும் பெற்று இம்மாசம் 5ஆம் தேதி வெள்ளி விழாக் கொண்டாடிய நற்செய்தி அறிந்துமிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

கல்கியில் எவ்வளவோ அரும் பெரும் விஷயங்கள் வெளியாகின்றன. அவை அனைத்திலும் சிறந்ததான தவயோகி ராஜாஜி அவர்களின் கருத்துக்கள் பாரத மாதாவின் திவ்வியக் குரலேயாகும். இந்தத் தெய்வீகமான குரல் கூடிய சீக்கிரம் எல்லாரையும் தட்டியெழுப்பி, பாரதம் வாழ் நாற்பதுகோடி மக்களுக்கும் விமோசனம் அளிக்கப்போகிறது.

ஐபோ (மலேசியா)
8-8-66 நா. ந. சூடாமணி

கல்கி தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் தாம் ஆகின்றன என்பது நம்ப முடியவில்லை. வெகு காலமாக நம்முடனே வளர்ந்து விட்டதொரு சிறிய பத்திரிகையாகவே மதித்து வந்திருக்கிறோம். தமிழ் வழங்கும் இடங்களிலெல்லாம் இலக்கியம், கலை, அரசியல், பொருளாதாரம், பக்தித் துறை ஆகிய அனைத்திலுமே வழி காட்டியெனத் திகழ்ந்து வந்துள்ளது கல்கி.

வாஷிங்டன்
8-8-66 ஒ. என். நாகரத்னம்

ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் ரேடியோவில் பாப்பா மலர் நிகழ்ச்சியில் கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து நடத்தப்படும் "சுதந்திரப் பயிர்" என்னும் வில்லுப் பாட்டு தேர்தல் நடக்க விருக்கும் வருடத்தில் வைக்கப்படுகிறது. இது பிரசாரத்துக்கல்ல, குழந்தைகளுக்காக என்று அவர்கள் கூறலாம். கடந்த ஞாயிறன்று (7-8-66) "உப்பு சத்தியாக்கிரகம்" பகுதி நடத்தப்பட்டபோது, திரு ராஜாஜி அவர்களின் பெயர் இருட்டடிப்புச் செய்யப்பட்டது. யான் மிகவும் வேதனை அடைந்தேன்.

"வாழியவே பல்லாண்டு காலம்
காங்கிரஸ் மகாசபை வாழியவே!"

என்று பாடல் முழங்கப்படுகிறது.

"ஆட்சியாளர்களுக்கும் கட்சியாளர்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமை கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து கொண்டு வருகிறது" என்று ராஜாஜி அவர்கள் அடிக்கடி எழுப்பிய அபாயச் சங்கின் ஓர் எதிரொலியே இதுவும் ஆகும். காந்திஜி கூறியது போல் சுதந்திரத்துக்குப் பின் காங்கிரஸைக் கலைத்திருந்தால் இதுபோன்ற குழப்பங்களுக்கு இடமில்லை.

சென்னை-17
8-8-66 பா. சு. சுப்பிரமணியம்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

